
# குர்ஆனின் குரல்

جُمادَى الآخِرَة – ١٤٤٦

டிசம்பர் – 2024

₹25/-



999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS



K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

## மாதம் ஒரு மாமறை வசனம்

# நடப்பதனைத்தும் நலவிற்கே!

كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ وَهُوَ كُرْهٌ لَّكُمْ ۖ وَعَسَىٰ أَن تَكْرَهُوا شَيْئًا
وَهُوَ خَيْرٌ لَّكُمْ ۖ وَعَسَىٰ أَن تُحِبُّوا شَيْئًا وَهُوَ شَرٌّ لَّكُمْ ۗ وَاللَّهُ يَعْلَمُ
وَأَنتُمْ لَا تَعْلَمُونَ ﴿٢١٦﴾

“போர் செய்தல், அதுவோ உங்களுக்கு வெறுப்பாக இருக்க, உங்களின் மீது கடமையாக்கப்பட்டுள்ளது; ஒரு பொருளை நீங்கள் வெறுக்கலாம்; (ஆனால்) அது உங்களுக்கு நன்மையாக இருக்கும்; இன்னும் ஒரு பொருளை நீங்கள் விரும்பலாம்; (ஆனால்) அது உங்களுக்குத் தீமையாக இருக்கும்; (இவற்றையெல்லாம்) அல்லாஹ் (நன்கு) அறிவான்; நீங்கள் அறிய மாட்டீர்கள்.” – அல்குர்ஆன் (2 : 216)

---

ஸஹாபாக்கள் இஸ்லாத்தை ஏற்ற ஆரம்ப காலத்தில் காஃபிர்களின் வரம்பு மீறிய துன்புறுத்தலின்போது, அவர்களை எதிர்க்கும் அனுமதி அல்லாஹ்விடமிருந்து கிடைக்கவில்லை. பின்பு இஸ்லாம் வளர்ந்தோங்கி வரும் காலகட்டத்தில் போர் கடமையாக்கப்பட்டது. அப்போது நபித்தோழர்களில் சிலரின் உள்ளத்தில் நாம் நிம்மதியாகத்தானே இருக்கிறோம்; எதற்காக இப்போது போர் புரிய வேண்டும் என பட்டது. ஆனால் மக்காவில் சிக்குண்டு சிரமப்படும முஸ்லிம்களுக்காக நிம்மதியாக இருக்கும் முஸ்லிம்கள் போர் புரிய வேண்டும் என்பதே அல்லாஹ்வின் நோக்கம். அதையே அல்லாஹ் கூறுகிறான்.

“ஒன்றை நீங்கள் வெறுப்பீர்கள். ஆனால் அதில் நலவுகள் உங்களுக்கு உண்டென்பது தெரியாது. அவ்வாறே ஒன்றை நல்லதென கருதுவீர்கள். ஆனால், அதில் உங்களுக்கு கெடுதியிருப்பதை அறிய மாட்டீர்கள். எனவே, நாம் சொல்வதை செயல்படுத்துங்கள். உங்களின் விஷயங்களை எம்மிடம் ஒப்படைத்து விடுங்கள்” என்கிறான்.

நபி மூஸா (அலை) அவர்கள் தாங்கள் வைத்திருந்த கைத்தடியை உயர்வென நம்பி நேசித்தார்கள். ஆனால் அதுவே பாம்பாக உருவெடுத்தபோது விரண்டோடினார்கள். அல்லாஹ் கேட்டான். “மூஸாவே! இவ்வளவு நேரம் எந்த தடியை நம்பினீர்களோ அதுவே உம்மை பயமுறுத்துகிறதே” என்றான். “மூஸாவே! நீர் தூர்ஸினா மலைக்கு வந்தபோது ஊரைக்கவனிக்கும் பொறுப்பை ஹாரூனிடம் ஒப்படைத்தீரே! எம்மிடம் ஒப்படைத்திருந்தால் ஊரில் எவரும் வழிகெட்டிருக்கமாட்டார்களே” என்றான்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி**




## நபிமொழிகள் அறிவீர்! நல்லருள் பெறுவீர்!

# ரியாளுஸ் ஸாலிஹீன்

## நபிமொழி களஞ்சியம்

உலகப் புகழ் பெற்ற மாமேதை இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் சுமார் 750 ஆண்டுகளுக்கு முன் ரியாளுஸ் ஸாலிஹீன் எனும் நபிமொழி கிரந்தத்தை உருவாக்கினார்கள். அதன் பெயருக்கேற்ப நல்லடியார்களுக்கு நல்லருள் வழங்கிடும் பூஞ்சோலையாக அந்நூல் அமைந்துள்ளது.

அழகிய 372 தலைப்புகளில் 1896 ஹதீஸ்களை உள்ளடக்கிய இந்நூலை சென்னை தாருல் உலூம் ஜமாலிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் "பன்னூல் ஆசிரியர்" மவ்லானா **M.அப்துர் ரஹ்மான்** பாஜில் பாகவி M.A., அவர்கள் இன்ப தமிழில் மொழி பெயர்த்துள்ளார்கள். அரபி மூலமும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை எடுத்தியம்பும் அறிவுப் பொக்கிஷம். இந்நூலை நீங்கள் வாங்கிப் படிப்பதோடு, தங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள், அனைவருக்கும் மற்றும் மஸ்ஜிதுகள், மத்ரஸாக்கள், நூலகங்கள் ஆகியவற்றுக்கும் இந்நூல் பிரதிகளை வாங்கி அன்பளிப்பாக வழங்கி வல்ல ரஹ்மானின் அளப்பரிய நற்கூலிகளை பெற்றுக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

**பக்கம் : 1550க்கு மேல் ★ ஹதியா : ரூ.1,200/–**

கட்டணமின்றி கூரியர் மூலம் அனுப்பப்படும்.

வெளியீடு : **மின்னத் பப்ளிஷர்ஸ்,**

**22/1A, தீட்டித் தோட்டம் 5வது தெரு, பெரம்பூர், சென்னை - 600 011.**

தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் :

**9444160271, 8825961067, 9941829933**

**"ரியாலுஸ் ஸாலிஹீன்" நபிமொழிக் களஞ்சியம் நூல் 1ம் பாகம், 2ம் பாகம், 3ம் பாகம், 4ம் பாகம் என தனித்தனியாகவும் எங்களிடம் கிடைக்கும்.**

மேலும், எங்களின் வெளியீடான **"துஆகளின் பொக்கிஷம்"** என்ற 200க்கும் மேற்பட்ட கன்னத்தான துஆகள் இடம் பெற்ற நூலும் எங்களிடம் கிடைக்கும்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# குர்ஆனின் குரல்

குரல் : 67 ★ எதிரொலி – 12
ஜமாதுல் ஆகிர் 1446 டிசம்பர் – 2024

## சமுதாயத்தின் கனிவான கவனத்திற்கு...!

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்ற பாரதீய ஜனதா அரசு, முஸ்லிம்களுக்குப் பல்லாண்டுகளாக வழங்கப்பட்டு வந்த உரிமைகளையும், நலன்களையும் பறிக்கின்ற முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பு உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற ஏழை முஸ்லிம் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மவ்லானா ஆசாத் பவுண்டேஷன் கல்வி உதவி நிதியை – ஸ்காலர்ஷிப்பை திடீரென்று நிறுத்தியது. தற்போது குழந்தைகள் உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்.) என்ற அமைப்பின் பெயரால் மதரஸாக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவிகளையும், மானியங்களையும் நிறுத்துவதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது. ஏழை முஸ்லிம் மாணவர்கள் படிக்கக் கூடாது என்ற ஒரே ஒரு கெட்ட நோக்கத்தைத் தவிர, வேறு எந்த நோக்கங்களும் ஒன்றிய பாரதீய ஜனதா அரசுக்கு இல்லவேயில்லை.

இந்திய நாட்டில், தற்போது இஸ்லாமிய மார்க்கக் கல்வியை மட்டுமே வழங்கி வருகின்ற மக்தப் மதரஸாக்களுக்கும், அரபிக் கல்லூரிகளுக்கும், ஜாமிஆக்களுக்கும் ஒன்றிய, மாநில அரசுகள் நிதியுதவியோ, மானியமோ வழங்கவில்லை. இவையனைத்தும் அந்தந்த ஊர்களிலிருக்கும் மஹல்லா ஜமாஅத்களாலும், பொது நிறுவனங்களாலும், அறக்கட்டளைகளாலும் தொடங்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருகின்றன. முஸ்லிம் செல்வந்தர்களும், வணிகர்களும், பொது மக்களுமே இந்த மதரஸாக்களுக்கும், கல்லூரிகளுக்கும் நிதியுதவி செய்து வருகின்றனர்.

ஆங்கிலேய ஆட்சியின்போது மெக்காலே பரிந்துரைத்த கல்விக் கொள்கையின் அடிப்படையில், நாடு முழுவதும் தொடக்க, நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளும், கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. அப்போது வட மாகாணங்களில் முஸ்லிம் ஜமாஅத்களும், முஸ்லிம் பொது நல அமைப்புகளும் குர்ஆன் மதரஸாக்

களை நடத்தி வந்தன. இந்த மதரஸாக்களில் உலகக் கல்விக்கு அதாவது பொதுக் கல்விக்கு இடமில்லை. இந்நிலை யில், ஆங்கிலேய ஆட்சியாளர்களின் ஆலோசனைகளை ஏற்று, இந்தக் குர்ஆன் மதரஸாக்களில் பொதுப் பாடங்களையும் கற்பிக்க மதரஸாக்களை நடத்தி வந்த நிர்வாகத்தினர் இணக்கம் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் இம்மதரஸாக்கள் மார்க்கக் கல்வியுடன் கணிதம், அறிவியல், வரலாறு, மொழிப்பாடம் ஆகியவற்றையும் கற்பிக்க ஆரம்பித்தன. இவற்றுக்கு அரசு ஓரளவு நிதியுதவியும் செய்து வந்தது. அதாவது உள்கட்டமைப்பு வசதிகளை மதரஸா நிர்வாகத்தினரே ஏற்படுத்திக் கொண்டனர். ஆசிரியர்களுக்கு அரசாங்கம் குறைந்த அளவில் மாத ஊதியம் வழங்கி வந்தது. அன்றைய காலக்கட்டத்தில் ஆங்கிலேய அரசால் தொடங்கப்பட்ட நிறுவனக் கல்விக் கூடங்கள் தவிர, முஸ்லிம்களால் நடத்தப்பட்டு வந்த மதரஸாக்களும் பொதுக் கல்வியை மாணவர்களுக்கு வழங்கி வந்தன.

ஆரம்பக் கட்டத்தில் தொடக்கக் கல்வியை மட்டுமே வழங்கி வந்த இம்மதரஸாக்கள் நாளடைவில் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை மதரஸாக்களாகத் தரம் உயர்த்தப் பட்டன. இந்த மதரஸாக்களை நிர்வாகிக்க வட மாநிலங்களில் மதரஸா வாரியங்கள் அமைக்கப்பட்டன. நாடு விடுதலை பெற்ற பின்னரும் இந்த மதரஸாக்கள் இன்றுவரை தொடர்ந்து செயல்பட்டு கல்விப் பணியாற்றி வருகின்றன.

வடமாநிலங்களில் இயங்கும் மதரஸாக்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு குறைந்த அளவே ஊதியம் வழங்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே ஆசிரியர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்கின்றன.

என்.சி.பி.சி.ஆர். பரிந்துரைகளை ஏற்று மாநில அரசுகள் மதரஸாக்களுக்கு வழங்கும் மானியத்தை நிறுத்தினால், அங்கு பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாது. எனவே, ஒன்று அந்த மதரஸா நிர்வாகங்கள் அவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். முடியாவிட்டால் மதரஸாக்களை மூட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்று தான் ஒன்றிய அரசு நினைக்கிறது. அதற்கு NCPCR போன்ற அமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறது.

மதரஸாக்கள் என்றாலே சங்கிகளுக்கு அலர்ஜிதான். மதரஸாக்களில் நவீனக் கல்வி இல்லை. தரமான கல்வி இல்லை.

அது இல்லை! இது இல்லை! அங்கு தீவிரவாதச் சிந்தனைகள் பரப்பப்படுகின்றன எனத் தொடர்ந்து சங்கிகள் குற்றம்சாட்டி வருகின்றனர். இவற்றில் எள்ளளவும் உண்மையில்லை. மதரஸாக்கள் வெளிப்படையாகத்தான் செயல்படுகின்றன.

இஸ்லாமிய மார்க்கக் கல்வி என்றாலே சங்கிகளுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. சங்கிகள் மதரஸாக்களைக் குறி வைப்பதன் முக்கிய நோக்கமே முஸ்லிம் மாணவர்கள் இஸ்லாமிய மார்க்கக் கல்வி பயின்று விடக் கூடாது என்பதேயாகும். மதரஸாக்களின் கல்வி முறையும் நவீனமயமாகி வருகின்றன. மதரஸாக்களில் தரமான கல்வி இல்லை என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை.

ஒன்றிய பாரதீய ஜனதா அரசு தொடர்ந்து முஸ்லிம்களின் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது. அவர்களின் அடையாளங்களை அழிக்க முயற்சிக்கிறது. குடியுரிமைச் சட்டத் திருத்தம், பொதுசிவில் சட்டம், வக்ஃப் வாரியங்களின் அதிகாரங்களைப் பறிக்கின்ற சட்டம் எனத் தொடர்ந்து வரும் தாக்குதல்களின் தொடர்ச்சியாக மதரஸாக்கள் மீதான ஒன்றிய அரசின் நிலைப்பாட்டையும் நாம் பார்க்க வேண்டும்.

என்.சி.பி.சி.ஆர். அமைப்பு மதரஸாக்களுக்கான அரசு நிதி யுதவி நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து மதரஸாக் களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறுகிறது.

என்.சி.பி.சி.ஆர்.-ன் இந்த நடவடிக்கை ஆர்.எஸ்.எஸ். கோட்பாட்டால் வழி நடத்தப்படுகிறது. இந்த கோட்பாடு சிறுபான்மையினரை தேசத்தின் எதிரிகளாக சித்தரிக்கும் போக்கைக் கொண்டது. குழந்தைகள் உரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றாலும் இதன் நோக்கம் வேறு என்பது தெளிவாகிறது. மதரஸாக்களின் வரலாற்று பாரம்பரியம் மிக மேலானது. இந்தியாவின் கல்வி வரலாற்றில் மதரஸாக்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. துருக்கி சுல்தான்கள் காலம் முதலே மதரஸாக்கள் முக்கிய கல்வி மையங்களாக விளங்கி வந்துள்ளன.

பிரிட்டிஷ் காலணித்துவ கல்விமுறை அறிமுகமாவதற்கு முன் இந்தியாவில் மதரஸாக்கள் சமூகத்தின் கல்வித் தேவையை நிறைவேற்றி வந்துள்ளன. சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி பெற்றுள்ளனர்.

இந்திய அரசியலமைப்பின் 25ஆவது பிரிவின்படி மதச் சுதந்திரம் என்பது அடிப்படை உரிமை. மதரஸாக்கள் தேசிய

பாதுகாப்புக்கு உட்பட்டு, சட்டத்திற்கு உட்பட்டு செயல்பட முழு உரிமை உண்டு. ஒரு மதச்சார்பற்ற நாட்டில் அனைத்து மதக் கல்வி நிறுவனங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். "அனைத்து மதங்களும் சமம்" என்ற கோட்பாட்டை கடைபிடிக்க வேண்டும். என்.சி.பி.சி.ஆர். தனது தற்போதைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். இந்தியாவின் வளர்ச்சிக்கு அனைத்து மதத்தினரின் பங்களிப்பும் அவசியம். மதச்சார்பற்ற மதிப்புகளை நிலைநாட்டுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். முஸ்லிம்களை அந்நியப்படுத்தும் செயல்களைத் தவிர்த்து, அரசியலமைப்பு மதிப்புகளை உயர்த்திப் பிடிக்க வேண்டும். மதரஸாக்கள் மீதான இந்த நடவடிக்கை வெறும் கல்வி சார்ந்த விவகாரம் மட்டுமல்ல. இது இந்தியாவின் பன்முகத்தன்மை, சமூக நீதி மற்றும் அரசியலமைப்பு மதிப்புகள் தொடர்பான முக்கியமான விவகாரமாகும்.

தற்போது இந்தியாவிலுள்ள மதரஸாக்களை மொத்தமாக அழித்துவிட வேண்டும் என்று சங்கிக் கூட்டம் துடியாய் துடித்துக் கொண்டிருக்கிறது.

நம் வருங்காலச் சமுதாயம் சமுதாய உணர்வோடு, மார்க்கப்பற்றோடு வளர வேண்டும் என்றால், ஒவ்வொரு மஹல்லாவிலும் மக்தபு மதரஸாவை பலப்படுத்திட வேண்டும். இதற்கு மஹல்லா நிர்வாகிகளும், அப்பள்ளி இமாமும் தனிக்கவனம் செலுத்திட வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு எப்படி கவனத்துடன், அக்கறையுடன் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை அனுப்பி வைக்கின்றார்களோ அதற்கு மேல் கவனமும் அக்கறையும் கொண்டு மக்தபு மதரஸாவிற்கு தம் பிள்ளைகளை பெற்றோர்கள் அனுப்பி வைத்திட வேண்டும்.

தற்போது பல்வேறு பகுதிகளில் பெரும்பாலான அரபு கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை இன்றி அரபு கல்லூரிகள் தொடர்ந்து மூடப்பட்டு வருகின்றன. மார்க்கக் கல்வியின் உயர் சிறப்பு பற்றி நம்மில் பல பேருக்கு தெரியவில்லை.

ஆலிம்கள் நம் சமுதாயத்தின் அடையாளங்கள் அல்லவா?

இச்சமுதாயம் தலைநிமிர்ந்து வீறுநடை போட, ஈமானோடு வாழ டாக்டர்களை விட - இன்ஜினியர்களை விட - வக்கீல்களை விட ஆலிம்கள்தான் அதிகமதிகம் தேவை என்பதை நம் சமுதாயம் எப்போதுதான் உணரப்போகிறதோ?

அல்லாஹ் எந்த பொருளை யும் உருவாக்குவதற்கு துளி யளவும் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்தும் அல்லாஹ் மனிதனை படைக்கும்போது ஓரிரு விநாடிகளில் படைக்க வில்லை. வானங்களையும், பூமி களையும் கூட ஆறு நாட்களில் படைத்ததாக அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான். அதற்கான காரணம் என்ன?

**பணங்காட்டூரிலிருந்து யூசுஃப்**

அனைத்தும் மனிதர்களின் நலனுக்காக! அதாவது, எந்த உற்பத்தியையும், செயல் பாட்டையும் தனக்கு தெரிந்த வகையில் ஆலோசனைகளின்றி, யோசனைகள் ஏதுமின்றி அவசர அவசரமாக செய்வது கூடாது. மாறாக, தனக்கு தெரிந்த செயல் பாடாகவே இருந்தாலும் அதை நன்கு யோசித்து, அனுபவசாலி களிடம் ஆலோசனைகள் பெற்று, பொறுமையை கடைபிடித்து ஒன்றுக்கு பலமுறைகள் யோசித்து செயல்படுத்த வேண் டும் என்று மனிதனுக்கு பாடம் கற்றுக் கொடுப்பதற்காகத்தான் அல்லாஹ் ஹள்ரத் நபி ஆதம் (அலை) அவர்களை தனது “குன்” என்ற வார்த்தையை கொண்டு படைக்கவில்லை. மாறாக, அதன் மூலப்பொருள்களை எடுப்பதற்காக தன் வானவர் களை எல்லாத் திசைகளிலும் அனுப்பி மண்களை சேகரித்து கொஞ்சம் கொஞ்சமாக அவர் களின் உடலை வடிவமைத்து, அவர்களுக்கு உயிர் கொடுத்து உத்தம மனிதராக அவரை உருவெடுக்கச் செய்தான்.

இவ்வாறே, வானங்களையும், பூமியையும் அவன் நினைத் திருந்தால் “குன்” என்ற ஒரு வார்த்தையை கொண்டு உரு வாக்கியிருக்க முடியும். ஆனால், மனிதர்களுக்கு பாடம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதற் காக ஆறு நாட்களில் அவற்றைப் படைத்து, பின்பு அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காகவும் சில நேரங்களை எடுத்துக் கொண்டான். எனவே, நம் முடைய எந்த செயல்களிலும் அவசரப்படக் கூடாது. ஒவ் வொன்றிலும் மிகுந்த முன் யோசனை அவசியம் என்பதை ஒவ்வொருவரும் மனதில் ஆழப் பதிய வைக்க வேண்டும்.

நம் நாட்டில் சுதந்திரப் போராட்டக்களத்தில் முஸ்லிம் கள் பணியாற்றியது பற்றி

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

வந்திருக்கக்கூடிய நூல்களை அறிய விரும்புகிறேன்.

**காரைக்குடியிலிருந்து**
**எம்.கமாலுத்தீன்**

✍ முஸ்லிம்கள் இந்திய சுதந்திரத்திற்காக மற்ற சமுதாயத்தவர்களை விடவும் மிக மிக அதிகமாக பங்காற்றியுள்ளார்கள் என்ற விஷயத்தை நிறைய பேராசிரியர்கள் நூல் வடிவில் நமக்கு கொடுத்திருந் தாலும், சமீப காலத்தில் மிகக் கடுமையாக ஆராய்ச்சி செய்து நமக்கு சுமார் 1072 பக்கங்கள் அளவில் விலைமதிப்புள்ள "இந்திய சுதந்திரப் பெரும் போரில் இஸ்லாமியர்கள்" எனும் ஒருநூலைவழங்கியவர்நெல்லை பாளையங்கோட்டை "தாரிகுல் மில்லத்" வரலாற்றுப் பேரறிஞர் செ.திவான் அவர்களாவார்கள்.

நம் சந்ததிகளுக்கு இந்த நூலை அறிமுகம் செய்து அவர்களை படிக்க வைத்து, நம் சமுதாயத்தின் சமீப கால வரலாறுகளை கியாமத் நாள் வரைக்கும் கொண்டு செல்வது நம் ஒவ்வொருவரின் மீதும் கட்டாயக் கடமை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், எதிரிகளின் சூழ்ச்சிகள் வரலாறுகளை மாற்றியமைப்பதில் மிகப் பெரிய திட்டத்தோடு செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. இது போன்ற நூல்களைக் கொண்டு நாமும் அறிவு பெறுவதோடு, நம் சந்ததிகளுக்கும் வரலாற்றின் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

☛ மரணித்தபிறகு கப்ரில் உணவுகள் கிடைக்குமா?

**தஞ்சாவூரிலிருந்து**
**சல்மா**

✍ அவசியம் கிடைக்கும். அதற்கான பணத்தை உலகத்திலேயே செலுத்தி டோக்கனைப் பெற்றுக் கொண்டால் அவர்களுக்கு நிச்சயம் கப்ரிலே சுவனத்தின் உயர்ந்த ரிஜ்க்குகள் வழங்கப் படும். சரியான டோக்கன் இல்லாதவர்களுக்கு அங்கு எந்த கவனிப்பும் இருக்காது.

☛ ஃபஜ்ர் தொழுகைக்குபின்பு ஹதீஸ் வாசித்துக் கொண்டிருக்கும்போது அந்த நூலில் "குர்ஆனை மனனம் செய்த மனிதன், அதை மறந்துவிட்டால் நாளை மறுமையில் சீழ், இரத்தம் வடிந்த நிலையில் எழுப்பப் படுவான்" என்று வந்துள்ளது. இது உண்மை தானா? நூற்றுக்கணக்கான அமல்கள் செய்திருந்தும் அவை எந்த பலனையும் தராதா? விளக்கம் தேவை.

**பெரிய வடகரையிலிருந்து**
**ஹாஜா முஹம்மது**

✍ தாங்கள் குறிப்பிட்ட ஹதீஸ் அபூதாவூது என்ற ஹதீஸ் கிரந்தத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. அல்குர்ஆன் என்பது மனிதனுக்கு வழங்கப் பட்ட மிகப் பெரிய நிஃமத்தாகும். ஒவ்வொரு முஸ்லிமும் அதை கற்றுக் கொள்வது, அதை ஓதுவது, அதற்கு மரியாதை

செய்வது, அதன்படி அமல் செய்வது மிக மிக கட்டாயமான விஷயங்களில் ஒன்றாகும். அது இல்லாமல் முஃமினுடைய வாழ்க்கை எந்த வகையிலும் சிறப்பாக அமையாது.

யார் அந்த குர்ஆனை மனனம் செய்யும் வாய்ப்பை வழங்கப் படுகிறாரோ அவர் இம்மையிலும், மறுமையிலும் பெரும் பாக்கிய சாலியாவார். ஆனால், மனனம் செய்தபின்பு அவர் அதை மறந்து விட்டால் அவர் துர்பாக்கியவானாகி விடுவார். மறுமையில் மிக மிக கைசேதப்பட்டவராக எழுப்பப்படுவார்.

முழு குர்ஆன் மட்டுமின்றி ஒரு மனிதன், ஏதாவது ஒரு சூராவையோ, அல்லது ஒரு சில வசனங்களையோ மனனம் செய்திருந்தாலும் அதையும் கூட அவன் தனக்கு முடியும் காலமெல்லாம் தொழுகையிலோ அல்லது மற்ற நேரங்களிலோ ஓதிக் கொண்டேயிருக்க வேண்டும். "குர்ஆனை மனனம் செய்து விட்டு, ஓதா விட்டால் அது மிகச் சீக்கிரமாக, அவிழ்த்துவிடப்பட்ட ஒட்டகத்தை விட வேகமாக அவனின் மனதிலிருந்து ஓடி விடும்" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். "இப்படி மறந்தவரைவிட பெரும் பாவம் செய்தவரை நான் பார்க்கவில்லை" என்றும் நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறே, மனனம் செய்வது மட்டுமின்றி மனிதன் சாதாரணமாக குர்ஆனை பார்த்து ஓத கற்றுக் கொண்டு, பின்பு, அதை மறந்துவிட்டாலும் அவனுக்கு கடுமையான எச்சரிக்கைகள் சொல்லப்பட்டுள்ளன.

எனவே, குர்ஆன் ஓத தெரிவதும் கட்டாயம். அதை தெரிந்த பின்பு அதை பாதுகாப்பதும் கட்டாயம். **கவனம்! கவனம்! மு:மின்களே கவனம்!**

எனக்குத் தெரிந்த ஒருவர், "தர்ஹாவுக்குச் சென்று இறை நேசர்களை ஜியாரத் செய்வது ஷிர்க்" என்று கூறுகிறார். மார்க்கம் என்ன சொல்கிறது?

**சேலத்திலிருந்து**
**ஜி.இல்யாஸ்**

ஷரீஅத் ரீதியாக அடக்கம் செய்யப்பட்டிருக்கக்கூடிய கப்ராளிகளை ஜியாரத் செய்வது மார்க்கத்தில் வலியுறுத்தப் பட்ட செயலாகும். ஜியாரத் செய்வதால் மனிதனுக்கு மௌத்துடைய சிந்தனையும், மறுமையுடைய சிந்தனையும் அதிகரிக்கின்றன. மேலும், அங்கு செல்லும்போதுதான் அவனுக்கு தன் முன்னோர்களைப் பற்றியான சிந்தனையும் புதுப்பிக்கப் படுகிறது. பொதுவாகவே, நம் முன்னோர்களான பெற்றோர்கள், உறவினர்கள், நம் குடும்பத்தின் மூத்தவர்கள், நமது உஸ்தாதுமார்கள், உலகத்தில் வலிமார்களாக வாழ்ந்து மரணித்தவர்

கள் போன்ற யாவரையும் நினைவு கூர்வதும், அவர்களுக்காக துஆ செய்வதும் இன்ஷா அல்லாஹ் நம் வாழ்வில் பெரிய பரக்கத்து கள் ஏற்படுவதற்கு காரணங் களாகும். சில இடங்களில் அடங்கியிருப்பவர்கள் பொது கப்ருஸ்தானில் இருக்கலாம். சில இடங்களில் தனித்தனி கப்ர்களாக இருக்கலாம். எங்கு சென்று ஜியாரத் செய்தாலும் அவசியம் இவருக்கு அந்த ஜியாரத்துடைய நன்மை கிடைக்கும்.

எனினும், ஜியாரத்தை மட்டுமே மார்க்கம் தெளிவாக அனுமதிக் கிறது. அதை தவிர்த்து தற்காலத் தில் நடைபெறக்கூடிய ஷரீ அத்திற்கு அப்பாற்பட்ட பித்அத்துகளுடைய காரியங் களுக்கு மார்க்கம் அறவே அனுமதி கொடுக்கவில்லை. அதிலும் குறிப்பாக, அல்லாஹ்வுக்கு இணை வைக்கக்கூடிய **ஸஜ்தா** போன்ற காரியங்களை மார்க்கம் ஹராம் என்றும், அது மனிதனை குஃப்ரின் பக்கம் கொண்டு போய் சேர்த்துவிடும் என்றும் நம் உலமாகள் எச்சரித்துள்ளார்கள்.

☛ சில உறவினர்கள் எப்பொழு தும் நம்மை பொறாமை கண் களோடு பார்க்கிறார்கள். அவர் களின் பார்வையால் நமக்கு கண் திருஷ்டிகள் ஏற்பட்டு சில சமயங்களில் உடல் ரீதியா கவும், மன ரீதியாகவும் மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. அதிலிருந்து விடுபடுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

**குன்னத்தூரிலிருந்து**
**எம்.எம்.முஹம்மது அமானுல்லாஹ்**

✍ முடிந்தவரை நமது காரியங் களை அப்படிப்பட்டவர்களின் பார்வைகளில் படாமல் பாது காத்துக் கொள்ள வேண்டும். யாருடைய புகழுக்காகவும், செயலுக்காகவும் நமது வணக்க வழிபாடுகளை எப்போதும் அமைத்துக் கொள்ளக் கூடாது. நமது சிந்தனையாவும் அல்லாஹ் வின் பக்கம் மட்டுமே இருக்க வேண்டும். யாருடைய சந்தோஷ மாவது நமது சிந்தனைக்குள் வந்துவிடுமானால், நமது வணக்க வழிபாடுகளும் கெட்டுப் போய் விடுவதோடு, அவர்களின் பொறாமை கண்களுக்கும் நாம் இரையாகி, நாம் செய்து கொண்டிருந்த சிறு சிறு நல்ல காரியங்களும் நம்மால் செய்ய முடியாமல் போய் விடலாம்.

இவ்வாறே, நம்மிடம் இருக்கின்ற அல்லாஹ்வினால் வழங்கப் பட்ட சொத்துகள், சுகங்கள் இன்னும் பிற நிஃமத்துகள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டி யவையாகும். எனவே, ஆடம்பர மில்லாமல் வாழ்ந்தாலே பொறாமை கண்கள் நம்மை விட்டும் வேறு திசைகளின் பக்கமாக திரும்பிவிடும். அதையும் மீறி, நம்மின் மீது விழக்கூடிய தீய பார்வைகளை நாம் தவிர்க்க நாடினால்,

# கேட்போம்! அருள் பெறுவோம்!!

عَنْ عَبْدِ اللهِ قَالَ: قَالَ رَسُولُ اللهِ ﷺ : سَلُوا اللهَ مِنْ فَضْلِهِ فَإِنَّ اللهَ

يُحِبُّ أَنْ يُسْأَلَ وَأَفْضَلُ الْعِبَادَةِ انْتِظَارُ الْفَرَجِ.رواه الترمذي

“அல்லாஹ்விடம் அவனது பேருருளைக் கேளுங்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் தன்னிடம் கேட்கப்படுவதையே விரும்புகிறான். (வசதி வாய்ப்பை கேட்ட பின்பு) அவ்வசதி வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பது வணக்கங்களில் மிகச் சிறந்தது” என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹள்ரத் அப்துல்லாஹ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : திர்மிதீ)

---

அல்லாஹ்வே! குர்ஆனின் குரலின் பரக்கத்தால் ஆயிரமாயிரம் குடும்பங்கள் இம்மை – மறுமையில் வசதி வாய்ப்புகளைப் பெற்றன. மீண்டும் அதன் பரக்கத்தால் அதில் சொல்லப்படுகின்ற ஹதீஸ்களின் பரக்கத்தால் குர்ஆனின் குரலையும், அதன் வாசகர்களையும் முழுமையான வசதிவாய்ப்புகளை உடையவர்களாக ஆக்குவாயாக!

---

செய்யது சகோதரர்கள்

நாகூர்.

"லி ஈலாஃபி குறைஷி" என்ற சூராவை அடிக்கடி ஓதி, நமது பொருள்களின் மீது ஊதிக் கொண்டு அல்லாஹ்விடம் துஆ செய்து முழுமையான பாதுகாப்பை அவனிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

சென்ற மாத பதில்கள் பகுதியில் "நான் கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு, காலி மனை ஒன்றை வாங்கி வைத்துள்ளேன். பிற்காலத்தில் அதை விற்றால் அது நமக்கு ஏதாவது ஒரு வகை யில் உதவியாக இருக்கும் என்று நினைத்தேன். மேலும், நான் சொந்த வீட்டிலேயே வசித்து வருகிறேன். இந்த இரண்டிற்கும் சேர்த்து என் மீது ஏதாவது ஜகாத் கடமையாகுமா?" என்ற கேள்விக்கு "அவ்விரண்டின் மீதும் ஜகாத் கடமையில்லை" என்று தாங்கள் பொதுவாக கூறியிருந்ததில் கொஞ்சம் திருத்தம் தேவைப்படுவதாக நினைக்கிறேன்.

**ஈரோட்டிலிருந்து**
**ஷாஹுல் ஹமீது**

ஒரு மனிதன் தான் குடியிருக்கக் கூடிய வீட்டிற்கு ஜகாத் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அந்த வீடு எவ்வளவு பெரிய வீடாக இருந்தாலும் சரியே! ஆனால், காலி இடமாக வாங்கி போடும்போது, இதை பின்னால் விற்று பணம் பார்த்துக் கொள்கிறேன் என்று நிய்யத் செய்து வாங்கினால் அந்த நிலத்தின்மீது ஜகாத் கடமையாகும். சில நேரங்களில் கையில் பணத்தை வைத்திருக்க வேண்டாம் என்று எண்ணி நிலத்தை வாங்கி போடுபவர்கள் உண்டு. அல்லது நம் பிள்ளை களுக்கு உதவும் என்ற வகையில் வாங்குபவர்களும் உண்டு அல்லது இந்த இடத்தை வாங்கினால்தான் அதையொட்டி யுள்ள நமது வீட்டிற்கு அல்லது நமது கடைகளுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று கருதி, வாங்குபவர்களும் உண்டு அல்லது இன்று வாங்கி வைத்துக் கொண்டால் நாளை சிரமப்படக்கூடிய யாருக்காவது தானமாக கொடுத்து விடலாம் அல்லது அல்லாஹ் நாடினால் ஒரு பள்ளிவாசல் அல்லது மதரஸாவுக்காக தர்மம் செய்து விடலாம் என்ற சிந்தனையில் வாங்கிபோடுபவர்களும் உண்டு. இந்த எல்லா சிந்தனைகளிலும் "விற்க வேண்டும்" என்ற நிய்யத் இல்லாததின் காரணமாக இப்படி வாங்கி போட்ட நிலங்களின் மீது எந்த வகையிலும் ஜகாத் கடமையாகாது.

எனவே, "விற்று இலாபம் பார்க்கத்தான் வாங்குகிறோம்" என்ற நிய்யத் இருந்தால் மட்டுமே அந்த நிலத்தின் மீது ஜகாத் கடமையாகும். இதுவே மேற்படி கேள்வியின் விரிவான விளக்கமாகும்.

வாரிசுகளில் ஒருவர், தந்தை அல்லது தாய்க்கு முன்னால்

இறந்துவிட்டால், அவருக்கு அந்த தந்தை அல்லது தாயின் சொத்தில் எந்த பங்கும் இல்லை என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்கான காரணம் என்ன?

**திருச்சியிலிருந்து**
**ஏ.ஆர்.முஹம்மது இஸ்மாயீல்**

✍ அப்படி இறந்துவிட்டவருக்கும் பங்கு கொடுக்க ஆரம்பித்து விட்டால் சொத்துகளை பிரிப்பதில் பெரிய குழப்பங்கள் ஏற்பட்டு விடும். இறந்துபோய் விட்டவர்களின் வாரிசுதாரர்கள் ஒருவர்பின் ஒருவராக வந்து, வரிசையில் நிற்க ஆரம்பித்து விடுவார்கள். பின்பு குழப்பங்களும், பிரச்சனைகளும், சண்டை சச்சரவுகளும் மிக மிக அதிகமாகி விடும் என்பதால் தான் மார்க்கம் "உயிரோடு இருப்பவர்களுக்கு மட்டுமே சொத்தில் பங்கு கிடைக்கும்" என்று வரையறை செய்துள்ளது.

எனினும், உறவினர்களில் ஏழ்மையானவர்கள், அநாதையானவர்கள், தேவையுள்ளவர்கள் யாராவது நம் சொத்துகளிலிருந்து கொஞ்சத்தை கேட்டு வந்து நின்றால் அவர்களுக்கு முடிந்த வரை உதவிகள் செய்வது நல்ல செயலாகும் என்றும் மார்க்கம் நம்மை வலியுறுத்துகிறது. இது பற்றி அல்லாஹ் தன் திருமறை (4 : 8, 9)யில், "பாகப்பிரிவினை செய்யும்போது (சட்டப்படி பாகஸ்தரல்லாத) உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்தால், அதிலிருந்து அவர்களுக்கும் (பாகப்பிரிவினைக்கு முன் ஏதேனும்) கொடுங்கள்; இன்னும் அவர்களிடம் கனிவான (பரிவான) வார்த்தையைக் கொண்டே பேசுங்கள்:

தமக்குப்பின் பலஹீனமான சந்ததிகளை விட்டுச் சென்றால் அவர்களை(க் குறித்து) பயப்படுகிறவர்கள் - (அநாதைகள், சிறுவர்கள் பங்கீடு விஷயத்தில்) பயந்து கொள்ளவும்; ஆகவே, அல்லாஹ்வை அவர்கள் அஞ்சி மிருதுவான வார்த்தையைக் கூறவும்" என்று தெளிவான முறையில் வழிகாட்டுகிறான். கவனிப்போம்! செயல்படுவோம்! இன்ஷா அல்லாஹ்!

☛ அல்குர்ஆனும், அதற்கு முந்தைய வேதங்களும் ரமளான் மாதத்தில் பல்வேறு நாட்களில் அருளப்பட்டவை என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், சிலர் சில வேதங்கள் முஹர்ரம் மாதத்திலும் அருளப்பட்டதாக கூறுகிறார்கள். விபரம் தேவை.

**சேந்தமங்கலத்திலிருந்து**
**பா. ஹாஜி முஹம்மது**

✍ பிரபலமான நான்கு வேதங்களும் ரமளான் மாத பிறைகளிலேயே அருளப்பட்டவை என்றுதான் வரலாற்று நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முஹர்ரம் மாதத்தில் அருளப்பட்டதாக ஹதீஸ் நூல்களிலோ வரலாற்று நூல்களிலோ நாம் பார்க்கவில்லை.

☛ நண்பன் ஒருவன், ரமளான் காலங்களில் தனது ஸஹர் உணவை தனது வீட்டில் சாப்பிடாமல் பள்ளிவாசலில் நடக்கும் பொதுவான உணவு விரிப்பில் சென்று சாப்பிடு கிறான். அது ஆகுமானதுதானா?

**வேடசந்தூரிலிருந்து**
**ஷேக் முஹம்மது**

✍ அப்படி சாப்பிடுவதால் நோன்பு நிறைவேறி விடும் என்றாலும், தனது சொந்த உணவைக் கொண்டு, தனது மனைவி மக்களோடு சேர்ந்து, ஸஹர் செய்வதும், இஃப்தார் செய்வதும் பெரும் நன்மை என்பதை முதலில் அவர் புரிந்து கொள்ள வேண்டும். நமக்கென்று உணவு இருக்க, பிறர் உணவில் சென்று சாப்பிட வேண்டும் என்று நமக்கு என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது. இப்படி பழகிவிட்டால், பிறகு நம் உணவைவிட அடுத்தவரின் உணவுதான் நமக்கு ருசிக்க ஆரம்பித்துவிடும். இதுவும் அப்படியே பழகிவிட்டால் நம்மை பின்பற்றி நம் சந்ததிகளும் ஊர் சோற்றுக்கு ஆசைப்பட ஆரம்பித்து விடுவார்கள். இதுவும் தொடர்ந் தால் அல்லாஹ் நமக்கு கொடுத்தி ருக்கின்ற உணவு உடைய நிஃமத்துகள் மிக சீக்கிரமாக பறிக்கப்பட்டு விடலாம். அல்லாஹ் பாதுகாக்க வேண்டும்.

☛ ஷஹீது என்றால் யார்? நாமும் அந்த அந்தஸ்தை அடைய முடியுமா? அதன் சிறப்புகள் என்ன?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

✍ அல்லாஹ்வின் பாதையில் எதிரியால் கொல்லப்பட்டவர் உண்மையான ஷஹீதாவார். அவர் இறந்ததற்கு பின்பு அவரை குளிப்பாட்டாமல் அப்படியே இரத்தக் கறைகளோடு அடக்கம் செய்து விட வேண்டும்.

"மேலும், போருக்குச் செல்லக் கூடிய வாய்ப்பில்லாமல் தனக் கும் ஷஹீதுடைய அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர் உறுதியான எண்ணத்தோடு, அல்லாஹ் வின் மீது நம்பிக்கை வைத்து துஆ செய்து வந்தால், அவரை அல்லாஹ் ஷஹீதுகளுடைய பட்டியலில் சேர்த்துவிடுவான். அவர் இயற்கையாகவே தன் வீட்டிலேயே மரணித்தாலும் அவ ருக்கு அந்த ஷஹீதுடைய நன்மை அவசியம் கிடைத்து விடும்" என்று நபி (ஸல்) அவர் கள் அருளியுள்ளார்கள். நீரிலே மூழ்கடிக்கப்பட்டு இறந்தவரும், நெருப்பிலே கருகி இறந்து போனவரும், கட்டிட இடிபாடு களுக்கிடையே சிக்கி இறந்த வரும், புற்று நோயினால் பாதிக்கப்பட்டு இறந்துபோன வரும், வயிற்று நோயினால் தொடர்ந்து அவதிப்பட்டு இறந்த வரும் ஷஹீதுகளுடைய பட்டி யலில் இறந்து போனதாக நபி

# மார்க்கக் கலாசாலையின் கட்டடம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா அ.முஹம்மது அஷ்ரஃப் அலி ஹள்ரத் (ரஹ்) அவர்களால் நிறுவப்பட்ட **"அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி** தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முபமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

**Name: AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST**
**INDIAN BANK : A/c. No. 429079510**
**BRANCH : Madurai KARUPPAYURANI**
**IFSC Code : IDIB000K136**

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

## J.M.S.ARABIC COLLEGE

**Jaamiyaa Nagar, Sivagangai Highway Road, MADURAI - 625020.**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 94430 66539 | 97900 64365 | 99948 57786 |

(ஸல்) அவர்கள் அருளியுள்ளார் கள். அல்லாஹ்வின் பாதையில் எதிரியால் வெட்டி வீழ்த்தப் பட்டவர், அவரின் முதல் சொட்டு இரத்தம் கீழே விழும்போதே அவரின் எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. சுவனத்தில் அவருடைய இருப் பிடம் அவரின் கண்களுக்கு காட்டப்படுகிறது. கியாமத் நாளன்று அவரின் தலையில் கிரீடம் அணிவிக்கப்படும். கப்ரின் வேதனை யிலிருந்து பாதுகாக்கப்படுவார். ஹூருல் ஈன்களில் 72 பேர்கள் அந்த ஷஹீதுக்கு வழங்கப்படு வார்கள். மறுமையின் திடுக்கங் களிலிருந்து நிம்மதி பெற்றி ருப்பார். தன் குடும்பத்திலுள்ள 70 நபர்களுக்கு சிபாரிசு செய்யும் உரிமையை பெறுவார்.

☛ எனது பேரனுக்கு சுமார் 12 வயதாகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவன், பள்ளிக் கூடத்திற்குச் செல்ல மறுக்கிறான். என்ன செய்வது?

**ஈரோட்டிலிருந்து**
**அஜீமா பீவி**

✍ அறிவுரை சொல்லிப் பாருங் கள். முழுமையாக பள்ளியை வெறுக்கக் கூடிய சிந்தனை அவனிடத்தில் நுழைவதற்கு என்ன காரணம் என்பதை அவனது வயதை ஒத்திருக்கக் கூடிய பிள்ளைகளைக் கொண்டு பேச வைப்பதின் மூலம் அறிய முற்படுங்கள். அதன் பிறகு, அந்த பேரனின் மனதிலிருந்து வெளிப்படக் கூடிய காரணத்தை சரி செய்ய முயற்சியுங்கள். மேற்படி முயற்சி களில் எதுவும் சரி வரவில்லை யென்றால் அவருக்கு தோது வான அருகில் இருக்கக்கூடிய ஏதாவது ஒரு மதரஸாவில் கொண்டு போய் மார்க்கக் கல்விக் காக விட்டுவிடுங்கள். இன்ஷா அல்லாஹ் விரைவில் அதற்கான சிறந்த வழிகள் பிறக்கும்.

அல்குர்ஆனின் ஆயத்துகள் அவனது காதில் விழுந்து, உள்ளத்தினுள் இறங்க ஆரம்பித்துவிட்டால், அவனது எல்லா வழிகளும் இன்ஷா அல்லாஹ் கொஞ்சம் கொஞ்ச மாக திறக்க ஆரம்பித்துவிடும்.

☛ தலைவலி நீங்குவதற்கு என்ன ஓத வேண்டும்?

**காரமடையிலிருந்து**
**எம்.முஹம்மது ஜாவீத்**

✍ ஃபர்ளான தொழுகை முடித்து ஸலாம் கொடுத்ததும், நெற்றியின் மீது கை வைத்து, ஒரு முறை ஸலவாத் சொல்லி விட்டு.

اَللّٰهُمَّ اَذْهِبْ عَنِّي الْهَمَّ
وَالْحَزَنَ وَالْاَذَي

“அல்லாஹும்ம அத்ஹிபு அன்னில் ஹம்ம வல் ஹஸன வல் அதா” என்ற துஆவை ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் விரைவில் தலைவலியிலி ருந்து விடுதலை பெறலாம்.

# சிரவணக்கம் புரிவோம்!

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி

وَأُلْقِيَ السَّحَرَةُ سَاجِدِينَ قَالُوا آمَنَّا بِرَبِّ الْعَالَمِينَ

**"அந்தச் சூனியக்காரர்கள் சிரம் பணிந்து, "அனைத்துலகங்களின் இறைவன்மீது (அல்லாஹ்வின் மீது) நாங்கள் நம்பிக்கை (ஈமான்) கொண்டுவிட்டோம்" என்று கூறினார்கள்."**

- அல்குர்ஆன் (7 : 120, 121)

இறைவழிபாட்டில் தொழுகையே அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதாகும். அந்தத் தொழுகையில் ஸஜ்தாவின் நிலைதான் அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமானதாகும்.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஓர் அடியான் தன்னுடைய இறைவனுடன் அதிகம் நெருக்கமாக இருக்கும் நிலை, சிரவணக்கம் செய்யும் நிலைதான். எனவே, அப்போது அதிகமாகப் பிரார்த்தனை செய்யுங்கள்"**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் - 832)

## ஏழு உறுப்புகள் தலையில் பட வேண்டும்

ஹள்ரத் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஓர் அடியார் சிரவணக்கம் (ஸஜ்தா) செய்யும்போது அவருடன் ஏழு உறுப்புகள் சிர வணக்கம் செய்கின்றன; அவருடைய முகம், இரு உள்ளங்கைகள், இரு முழங்கால்கள், இரு பாதங்(களின் நுனி)கள் ஆகியவையே அவை" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்.

(நூல் : முஸ்லிம் - 848, திர்மிதீ - 252)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஏழு உறுப்புகள் தரையில் படுமாறு சிர வணக்கம் (ஸஜ்தா) செய்யும்படி அருமை நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. (சிரவணக்கத்தின் போது தரையில் படாதவாறு) தமது தலைமுடி, ஆடை ஆகியவற்றைப் பிடித்துக் கொள்ள வேண்டாம் என்று அவர்கள் தடை விதிக்கப்பட்டார்கள்."

(நூல் : திர்மிதீ - 253, முஸ்னத் அஹ்மத் - 1826)

நெற்றியை தரையில் வைக் கையில், முழுவதுமாக வைக்க வேண்டும். அத்துடன் மூக்கு தரையில் படுமாறும் வைக்க வேண்டும்.

நெற்றியின் சில பகுதியை வைத்தால்கூடப் போதும். ஆனால் நெற்றியை அறவே தரையில் வைக்காமல் மூக்கை மட்டும் வைத்தால் ஸஜ்தா நிறைவேறாது. மூக்கை தரை யில் வைக்காமல் நெற்றியை மட்டும் தரையில் வைத்தாலே ஸஜ்தா நிறைவேறிவிடும் என்பது அறிஞர்களில் சிலரது கருத்தாகும். வேறு சிலர், நெற்றி யுடன் மூக்கையும் சேர்த்தே வைக்க வேண்டும் என்று கூறு கின்றனர்.

இரு உள்ளங்கைகளைத் தரையில் வைக்கும்போது உள்ளங்கைகளை தரையில் பரப்பாமலும் விலாப் புறங்களு டன் ஒட்டாமலும் விலக்கி வைக்க வேண்டும். தொடை களுடன் வயிறு ஒட்டாமல் அகற்றி வைத்திட வேண்டும்.

தரைக்கும் உடலுக்கும் நடுவே இடைவெளி இருக்க வேண்டும். நாய் அமரும்போது முன் கைகளைத் தரையில் பரப்பி வைப்பதைப் போன்று பரப்பக் கூடாது; ஒரேயடியாகக் கைகளை விலாவோடு சேர்த்து ஒட்டி வைத்துக் கொள்ளவும் கூடாது. நடுநிலையாகக் கையாள வேண்டும்.

அடுத்து, தொழும்போது ஆடையோ தலைமுடியோ கீழே பட்டுவிடக் கூடாது என் பதற்காக அவற்றைக் கையால் பிடித்துக் கொள்வது தடை செய்யப்பட்டதாகும். அவ்வாறே, நீண்ட தலைமுடி கீழே பட்டு விடக் கூடாது என் பதற்காகத் தொழுகையிலோ தொழுகைக்கு முன்போ (ஆண்கள்) கொண்டை போட்டுக் கொள் வதற்கும் தடை வந்துள்ளது. ஏனெனில் ஸஜ்தா செய்யும் போது ஆடையும், தலைமுடியும் கூட தரையில் படுவதே பணி வுக்கும், அடக்கத்திற்கும் உகந்த தாகும். (நூல் : ஃபத்ஹுல் முல்ஹிம், மின்ஹாஜ், துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

## நன்றிக்கடனாக

ஹள்ரத் அபூபக்ரா (ரளி) அவர்கள் கூறியதாவது : "(ஒரு முறை) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு தகவல் வந் தது. அதனால் மகிழ்ச்சியுற்ற நபி (ஸல்) அவர்கள் உடனே அல்லாஹ்வுக்காகச் சிர வணக்கத்தில் வீழ்ந்தார்கள்."

(நூல் : திர்மிதீ - 1503)

இந்த நபிமொழியின் அடிப் படையில், நன்றி தெரிவித் தலுக்கான சிரவணக்கம் (மார்க்கத்தில்) உண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஸாத் (எனும் 38வது) அத்தியாயத்தில் இடம் பெறும்

ஓதலுக்கான ஸஜ்தா தொடர்பாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில், "நபி தாவூத் (அலை) அவர்கள் பாவ மீட்சிக்காகச் சிரம் பணிந்தார்கள். நாம் நன்றி தெரிவிப்பதற்காகச் சிரம் பணிகிறோம்"என்று கூறினார்கள். (நூல்: நஸாயீ)

ஹள்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அண்ணல்நபி (ஸல்) அவர்களுக்கு அருகே நான் இருந்தேன். ஸஜ்தாவிற்குச் சென்ற அண்ணலார் (ஸல்) அவர்கள் நீண்ட நேரமாகியும்எழவில்லை. அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டு விட்டதோ என்ற பயம் அல்லாது அண்ணலார் (ஸல்) அவர்கள் மரணித்துவிட்டார்களோ என்றெல்லாம் எனக்கு நினைக்கத் தோன்றியது. ஸஜ்தாவிலிருந்த அண்ணலார் (ஸல்) அவர்களின் அருகில் சென்று விட்டேன். அதற்குள் அண்ணலார் (ஸல்) அவர்கள் எழுந்து விட்டார்கள். பிறகு நான், "நாயகமே! தங்களது வழக்கத்தைவிட நீண்ட நேரம் ஸஜ்தாவில் இருந்துவிட்டீர்களே" (என்ன காரணம்) என்று பரிதவிப்போடு வினவினேன். அண்ணலார் (ஸல்) அவர்கள், "அல்லாஹ் எனக்கு இப்போது ஒரு நல்ல செய்தியைச் சொன்னான். என் செவிகளுக்கு வந்து சேர்ந்த அந்த இனிமையான நல்ல செய்திக்கு நன்றி செலுத்துவதற்காகத்தான் நான், "நன்றி ஸஜ்தா"வாக நீண்ட நேரம் ஸஜ்தாவில் இருந்தேன்" என்று விளக்கமளித்தார்கள்.

அது என்ன நல்ல செய்தி என்று அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரளி) அவர்கள் பதிவு செய்யவில்லை. நபிமொழிகளிலும் அது என்னவென்று காணக்கிடைக்கவில்லை.

ஆனால், ஒரு நல்ல செய்தி காதுக்கு வந்தபோது அதற்கான நன்றிக்கடனாக அண்ணலார் (ஸல்) அவர்கள் நீண்ட நேரம் ஸஜ்தா செய்துள்ளார்கள் என்பது இங்கு நமக்குரிய பாடமாகும்.

எதிர்பாராத நிலையில் திடீரென்று ஓர் அருட்கொடை கிடைக்கும் போதோ அல்லது ஒரு துன்பம் அகலும் போதோ படைத்த இறைவனுக்குச் செய்யும் சிரவணக்கமே இஸ்லாமிய வழக்கில் "ஸஜ்தா ஷுக்ர்" எனப்படும். இது அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழிமுறையாகும்.

## துன்பத்தின்போது

ஹள்ரத் இக்ரிமா (ரளி) அவர்கள் கூறியதாவது : "கண்மணி பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவியரில்

ஒருவர் (சஃபிய்யா அல்லது ஹஃப்ஸா) மரணித்து விட்டார்கள் என்று அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரளி) அவர்களிடம் சொல்லப் பட்டது. உடனே அவர்கள் (ஸஜ்தா எனும்) சிர வணக்கத்தில் விழுந்தார்கள். அப்போது அவர்களிடம் (மரணச் செய்தி கேட்டு) சிரவணக்கம் செய்கிறீர்களே? என்று கேட்கப்பட்டது.

அதற்கு அவர்கள், "ஏதேனும் ஒரு சோதனை (துன்பத்தை) நீங்கள் கண்டால் (அல்லது கேட்டால்) சிர வணக்கம் செய்யுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். நபி (ஸல்) அவர்களின் மனைவியர் இறப்பதைவிட பெரும் துன்பமளிக்கும் சோதனை வேறு எதுவாக இருக்க முடியும்?" என்று அவர்கள் கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத் - 1012, திர்மிதீ - 3826)

## புனித இரவை அடையாளப்படுத்த

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ரமளான் மாதம் இருபதாம் நாள் காலையில் அதிகாலையில் (எங்களிடையே) சொற்பொழிவாற்றினார்கள். அதில் (பின்வருமாறு) குறிப்பிட்டார்கள். யார் என்னுடன் பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருந்தார்களோ அவர்கள் மீண்டும் இஃதிகாஃப் இருப்பதற்கு வரட்டும். நிச்சயமாக நான் லைலத்துல் கத்ரு இரவை கனவில் பார்த்தேன். நிச்சயமாக அதனை நான் மறைக்கும்படியாக செய்யப் பட்டேன். மேலும் அது கடைசி நாட்களில் ஒற்றைப்படை நாளில் அமைகிறது. நிச்சயமாக மண்ணும், தண்ணீரும் கலந்த தரையில் சிரவணக்கம் செய்வதைப் போன்று நான் கனவு கண்டேன்."

(நூல் : புகாரீ - 813; முஸ்லிம் - 2168)

லைலத்துல் கத்ரு எனும் ஒரு புனித இரவை அடையாளப்படுத்த அல்லாஹ் சிரவணக்கத்தைத்தான் முதன்மைப்படுத்துகிறான்.

## ஷைத்தானின் புலம்பல்

"நீங்கள் ஆதமுக்கு சிரம் பணியுங்கள்" என்று நாம் வானவர்களிடம் கூறியபோது, (அங்கிருந்த) இப்லீஸைத் தவிர மற்ற அனைவரும் சிரம் பணிந்தனர். அவனோ கர்வங் கொண்டு மறுத்துவிட்டான். இறைமறுப்பாளர்களில் ஒருவனாகவும் அவன் ஆகி விட்டான்" - அல்குர்ஆன் (2 : 34)

அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஆதமின் மைந்தன் (மனிதன்) ஸஜ்தா (சிரவணக்கத்திற்கான) வசனத்தை ஓதி சிரவணக்கம்

## ஷைத்தானுக்கு மாறு செய்வீர்!

"உங்களில் யாரும் இடக்கரத்தைக் கொண்டு சாப்பிடவும் வேண்டாம். குடிக்கவும் வேண்டாம். ஏனெனில், ஷைத்தான் தனது இடக்கரத்தைக் கொண்டே சாப்பிடவும் செய்கிறான். குடிக்கவும் செய்கிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம்)


வாழ்த்துக்களுடன்....

ARM

நிச்சயமாக நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**50க்கும் மேற்பட்ட முன்னணி பிராண்டுகள்**

- சிமெண்ட்
- சானிட்டரிவேர்
- ஸ்டீல்
- AAC ப்ளாக்ஸ்
- கன்ஸ்ட்ரக்ஷன் கெமிக்கல்ஸ்

புதுக்கோட்டை
+91 7373 7989 30
2154, வடக்குராஜ வீதி.

கோட்டைப்பட்டிணம்
+91 7373 7989 11
233, ECR.

திருச்சி
+91 7373 7989 45
31, ஏர்போர்ட் ரோடு.

அறந்தாங்கி
+91 7373 7989 64
17/64, பட்டுக்கோட்டை ரோடு.

www.armsons.in

(ஸஜ்தா) செய்தால் ஷைத்தான் அழுதவாறே “அந்தோ எனக்கு வந்த நாசமே! ஆதமின் மைந்தன் சிர வணக்கம் செய்யும்படி கட்டளையிடப்பட்டான். அவன் சிரவணக்கம் செய்து விட்டான். அவனுக்கு சொர்க்கம் கிடைக்கப் போகிறது. ஆனால் (ஆதி மனிதர் ஆதமுக்குச்) சிரம் பணியும்படி எனக்கு கட்டளை யிடப்பட்டது. நானோ மறுத்து விட்டேன். எனவே, எனக்கு நரகம் தான்” என்று கூறியபடி விலகிச் செல்கிறான்.”

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல்: முஸ்லிம் - 133; இப்னுமாஜா - 1042, முஸ்னது அஹ்மத் - 9336)

இறைவன் ஆதி மனிதர் ஹள்ரத் ஆதம் (அலை) அவர் களுக்கு (ஸஜ்தா) சிரம் பணியு மாறு கோரியபோது, வானவர் கள் சிரம்பணிந்து வீழ்ந்தார்கள். அவர்கள் ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தியபோது ஸஜ்தா செய்யாது நின்று கொண்டிருந்த இப்லீஸ் அகோரமான நிலையில் இருப் பதைக் கண்டார்கள். உடனே வானவர்கள் தங்களுக்கு இந்த நிலை வராது தப்பியதற்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக் கும் விதமாக மீண்டுமொரு முறை ஸஜ்தா செய்தனர்.

இதனால்தான் தொழுகை யில் ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு தடவை ஸஜ்தா செய்ய நம்மீது கடமையாக்கப்பட்டது.

அல்லாஹ் கட்டளையிட்ட ஒரு (ஸஜ்தா) சிரவணக்கத்தைச் செய்ய மறுத்ததே அல்லாஹ்வின் கருணையிலிருந்து இப்லீஸ் விரட்டப்படுவதற்கான காரணமாக அமைந்தது.

ஹள்ரத் மஅதான் பின் அபீதல்ஹா அல்யஅமரீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது: “நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களால் விடுதலை செய்யப் பட்ட அடிமையான ஹள்ரத் ஸவ்பான் (ரளி) அவர் களைச் சந்தித்து அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான ஒரு நற்செயலை எனக்குச் சொல்லுங்கள். அல்லாஹ் அதன்மூலம் என்னை சொர்க்கத்திற்குள் நுழைவிக்க வேண்டும் என்று கேட்டேன்.

அதற்கு ஸவ்பான் (ரளி) அவர்கள் (பதிலளிக்காமல்) அமைதியாக இருந்தார்கள். பிறகு நான் மீண்டும் (அதே கேள்வியைக்) கேட்டேன். அப்போதும் அவர்கள் அமைதி யாகவே இருந்தார்கள். நான் மூன்றாவது முறையாக அவர் களிடம் கேட்டபோது, “இது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் நான் கேட்டேன். நபி (ஸல்) அவர்கள் “அல்லாஹ்வுக்கு நீ அதிகமாக (ஸஜ்தா) சிர

வணக்கம் செய்வாயாக! ஏனெனில், நீ அவனுக்காக ஒரு ஸஜ்தா செய்தால் அதற்காக அவன் உனது ஒரு தகுதியை உயர்த்தி, உன் குற்றங்களில் ஒன்றை அவன் மன்னிக்காமல் இருப்பதில்லை" என்று கூறினார்கள்" என்றார்கள்.

(நூல் : முஸ்லிம் - 842)

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் ஸஜ்தா வசனத்தை ஓதிக்காட்டும்போது அவர்கள் ஸஜ்தா செய்வார்கள். உடனே நாங்களும் ஸஜ்தா செய்வோம். அப்போது (ஏற்படும் இட நெருக்கடியால்) எங்களில் சிலருக்கு நெற்றி வைப்பதற்குக் கூட (போதுமான) இடம் கிடைக்காது"

(நூல் : புகாரீ - 1075;
முஸ்லிம் - 1005)

குர்ஆனில் சில வசனங்கள் உள்ளன. அவற்றை ஓதுகின்றவர், ஓதி முடித்த பின்னர் ஒரு முறை சிரவணக்கம் (ஸஜ்தா) செய்ய வேண்டும் என நபிமொழிகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த வசனங்களை தொழுகையில் ஓதினாலும் சாதாரணமாக ஓதினாலும் ஸஜ்தா செய்ய வேண்டும். ஓதுபவரும், கேட்பவரும் ஸஜ்தா செய்ய வேண்டும். இதற்கு "ஸஜ்தா திலாவத்" (குர்ஆன் வசனங்களை ஓதியதற்காகச் செய்யப்படும் சிரவணக்கம்) என்று பெயர்.

இவ்வாறு திருகுர்ஆனில் 14 இடங்களில் ஸஜ்தா உடைய வசனங்கள் காணப்படுகின்றன. இவற்றில், "உங்களைப் படைத்த இறைவனுக்கு நீங்கள் சிரவணக்கம் செய்யமாட்டீர்களா?" என்ற பொருள் பொதுவாக காணப்படும்.

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் இரவில் ஸஜ்தா வசனங்களை ஓதி சிரம்பணியும் போது, (பொருள்:) "என் முகத்தைப் படைத்து அதில் தன் அறிவாலும் ஆற்றலாலும் செவிப்புலனையும் பார்வைத் திறனையும் ஏற்படுத்திய (இறை) வனுக்கு என் முகம் பணிந்தது" என்று பலமுறை கூறுவார்கள்.

(நூல் : அபூதாவூத்-1205, திர்மிதீ-3337, நஸாயீ-1117, முஸ்னது அஹ்மத், ஹாக்கிம், பைஹகீ)

பின்வரும் வசனங்கள் தான் ஸஜ்தாவின் வசனங்களாகும்.

1. ஸூரத்துல் அஃராஃப் வசனம் 206.
2. ஸூரத்துர் ரஃது வசனம் 15.
3. ஸூரத்துந் நஹ்ல் வசனம் 50
4. ஸூரா பனீ இஸ்ராயீல் வசனம் 109.
5. ஸூரா மர்யம் வசனம் 58.
6. ஸூரத்துல் ஹஜ் வசனம் 18.

7. ஸூரத்துல் ஃபுர்கான் வசனம் 60.
8. ஸூரத்துன்நம்ல்வசனம்26.
9. ஸூரா அலிஃப் லாம் மீம் வசனம் 15.
10. ஸூரா ஸாத் வசனம் 24.
11. ஸூரா ஹாமீம் வசனம் 38.
12. ஸூரத்துன்நஜ்ம்வசனம்62.
13. ஸூரத்துல் இன்ஷிகாக் வசனம் 21.
14. ஸூரத்துல்அலக்வசனம் 19.

அந்த 14 சஜ்தா உடைய வசனங்களை ஓதி, தனித் தனியே சஜ்தா செய்துவிட்டு, பிறகு பிரார்த்தித்தால் அந்தப் பிரார்த்தனை அங்கீகரிக்கப் படும். (நூல் : நூருல் ஈளாஹ்

ஹள்ரத் அப்துல்லாஹ்பின் மஸ்ஊத்(ரளி) அவர்கள் கூறிய தாவது : "நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் "அந்நஜ்ம்" எனும் (53வது) அத்தியாயத்தை ஓதிய பின் ஸஜ்தா செய்தார்கள். அவர்களுடன்இருந்த(முஸ்லிம் கள் இணைவைப்பாளர்கள் ஆகிய) அனைவரும் ஸஜ்தா செய்தனர். அங்கிருந்த ஒரு வயோதிகன் (உமைய்யா பின் கலஃப்) மட்டும் (நெற்றியை பூமியில் வைத்து சிரம்பணிய மனமில்லாமல்) ஒரு கையளவு கூழாங்கற்களையோ அல்லது மண்ணையோ அள்ளித் தனது நெற்றிவரை கொண்டு சென்று (ஸஜ்தா செய்வதைப் போன்று பாவனை செய்து) விட்டு, "இது எனக்குப் போதும்" என்று (ஸஜ்தாவைக் கேலி செய்து) சொன்னான். பிறகு, அவன் இறைமறுப்பாளனாகவே (பத்ருப் போரில்) கொல்லப் பட்டதை நான் கண்டேன்."

(நூல்: புகாரீ-1067, (முஸ்லிம் -1007)

ஸஜ்தா எனும் உயரிய வணக்கத்தை கேலி செய்த தாலோ என்னவோ அவனுக்கு இறைநம்பிக்கை கிடைக்கப்பெறவில்லை.

ஹள்ரத் உக்பா பின் ஆமிர் (ரளி) அவர்கள் கூறிய தாவது : "ஃப சப்பிஹ் பிஸ்மி ரப்பிகல் அழீம்" (உம்முடைய மகத்துவமிக்க இறைவனின் திருப்பெயரைத் துதிப்பீராக!) எனும் வசனம் (56:74) அருளைப் பெற்றபோது, இந்த தஸ்பீஹை (சுப்ஹான ரப்பியல் அழீம்) உங்களது ருகூவில் வைத்துக் கொள்ளுங்கள் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எங் களிடம்கூறினார்கள். அவ்வாறே சப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா (உம்முடைய உயர்வான இறைவனின் திருநாமத்தை துதிப்பீராக!) எனும் வசனம் (87:1) அருளப்பெற்றபோது இந்தத் தஸ்பீஹை (சுப்ஹான ரப்பியல் அஃலா) உங்களது ஸஜ்தாவில் வைத்துக்

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை - 625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **55 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு **‘ஆலிமா’** பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹுத தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு **“புதுச் சேர்க்கை”** நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **‘ஆலிமா’ வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

**எமது இந்நிறுவனத்திற்கு ‘நிதி வசூலிப்போர்’ யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**“MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST”**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

கொள்ளுங்கள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல்: அபூதாவூத், முஸ்னது அஹ்மத்)

## அடையாளம் காணப்படுவார்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "(மறுமை நாளில்) இறைவன், தன் அடியார்களிடையே தீர்ப்பு வழங்கி முடித்தபின், அல்லாஹ்வைத்தவிர வேறு இறைவன் இல்லை என்று உறுதி கூறியவர்களில் தான் நாடிய சிலரை நரகத்தில் இருந்து வெளியேற்ற விரும்புவான்.

அப்போது (அல்லாஹ்) அவர்களை வெளியேற்றுமாறு வானவர்களுக்கு ஆணையிடுவான். வானவர்கள் அவர்களை சஜ்தாவின் (சிரவணக்கத்தின்) அடையாளங்களை வைத்து இனங்கண்டுகொள்வார்கள். (ஏனெனில்,) அல்லாஹ் நரகத்திற்கு, மனிதனை அவனிலுள்ள ஸஜ்தாவின் அடையாளத்தை தீண்டக் கூடாதென தடை விதித்துள்ளான். ஆகவே, வானவர்கள் அவர்களை நரகத்திலிருந்து வெளியேற்றுவார்கள்."

(நூல் : புகாரீ - 6573)

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "(மறுமைநாளில்) நம்முடைய இறைவன் (தனக்கு தாழ்பணிவதற்காக) தன் கெண்டைக்காலைத் திரையகற்றிக் காண்பிப்பான். அப்போது (உலகத்தில் மனப்பூர்வமாக அல்லாஹ்வுக்குச் சிரம் பணிந்துகொண்டிருந்த) இறை நம்பிக்கையுள்ள ஒவ்வொரு ஆணும், இறைநம்பிக்கையுள்ள ஒவ்வொரு பெண்ணும் அவனுக்கு முன்னால் சிரவணக்கம் செய்வார்கள். முகஸ்துதிக்காகவும், மக்களின் பாராட்டை பெறுவதற்காகவும் இவ்வுலகில் சிரவணக்கம் செய்து வந்தவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள். அப்போது அவர்கள் சிர வணக்கம் செய்ய முற்படுவார்கள். (ஆனால்,) அவர்களது முதுகு (வளையாமல்) ஒரே கட்டையைப்போல் மாறிவிடும். (அவர்களால் சிரம் பணிய முடியாது.)"

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூசயீத் அல்குத்ரீ (ரளி) அவர்கள் (நூல்: புகாரீ-4919, முஸ்லிம்-302)

ஸகீஃப் குலத்தாரில் இருந்து ஒரு குழுவினர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தனர். அக்குழுவினருக்கு நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் மாண்புகளையும், அதன் கடமைகளையும் எடுத்துரைத்தார்கள். அப்போது அவர்கள், "தொழுகையை பொறுத்தவரை, நாங்கள் சிரவணக்கம் செய்ய விரும்பவில்லை.

ஏனென்றால், ஒரு மனிதனுடைய அடிபாகம் - ஆசன உறுப்பு அவனது தலையைவிட உயர்வாக (சிரவணக்கம் செய்யும் போது) இருப்பதை நாங்கள் வெறுக்கின்றோம்" என்றனர். அதற்கு நபி (ஸல்) அவர்கள், தொழுகையைப் பொறுத்தவரை, அது இல்லையென்றால் இஸ்லாமிய மார்க்கத்தில் எந்த நன்மையும் இல்லை" என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், "அப்படியானால் நாங்கள் அதை வெறுத்த போதிலும் அதைச் செய்கிறோம்" என்று கூறினர்.

## மரணம் புனிதமாகி விட்டது

அல்லாமா இப்னு கல்கான் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் : "யமன்வாசி ஒருவர் மதீனாவில் வாழ்ந்தார். அவருக்கு குர்ஆன் ஓதத் தெரியாது. தினந்தோறும் மஸ்ஜிதுந் நபவிக்கு வருவார். அங்கு யாராவது அமர்ந்திருப்பதைக் கண்டால் அப்போது இம்மனிதர் குர்ஆனை எடுத்து கொண்டுபோய் அமர்ந்திருப்பவரிடம் கொடுத்து விட்டு, "கொஞ்ச நேரம் குர்ஆனை ஓதுங்கள்; நான் கேட்கிறேன்" என்று விண்ணப்பிப்பார். அவருடைய விருப்பத்திற்கிணங்க அவருக்கு ஓதிக்காட்டப்படும். இவ்வாறே பல நாட்கள் நடந்தது.

ஒருநாள் இதுபோன்றே அம்மனிதர் மஸ்ஜிதுந் நபவிக்கு வந்த போது ஒருவர் அமர்ந்திருந்தார். இம்மனிதர் குர்ஆனை எடுத்து கொண்டுபோய் அமர்ந்திருப்பவரிடம் கொடுத்து, "கொஞ்சம் ஓதிக்காட்டுங்கள்" என்றார். அவர் விருப்பத்திற்கிணங்க அமர்ந்திருப்பவர் குர்ஆனை ஓதிக்காட்டிக் கொண்டிருக்கும்போது சஜ்தாவுடைய வசனம் வந்தது. உடனே ஓதிக்கொண்டிருந்தவரும், கேட்டுக்கொண்டிருந்த அம்மனிதரும் ஸஜ்தா செய்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு ஓதிக்கொண்டிருந்தவர் ஸஜ்தாவிலிருந்து எழுந்தார். ஆனால், ஓதக்கேட்டுக் கொண்டிருந்தவர் எழவில்லை. மரணமடைந்து விட்டார். அவருடைய மரணம் புனிதமாகிவிட்டது.

(நூல்: வாக்கிஅத்துல் அஹ்யா)

## மருத்துவக் குணங்கள்

முறையாக சஜ்தா செய்வதன்மூலம் மனிதனுக்குக் கிடைக்கும் மருத்துவக் குணங்கள் ஏராளம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பூமிக்கு ஒரு நிலையான காந்த சக்தி உண்டு. இயற்கையில் தரையில் சராசரி 0.3 முதல் 0.47 காஸ் காந்த சக்தி உள்ளது. காந்தம் நமக்குத் தெரியாமலேயே உடலில் வியாபித்து நம்மை ஆட்சி செய்கிறது. நம் உடலிலுள்ள

ஒவ்வொரு செல்லும் ஒரு குட்டி காந்தம். காந்தம் பூமியின் அடிபாகத்திலிருந்து ஆரம்பமாகிறது. தொழுகையின் ஸஜ்தா மூலம் நாம் பூமியுடன் தொடர்பு கொள்ளும் போது நாம் இழந்த காந்த சக்தியை மீண்டும் பெறுகிறோம்.

ஸஜ்தா செய்யும்போது தரைமீது தொடர்பு கொள்ளும் ஏழு உறுப்புகள் காந்த ஈர்ப்பு சக்தி பெறுகின்றன. பூமி காந்த கதிர்களை நமது உடலில் உள்ள சிகப்பணுக்களுக்கு செலுத்துகிறது. இதன் பயனாக இரத்தத்தின் கழிவுகள், யூரிக் அமிலம் ஆகியவை வெளியேற்றப்படுகின்றன. சுவாச உறுப்புகள் நன்றாக வேலை செய்கின்றன. காற்றிலுள்ள மின்சக்தி அயனிகள் (நேர்மின் அயனிகள், எதிர்மின் அயனிகள்) உடலுக்கு வேண்டிய மின் சக்தியை நுரையீரலுக்கு வழங்குகின்றன. அவை நுரையீரல் திசுவின் நரம்புகள்மீது ஊடுருவிச் சென்று மத்திய நரம்பு மண்டலத்தையும், மூளையையும் சுறுசுறுப்படையச் செய்து நல்ல நிலையில் செயல்படத் தூண்டுகின்றன.

ஸஜ்தா செய்யும்போது இந்த மின்சக்தி பலகீனங்களை மீட்டுத்தந்து சக்தி இழப்பிலிருந்து நம்மை பாதுகாக்கிறது. மின்சக்தி பெற ஸஜ்தா முறை சிறந்த பயிற்சியாகத் திகழ்கிறது.

தொழுகையின் ஸஜ்தா நிலை மிதமான ஆஸ்துமா தாக்குதலுக்கு சிறந்த நிவாரணமாகும். தொடர்ந்து தொழுகையை கடைபிடிப்பதால் நல்ல பலன் கிடைக்கும்.


ஆஸ்துமா நோயாளிகளுக்கு மூச்சு இழுப்பதில் சிரமம் இருப்பது இல்லை. மூச்சை வெளியே விட முடியாமல் தான் திணறுகிறார்கள். நுரையீரலில் உள்ள மெலிதான குழாய்கள் (டியூபுகள்) சுருங்கி விட்டிருப்பதால்தான் திணறுகிறார்கள். ஸஜ்தா நிலை சுருங்கிய குழாயை விரிவு படுத்துகிறது. மூச்சை வெளியேற்றும் ஆற்றலை அதிகரிக்க உதவுகிறது. காற்றை வெளியே தள்ளுகிறது. சஜ்தா நிலை உடனே ஆஸ்துமாவை குணப்படுத்தாது. அதை கட்டுப்படுத்தும். படிப்படியாக குணப்படுத்த வழி செய்யும். மூச்சை வெளியேற்ற உதவும் ஆசனத்தில் சஜ்தா நிலை மிகவும் சக்தி வாய்ந்தது.

ஆஸ்துமாவுடன் தொடர்ந்து முப்பது நாற்பது வருடங்கள் போராடும் நோயாளிகளுக்கு நுரையீரல் விரிந்து அதன் இயக்கம் சற்று பாதிக்கும் நிலை ஏற்பட்டு விடும். அப்போது உடற்பயிற்சி தான் சிறந்த சிகிச்சை. ஸஜ்தா ஆசனம் இவர்

87 வருட பாரம்பரியம்

# ஆடைகளும் கலாச்சாரமும்

# நான்கு தலைமுறைகளாய்



மனசெல்லாம் மஹாராஜா...

®

மஹாராஜா

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு

தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்

இராமநாதபுரம்

களுக்கு மிகவும் உதவுகிறது. நல்ல முன்னேற்றம் தருகிறது.

பெண்கள் பருவம் அடைந்த 12 - 16 வயதுக்கு அவர்களின் நாளமில்லா சுரப்பிகள் (Endocrine Gland) சரிவர இயங்காததினால் மாதவிடாய் சரியாக வருவதில்லை. இன உறுப்பு வளர்ச்சியும் குன்றியிருக்கும். உடலில் போதிய சக்தியில்லாமையால் இப்படி ஏற்படுகிறது. இவர்களுக்கு தொழுகையில் ஸஜ்தா ஆசனப் பயிற்சி நல்ல பலன் அளிக்கிறது.

மாதவிலக்கின்போது வலி அதிகமானால் தலைசுற்றும், இதயத்துடிப்பும் அதிகரிக்கும். தொழுகையின் சஜ்தா ஆசனப்பயிற்சி இவர்களுக்கு நல்ல குணமளிக்கும்.

நமது மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு 800 மில்லி இரத்தம் தேவைப்படுகிறது. நமது உடலுக்குள் வேண்டிய ஆக்சிஜன் தேவையில் ஐந்தில் ஒரு பாகத்தை மூளையே அபகரித்துக் கொள்கிறது. தூங்கினாலும், விழித்தாலும் எப்போதும் "குளுக்கோஸ் குளுக்கோஸ்" என்று அலறும் ராட்சஸ குழந்தை நமது மூளை. மூளைக்கு இரத்த சப்ளை தொடர்ந்து இருக்க வேண்டும். பத்து வினாடிக்கு இரத்தம் வரவில்லை என்றால் நாம் மயக்கம் போட்டு விழுந்து விடுவோம்.

சில நிமிடம் உயிர் காற்று (ஆக்ஸிஜன்) இல்லாவிட்டால் இறந்துவிட வேண்டியதுதான். தொழுகையில் ஸஜ்தா செய்யும் நிலை தலைக்கு இரத்த ஓட்டம் செல்வதை அதிகப்படுத்துகிறது. இதனால் ஞாபகசக்தி, கற்பனைத் திறன் அதிகமாகிறது.

கண்கள் திறந்த நிலையில் சஜ்தா செய்யும்போது கிட்டப் பார்வை, தூரப்பார்வை கண் கோளாறுகளை சரி செய்கிறது. மேலும் கண்ணாடி அணிபவர்களின் கண் பவர் (Power) அதிகமாவதை தடுக்கிறது என்பது முக்கியமான விஷயம்.

சஜ்தா செய்வதின்மூலம் (முறைப்படி தலையை தரையில் வைத்து, கைகளை ஊன்றி, முழு உடலின் பாரத்தையும் தலைக்கு கொண்டுவரும் போது) இரத்த ஓட்டம் தலைக்கு சீராகப் பாய்வதால் ஒற்றைத்தலைவலி, மண்டைவலி நீங்குகிறது.

எனவே, அல்லாஹுதஆலா அதிகமாக சிரவணக்கம் புரிந்து இறையருளைப் பெறக்கூடிய நல்லடியார்களுடன் நம்மையும் சேர்த்து நல்லருள் புரிவானாக!

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

# நான்கு நற்பாக்கியங்கள் கிடைக்கட்டும்! நான்கு துர்பாக்கியங்கள் விலகட்டும்!

மவ்லவீ ஹாஃபிழ் அ.செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

"நான்கு நலவுகள் நற்பாக்கியங்களில் அடங்கும். 1. நல்ல மனைவி; 2. விசாலமான வீடு; 3. நல்ல அண்டை வீட்டார்; 4. மகிழ்ச்சியான வாகனம்.

மேலும் நான்கு துற் குறிகள் துர்பாக்கியங்களில் அடங்கும். 1. கெட்ட அண்டை வீட்டான்; 2. தீய மனைவி; 3. நெருக்கடியான வீடு. 4. தீங்கு தரும் வாகனம் ஆகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரளி) அவர்கள் (நூல்கள் : இப்னு ஹிப்பான், ஹாகிம், தப்ரானீ, பைஹகீ)

உலக நற்பாக்கியங்கள் என்பது உடல் சுகம், நல்ல நிலை, மகிழ்ச்சியான வாழ்வு, வெற்றி, நல்ல அறிவு, அருள் வளம், பொருள் வளம், குழந்தை வளம் ஆகியவற்றை குறிக்கும். எனினும், உலக நற்பாக்கியங்களில் நபிமொழியில் கூறப்பட்டுள்ள நான்கு நற்பாக்கியங்கள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன.

ஏனென்றால், ஒரு மனிதனின் சராசரியான வாழ்வு இந்த நான்கில்தான் அமைந்துள்ளது. இந்த நான்குமே சாதாரண மனிதனின் வாழ்க்கைக்கு அவசியமானவை. இந்த நான்கை விட்டும் மனித வாழ்க்கையை பிரிக்க முடியாது.

சில சந்தர்ப்பங்களில் தேவை இல்லாவிடினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை நிச்சயம் தேவை. உலகின் எல்லாக் காரியங்களும் இந்த நான்கு நற்பாக்கியங்களில் அடங்கி விடுகின்றன.

நல்ல மனைவி ஒருவருக்கு அமைவது ஒட்டு மொத்த உலக செல்வமே அவருக்கு கிடைத்தது மாதிரியாகும்.

"இவ்வுலகம் (முழுவதும்) பயனளிக்கும் செல்வங்களே; பயனளிக்கும் இவ்வுலகச் செல்வங்களில் மிகவும் மேலானது நல்ல மனைவி" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ்பின் அம்ர் பின் ஆஸ் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் - 2911)

இவ்வுலகம் பயனளிக்கும் செல்வங்களே; பயனளிக்கும் செல்வங்களில் நல்ல மனைவியைத் தவிர சிறந்த செல்வம் வேறெதுவும் இல்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : இப்னுமாஜா)

## நல்ல மனைவி யார்?

சிறந்த மனைவி யாரென்றால், "கணவன், அவளைக்கண்டால் அவனை அவள் மகிழ்விப்பாள். அவன் ஏவினால் அவனுக்கு அவள் கட்டுப்பட்டு நடப்பாள். அவள் அவனுக்கு தமது ஆன்மா விஷயத்திலும் மாறு செய்ய மாட்டாள். மேலும் அவள் கணவன் வெறுக்கும் விதமாக தமது பொருள் விஷயத்திலும் மாறு செய்யமாட்டாள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

## விசாலமான வீடு

"வீடு என்பது விசாலமானதாக இருக்க வேண்டும். பலவிதமான வசதிகள் இருக்க வேண்டும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

விசாலமான வீடு அமைவது உள்ளங்களுக்கு மகிழ்ச்சியையும் உளப்பூர்வமான அன்பையும், ஏற்படுத்தி வைக்கும். ஏனெனில், விசாலமாக இருப்பதில் தான் உடல்சுகமும், மன அமைதியும் உள்ளன. வீடு விசாலமாக இருப்பது போன்றே அந்த வீட்டின் உரிமையாளர்களின் தேவைகளும் விசாலமாக இருக்கும்; அவர்களின் விசாலமான தேவைகளும் நிறைவேறும்.

## நல்ல அண்டைவிட்டார்

ஒருவருக்கு நல்லவாழ்க்கை அமைய வேண்டுமென்றால், நல்ல வாழ்க்கைத் துணைவியும், நல்ல விசாலமான வீடும் மட்டுமே அமைந்தால் போதாது. அவரின் அண்டை வீட்டாரும் நல்லவராக அமைய வேண்டும். தொல்லைத் தருபவராக இருந்தால் அவரின் வாழ்க்கையும் தொல்லையாகவும், கவலையாகவும் மாறிவிடும்.

"இறைவனையும், மறுமை நாளையும் நம்பிக்கைக் கொண்டவர் தம் அண்டை வீட்டாருக்குத் தொல்லை தர வேண்டாம்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரீ 6475)

"உங்களில் ஒருவர் தமக்கு விரும்புவதையே தம் சகோதரருக்கும் அல்லது தம் அண்டை வீட்டாருக்கும் விரும்பாத வரை அவர் முழுமையான இறை நம்பிக்கையாளர் ஆகமாட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் 71)

"எவருடைய நாசவேலைகளிலிருந்து அவருடைய அண்டை வீட்டாருக்குப் பாதுகாப்பு உணர்வு ஏற்படவில்லையோ அவர் சொர்க்கத்தில் நுழையமாட்டார்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம் 73)

## மகிழ்ச்சியான வாகனம்

மகிழ்ச்சியான வாகனம் என்பது அதை நாம் பயன்படுத்துவதற்கு இலகுவாக இருக்க வேண்டும். நாம் நாடக்கூடிய இடத்திற்கு நம்மை இலகுவான முறையில் கொண்டு போய் சேர்த்துவிட வேண்டும். அதில் பயணம் செய்வதினால் உடல் களைப்போ, சிரமமோ, கஷ்டமோ தெரியக்கூடாது. இப்படிப்பட்ட வாகனத்தை இறைவன் நமக்கு பாக்கியமாக வழங்கியதற்கும், இலகுவான முறையில் அதை இயக்குவதற்கும் வாய்ப்பு வழங்கிய இறைவனை பயணத்தின் இடையிலே நினைப்பதற்கு கால அவகாசம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மகிழ்ச்சியான வாகனம் என்பது நாம் செல்லும் இலக்கை துரிதமான முறையில் அடைய பயன்படும். அது நமது கட்டுப்பாட்டிலிருந்து விலகாது. வெருண்டோடவும் செய்யாது. அது கவிழ்ந்து விழுந்து உடல் பகுதியில்காயத்தையோ, உடல் பகுதியில் வீங்கி கடினத் தன்மையையோ தராது. உடல் அசௌகரியத்தையும் தராது. மனக்குழப்பத்தையும் தராது.

மேற்கூறப்பட்ட நான்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியம் அமைய வேண்டிய அருட் கொடைகளாகும்.


# மணமகள் தேவை

தமிழ் முஸ்லிம், வயது 45, உயரம் 5'6", கனடா குடியுரிமை பெற்ற, M.D., டாக்டர் **மணமகனுக்கு,** 33 வயதிற்கு கீழுள்ள ஸாலிஹான **மணமகள் தேவை.**

தொடர்புக்கு:

**9003052807, 9003052809**

# வரலாற்றில் ஓர் ஏடு

"உங்களில் எவரேனும் தொழுகை நடத்தினால், இலகுவான முறையில் தொழ வைக்கவும். பின்நின்று தொழுவோரில் நோயுற்றவர்கள், இயலாதவர்கள், முதியவர்கள், தேவையுடையவர்கள் இருக்கக் கூடும்" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

வரலாற்றில் ஒரு நாள் :

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "இன்ன இமாம் ஸுப்ஹு தொழுகையை நீட்டி தொழ வைக்கிறார். இதனால் கூட்டுத் தொழுகையில் நான் தாமதமாகவே வந்து கலந்து கொள்கிறேன்" என்றார். அன்றைய நாளிலேயே நபி (ஸல்) அவர்கள் கோபத்தோடு குத்பா உரை நிகழ்த்தினார்கள்.

உரையில் அவர்கள், "மக்களே! உங்களில் தொழ வைக்கக் கூடிய சிலர், அல்லாஹ்வின் நல்லடியார்கள் இறை வழிபாட்டில் வெறுப்புக் கொள்ளும்படி செய்து விடுகிறார்கள். (எச்சரிக்கை!) உங்களில் எவர் தொழ வைத்தாலும் சுருக்கியே தொழ வைக்கவும். ஏனென்றால் அவருக்குப் பின்னால் (அந்த அணிவகுப்புத் தொழுகையில்) முதியவர்களும், பலவீனமானவர்களும், தேவையுடையவர்களும் நிற்கக் கூடும்" என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ மஸ்ஊத் அன்ஸாரி (ரளி) அவர்கள்

ஆதாரம் : ஸஹீஹுல் புகாரி ஹதீஸ் எண் 704

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

## குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் பரிந்துரைக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம்!

மதரஸாக்களுக்கு எதிரான தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் (என்.சி.பி.சி.ஆர்.) பரிந்துரைக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மற்றும் அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்.) "நம்பிக்கையின் பாதுகாவலர்களா? அல்லது உரிமைகளை ஒடுக்குபவர்களா?" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் "கல்வி உரிமை சட்டத்தின் (ஆர்.டி.இ) கீழ் அனைத்து குழந்தைகளுக்கும் முறையான கல்வி கிடைப்பதை உறுதி செய்வது அரசின் கடமை. ஒரு வாரியம் இருப்பதால் மட்டுமே மதரஸாக்கள் ஆர்.டி.இ. சட்டத்திற்கு இணங்குவதாக அர்த்தமல்ல. எனவே, ஆர்.டி.இ. சட்டத்தை அமல்படுத்தாவிட்டால் மதரஸா வாரியங்களை மூட வேண்டும் அவற்றுக்கு அரசு வழங்கும் நிதியுதவியை நிறுத்த வேண்டும்" என்று தெரிவித்திருந்தது. இதற்கு தேசிய அளவில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

### அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் செயல்

மதரஸாக்களுக்கு எதிரான இந்த நடவடிக்கை அடிப்படை உரிமைகளைப் பறிப்பதுடன் அரசியலமைப்புச்சட்டத்திற்கும் எதிரானது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய பொதுச் செயலாளர் பி.கே.குஞ்ஞாலிக் குட்டி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "சிறந்த மனிதர்களை உருவாக்கும் வகையில் மதரஸாக்கள் தரமான கல்வியை வழங்கி வருகின்றன. மதரஸாக்கள் தேச விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக ஒருபோதும் செயல்பட்டதில்லை. மதரஸாக்களுக்கு எதிராக மத அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன" என்று தெரிவித்தார்.

"ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை முஸ்லிம் சமுதாயத்தைத் தனிமைப்படுத்தும் செயல்" என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய அமைப்புச் செயலாளர் இ.டி.முஹம்மது பஷீர் மற்றும்

சட்டப்பேரவை உறுப்பினர் எம்.கே.முனீர் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 29 மற்றும் 30க்கு எதிரானது மற்றும் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் செயல் என்று காங்கிரஸ் செயற் குழு உறுப்பினர் ரமேஷ் சென்னி தாலா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "மதரஸா மாணவர்களுக்கு முறையான கல்வி எதுவும் ஒரு போதும் மறுக்கப்படுவ தில்லை" என்று தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை சங்பரிவார் கொள்கையின் ஓர் அங்கம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேரள மாநிலச் செயலாளர் வினாய் விஷ்வம் தெரிவித்துள்ளார்.

**பாரதீய ஜனதாவின் பாரபட்சமான அரசியல் நீண்டகாலம் நீடிக்காது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்**

தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் (என்.சி.பி.சி.ஆர்.) "நம்பிக்கை யின் பாதுகாவலர்களா? அல்லது உரிமைகளை ஒடுக்குபவர்களா?" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் செய்தியாளர்களிடம் கூறும்போது, "இந்த நாடு அனைவருக்கும் சொந்தமானது. அரசியல் சாசனம் நமக்கு உரிமை களை வழங்குகிறது. அரசியல் சாசனத்தால் நிறுவப்பட்டுள்ள அமைப்புகளை மாற்ற பாரதீய ஜனதாவினர் விரும்புகின்றனர். சாதி, மதங்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தி அந்த வெறுப்பை வைத்து அரசியல் செய்ய நினைப்பவர்கள் இவர் கள். ஆனால், அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள். பாரதீய ஜனதாவின் பாரபட்சமான அரசியல் நீண்டகாலம் நீடிக் காது என்பதை நாட்டு மக்களும், அறிவுஜீவிகளும் இப்போது புரிந்து கொண்டுள்ளனர்" என்றார்.

## 2024ஆம் ஆண்டின் சிறந்த பள்ளி விருது!

"சென்னை - தமிழ்நாடு முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம்" ஒவ்வொரு வருடமும், தமிழகத் திலுள்ள 90%க்கு மேல் மதிப்பெண் பெறும் அனைத்து முஸ்லிம் மாணவ - மாணவி யருக்கும் விருது வழங்கி சிறப்பித்து வருகிறது.

இந்த விருது, முஸ்லிம் கல்வியாளர்களால் வழங்கப் படும் மிக உயரிய கவுரவம்.

இந்த வருடம் கரூர் பள்ள பட்டி உஸ்வத்துன் ஹஸனா பெண்கள் பள்ளி (கோஷா ஸ்கூல்)

"மூன்று பேர்களுடைய துஆகள் மறுக்கப்படுவதில்லை. 1. தந்தை செய்யும் துஆ 2. பிரயாணியின் துஆ 3. அநீதமிழைக்கப்பட்டவரின் துஆ" என்று நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். (நூல் : திர்மிதீ)

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-1.

04373-254354; 253339; 99444 54354

CERTIFIED ISO 9001:2008 COMPANY

பக்க விளைவுகள் கிடையாது

CERTIFIED ISO 9001:2008 COMPANY

# ஜிங்கா கோல்டு

4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

Customer Care - 9962664444

www.jingagold.com info@jingagold.com

மாணவிகள் சுமார் 20 பேர் தகுதி பெற்று, திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி ஆடிட்டோரியத்தில் நடைபெற்ற வண்ண மிகு விழாவில் பரிசு பெற்றனர். அல்ஹம்து லில்லாஹ்!

மேலும், இந்த வருடத்தின் மிகவும் கவுரவமிக்க "School of the Year 2024 Award" (2024ஆம் ஆண்டின் மிகச் சிறந்த பள்ளி விருது) இதனை பள்ளபட்டி உஸ்வத்துன் ஹஸனா பெண்கள் பள்ளி வென்றுள்ளது.

அதற்குரிய விருது கேடயத்தை, பள்ளி தலைமை ஆசிரியை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

அல்லாஹ்வின் அருளால், மேலும், மேலும் இது போன்ற உயரிய விருதுகளையும், சிறப்புகளையும் இப்பள்ளி பெற்றிட அனைவரும் துஆ செய்வோமாக!

## ஐ.நா. பொதுச் செயலாளருக்கான இஸ்ரேல் தடையை இந்தியா கண்டிக்காதது ஏன்?

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியா குத்ரேஸ் இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைய அந்நாடு தடை விதித்திருப்பதைக் கண்டிக்கும் கடிதத்தில் இந்தியா கையெழுத்திடாதது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து முன்னாள் நிதியமைச்சர் சிதம்பரம் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் தங்களின் எல்லைக்குள் நுழைய தடை விதித்திருக்கும் இஸ்ரேலைக் கண்டிக்கும் கடிதத்தில் கையெழுத்திட்டிருக்கும் 104 நாடுகளில் இந்தியா ஏன் இணைந்து கொள்ளவில்லை? என்று விளங்கிக் கொள்ள முடியவில்லை.

இதன்மூலம் இந்தியா அதன் "BRICS" கூட்டாளிகளான பிரேசில், தென்னாப்பிரிக்காவின் புரிதல்களை முறித்துள்ளது. மேலும், இந்தியாவுடன் நட்பு மற்றும் நல்லுணர்வுகளைப் பேணும் தெற்காசியா, மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளின் உதவிகளையும் முறித்துக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் என்பவர் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஓர் அலுவலர். அரசியல் வேறுபாடுகளை வெளியேற்றுவதற்கு இருக்கும் ஒரே சர்வதேச அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையே. தங்கள் நாட்டுக்குள் ஐ.நா.சபை பொதுச் செயலாளர் நுழைய இஸ்ரேல் தடைவிதித்திருப்பது மிகவும் தவறானது.

இஸ்ரேலின் செயலைக் கண்டிக்கும் கடிதத்தில் கையெழுத்திடும் முதல் நாடாக

இந்தியா இருந்திருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

சிரியாவால் முன்மொழியப்பட்டு, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் உட்பட 104 நாடுகள் ஆதரவு தெரிவித்த அந்தக் கண்டனக் கடிதத்தில், இஸ்ரேலின் முடிவுக்கு கண்டனம் தெரிவித்திருப்பதுடன், இந்த நடவடிக்கை மோதல்களுக்கு மத்தியில் நியாயம் சொல்லும், செய்யும், மனிதாபிமான உதவிகளைச் செய்யும் ஐக்கிய நாடுகள் சபையின் திறனைகுறைவான மதிப்புக்குள்ளாக்குகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதரஸா பள்ளிகளை மூடும் பரிந்துரைக்கு தடை!

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் மதரஸா பள்ளிகளை மூட வேண்டும் என்ற பரிந்துரைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

மதரஸா மாணவர்களை அரசு பள்ளிகளுக்கு மாற்ற வேண்டும்; மதரஸா பள்ளிகளை மூட வேண்டும் என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் மாநிலங்களுக்கு பரிந்துரைத்து கடிதம் எழுதியிருந்தது. இதற்கு பல்வேறு கண்டனங்கள் எழுந்தன.

அதனைத் தொடர்ந்து உத்தரபிரதேசம், திரிபுரா ஆகிய பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்கள் மதரஸா பள்ளி மாணவர்களை அரசு பள்ளிகளுக்கு மாற்ற உத்தரவு பிறப்பித்தது. இந்த நடவடிக்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அந்த மனுவில் இத்தகைய நடவடிக்கை சிறுபான்மையினருக்கு எதிரானது மட்டுமின்றி, அவர்களின் உரிமையை மீறும் செயல் என்று கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது சிறுபான்மையினர் நடத்தக்கூடிய பள்ளிகளை மூடுவதற்கு உத்தரவிட ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் அதிகாரம் இல்லை என்று வாதிடப்பட்டது.

அதனை ஏற்றுக் கொண்ட உச்சநீதிமன்ற நீதிபதிகள், தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் பரிந்துரைகளுக்கு தடை விதித்து உத்தரவிட்டது. மேலும் இதனை செயல்படுத்த உத்தரவிட்ட உத்தரப்பிரதேச அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

## வக்ஃபு சட்டத்திருத்த மசோதாவை திரும்பப் பெறக் கோரி கேரள சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றம்

ஒன்றிய அரசு கொண்டு வந்த வக்ஃபு சட்டத் திருத்த

மசோதாவை திரும்பப் பெறக் கோரி கேரள சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வக்ஃபு வாரிய சட்டத்தில் திருத்தம் செய்யும் வகையில் புதிய மசோதாவை ஆகஸ்ட் 8ஆம்தேதி அன்று ஒன்றிய அரசு கொண்டு வந்தது. மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்ததையடுத்து இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், வக்ஃபு சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அதனை திரும்பப் பெற வலியுறுத்தியும் கேரள சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை கேரள மாநில சிறுபான்மையினர் நலன் மற்றும் வக்ஃபு வாரிய அமைச்சர் வி.அப்துல் ரஹ்மான் கொண்டு வந்தார்.

இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்து அவர் பேசியதாவது :

வக்ஃபு சட்டத் திருத்த மசோதா மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதாக அமைந்துள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதச் சார்பற்ற தன்மையின் கொள்கைகளுக்கு எதிரானது. வக்ஃபு வாரியத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பதிலாக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தலைவரை நியமிப்பது ஜனநாயக மாண்புகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. இந்த மசோதாவின் பெரும்பான்மையான ஷரத்துகள் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை. அடிப்படை உரிமைகள், எந்த ஒரு கோட்பாட்டையும் பின்பற்றும் சுதந்திரம், கூட்டாட்சி தத்துவம், மதச் சார்பின்மை ஆகியவற்றிற்கு எதிரானவையாகும்.

எனவே, இந்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று இந்த சட்டப் பேரவையில் ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு கூறினார்.

இந்தத் தீர்மானத்துக்கு இடதுசாரி ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயக முன்னணி எம்.எல்.ஏ.க்கள் ஆதரவளித்துள்ளனர். கேரள சட்டப் பேரவையில் தற்போது பாரதீய ஜனதா எம்.எல்.ஏக்கள் யாரும் கிடையாது. எனவே, இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி என்
94420 56547

# நிரந்தர நன்மை பெற ஓடி வாருங்கள்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

வேலூர் மாவட்டம் அரியூரில் அமைந்துள்ள **ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியில்** பயிலும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்கும் விதத்தில் அருகிலுள்ள காலி இடம் **(ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்)** விலை பேசப்பட்டு அதை வாங்குவதற்காக கடந்த ஓராண்டாக தங்களைப் போன்ற நல்லுள்ளம் கொண்டவர்களிடம் உதவி வேண்டி கோரிக்கை வைத்திருந்தோம். அதன்படி, தாங்கள் செய்த பெரிய உதவிகளின் மூலம் நிறைந்த பணங்களைப் பெற்றுக் கொண்டோம். அல்ஹம்துலில்லாஹ் !

இன்னும் ரூபாய் 30 இலட்சங்கள் தேவைப்படுவதால் தயாள சிந்தனையுள்ளவர்கள் தாராளமாக அள்ளிக் கொடுத்து உதவினால் இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் மேற்படி இடத்தை முழுமையாக நாம் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும்.

**எனவே, விரைவாக தங்களின் பேருதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.**

தங்களின் இந்த உதவியால் கியாமத் நாள் வரை தங்களுக்கும், தங்கள் பெற்றோர் மற்றும் தாங்கள் யாருக்காக நிய்யத் செய்தீர்களோ அவர்களுக்கும் ஸதக்கா ஜாரியாவாக தொடர்ந்து நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

इंडियन बैंक Indian Bank

| | |
|---|---|
| ஒரு சதுர அடி ரூபாய் **1,000/-** | |
| ஒரு முஸல்லா அளவு ரூபாய் **6,000/-** | |

**AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**A/C No. : 6845938157**

**BRANCH NAME : ARIYUR**

**IFSC CODE : IDIB000A198**

Estd.: 2007/1427

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா **உபைதுல்லாஹ்** சாஹிப் காஸிமி, நிறுவனர் & முதல்வர்

## ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

அஜீஸ் நகர், அரியூர், வேலூர்–632055. தமிழ்நாடு Cell : 9443491834

# ஒரு முஸ்லிம் அமைச்சரின் சிறப்பான பணியால் அனைத்து சமுதாய மக்களுக்கும் கிடைக்கும் பலன்கள்!

உலகில் வாழும் ஒருவருக்கு ஒரு பொறுப்பு அல்லது பதவி கிடைக்கிறது என்றால், அந்தப் பதவியை அல்லது பொறுப்பை அவர் மிகச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும். தமக்குக் கிடைத்த பொறுப்பு அல்லது பதவியை எப்படி நிறைவேற்றினார் என்பது குறித்து, அவர் ஏக இறைவனிடம் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் உறுதியாக நம்பப்படும் நெறிமுறைகளில் ஒன்றாக இருந்து வருகிறது. எனவே தான் எந்த பதவிக்கு வந்தாலும் அந்தப் பணிகளை சிறப்பான முறையில் ஆற்றும் வகையில், அனைத்து சமுதாய மக்களுக்கும் அதன்மூலம் பலன் கிடைக்கும் வகையில், இஸ்லாமியர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு பணியாற்றி, தங்களது கடமைகளை நிறைவேற்றி வருகிறார்கள். இந்திய நாட்டில் பல்வேறு மாநிலங்களில் முஸ்லிம் அமைச்சர்கள் ஆற்றிவரும் பணிகள், மிகச் சிறப்பாகவே இருந்து வருகின்றன. அந்த வகையில் கர்நாடகா மாநில சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சராக இருந்து வரும் ஜமீர் அஹமது கான் செய்து வரும் சேவைகள், கர்நாடகா மாநில மக்களை மட்டுமல்லாமல், நாட்டிலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் பெருமை கொள்ளும் வகையில் கவர்ந்து வருகின்றன.

## ஜமீர் அஹமது கான் :

கர்நாடகா மாநிலம் பெங்களூரு வில் கடந்த 1966ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி பிறந்த ஜமீர் அஹமது கான், சாம்ராஜ் பேட்டை சட்டப்பேரவை தொகுதியில் 5 முறை எம்.எல்.ஏ. வாக தேர்வு செய்யப்பட்டவர். பாரம்பரிய குடும்பத்திலிருந்து வந்த ஜமீர் அஹமது கான், எப்போதும் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்வதை தனது கடமையாகவும், பொறுப்பாகவும் நினைத்து வருகிறார். வக்ஃபு வாரிய சொத்துக்களை மிகச் சிறந்த முறையில் சமுதாயத்திற்கு பயன்படுத்த வேண்டும், வக்ஃபு சொத்துக்களை ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் அவர் செய்துவரும் பணிகளை கர்நாடக மாநில மக்கள் மட்டுமல்லாமல் பிற மாநில முஸ்லிம் சமுதாய மக்களும் பாராட்டி வருகிறார்கள்.

## ஐந்து அற்புதமான திட்டங்கள் :

இப்படி மிகச் சிறப்பான முறையில் தனது பணிகளை ஆற்றிவரும் ஜமீர் அஹமதுகான், கடந்த சில வாரங்களுக்கு முன்பு கர்நாடக மாநில சிறுபான்மை

யினா் நலத்துறை மற்றும் வக்ஃபு வாரியத்தின் மூலம் ஐந்து புதிய திட்டங்களை அறிமுகம் செய்து வைத்து தொடங்கி வைத்தார். இந்த ஐந்து திட்டங்களும் முஸ்லிம் சமுதாய மக்களுக்கு மட்டுமல்லாமல் சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் மிகவும் பலனளிக்கும் வகையில் இருந்து வருகின்றன. புதிய திட்டங்கள் தொடர்பாக பெங்களூருவில் நடைபெற்ற விழாவில் சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் ஜமீர் அஹமது கான் மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் ஹஜ் துறை அமைச்சர் ரஹீம் கான் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**15 புதிய மகளிர் கல்லூரிகள் :**

சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில் வக்ஃபு வாரியத்தின் மூலம் கர்நாடகாவில் 15 புதிய மகளிர் கல்லூரிகள் திறக்கப்படும் என்று அறிவித்த அமைச்சர் ஜமீர் அஹமது கான், இதன் மூலம் கர்நாடக மாநிலத்திலுள்ள முஸ்லிம் பெண்கள் மிகச் சிறந்த முறையில் உயர் கல்வி பெற முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

**சவக்கிடங்கு உறைவிப்பான் பெட்டிகள் :**

மாநிலத்திலுள்ள அனைத்து 242 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் இலவச ஜனாஸா பெட்டிகளை (சவக்கிடங்கு உறைவிப்பான்பெட்டிகள்)வழங்கும் திட்டத்தையும், அமைச்சர் தொடங்கி வைத்தார். இவையனைத்தும் வக்ஃபு மற்றும் முக்கிய முஸ்லிம் சமூக அமைப்புகள் மூலம் அளிக்கப்படும். 242 சவக்கிடங்கு உறைவிப்பான் பெட்டிகள் வழங்குவதன் மூலம் உள்நாட்டில் ஒருவர் இறந்து விட்டால் அவரது உடலை எந்த வித பாதிப்பும் இல்லாமல் இரண்டு, மூன்று நாட்கள் உரிய முறையில் பாது காக்க முடியும். இதன்மூலம் வெளிநாடுகளிலிருந்து வரும் உறவினர்கள், இறந்தவரின் உடலை பார்க்க முடியும் என்றும் ஜமீர் அஹமது கான் தெரிவித்தார்.

**வக்ஃபு ஆம்புலன்ஸ் வாகனங்கள் :**

கர்நாடகா வக்ஃபு வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் இலவச ஆம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. இது "வக்ஃபு ஆம்புலன்ஸ்" என்று அழைக்கப்படும். நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய இந்த வாகனத்தின் மதிப்பு சுமார் 40 இலட்சமாகும். இந்த நவீன ஆம்புலன்ஸில் ஆக்ஸிஜன் மற்றும் முதலுதவி கருவிகள் உள்ளிட்ட அனைத்து மருத்துவ வசதிகளும் உள்ளன. செவிலியர் உள்ளிட்டோரும் நோயாளிகளுக்கு முதலுதவி வழங்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் முஸ்லிம் சமுதாய

மக்களுக்கு மட்டுமல்லாமல், சகோதர சமுதாய மக்களுக்கும் பலன் அளிக்கும் என்றும், தன்னுடைய சேவையை ஆற்றும் என்றும் ஜமீர் அஹமது கான் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த வாகன சேவை அறிமுகம் மூலம் இந்திய வரலாற்றில் முதன்முறையாக வக்ஃபு வாரியத்தின் மூலம் இலவச ஆம்புலன்ஸ் வாகனங்களை அறிமுகம் செய்திருப்பது கர்நாடகா வக்ஃபு வாரியம் தான் என்ற பெருமையையும் அந்த வாரியம் பெற்றுள்ளது.

**கல்வி உதவித் தொகை :**

கர்நாடகாவில் வாழும் சிறுபான்மையின மாணவர்களின் கல்வி தடையில்லாமல் தொடர, கல்வி உதவித் தொகை திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக 190 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டம் தொடங்கப்பட்டுள்ளதால், முஸ்லிம் உள்ளிட்ட சிறுபான்மையின மாணவர்கள் தங்களது கல்வியை இடையில் நிறுத்துவது இனி தடுக்கப்படும். அவர்கள் நல்ல உயர்கல்வியைப் பெற தற்போது வாய்ப்பு உருவாகியுள்ளது.

**மதரஸா மாணவர்களுக்கு நவீனக் கல்வி :**

இதே போன்று கர்நாடகா மாநிலத்திலுள்ள மதரஸாக்களில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் உலகக் கல்வியும் பெற வழி வகுக்கப்பட்டுள்ளது. அதற்காக மதரஸா மாணவர்களுக்கு நல்ல பயிற்சியளித்து, அவர்கள் 10ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்று, சான்றிதழ் பெறும் வகையில் புதிய முயற்சி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி ஆசிரியர், கணினி உள்ளிட்ட வசதிகளுடன் மதரஸா மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். மதரஸாக்களிலிருந்து கல்வி பயின்று ஆலிம், ஹாஃபிழாக மாணவர்களை வெளியே வருவதுடன் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விலும், அவர்கள் தேர்ச்சி பெற தற்போது புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக நூறு மதரஸாக்களுக்கு கணினி உள்ளிட்ட பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

**பெருமையளிக்கும் திட்டங்கள் :**

விழாவில் ஐந்து திட்டங்களையும் தொடங்கி வைத்து பேசிய அமைச்சர் ஜமீர் அஹமது கான், "கர்நாடகாவில் நாங்கள் புதிய முயற்சியை தொடங்கியுள்ளோம். தற்போது பொதுவாக சாதாரண ஆம்புலன்ஸ்களே உள்ளன. ஆனால் நாங்கள் வக்ஃபு வாரியம் மூலம் ஏற்பாடு செய்துள்ள ஆம்புலன்ஸ்கள், நவீன வசதிகள் கொண்ட வாகனங்களாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆம்புலன்ஸ் என்ற வகையில் 30 மாவட்டங்களுக்கு 30

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேரருளால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

LALPET OFF : No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.

CHENNAI OFF: No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும். பஸ், டிரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். **O.M. முஹம்மது சுஹைபு** செல்: 9994254304

வாகனங்களை நாம் கொடுத்திருக்கிறோம். நன்கு பயிற்சி பெற்ற செவிலியர் இந்த வாகனத்தில் நிச்சயம் இருப்பார். பாதிக்கப்பட்ட நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் எந்தவித பிரச்சனையும் உருவாகாத வகையில், செவிலியர் மற்றும் மருத்துவ உதவியாளர் சேவையாற்றுவார். இதே போன்று மாநிலத்தில் யாராவது மரணம் அடைந்துவிட்டால், அவரது உடல்எந்தவித பாதிப்பும் அடையாமல் இருக்க சவக்கிடங்கு உறைவிப்பான் பெட்டிகள் (Freezer Box) ஆகியவற்றை வழங்கியிருக்கிறோம்.

வக்ஃபு வாரியத்தின் மூலம் மாநிலத்தில் ஆயிரத்து முப்பது மருத்துவ மாணவர்கள் உருவாக்கப்படுவார்கள். மாநிலத்திலுள்ள மதரஸாக்களில் 100 மதரஸாக்களை தேர்வு செய்து, மார்க்கக் கல்வியுடன் உலகக் கல்வியையும் அளிக்கும் திட்டத்தை நாம் தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தின் படி 200 ஆசிரியர்களை நியமித்து, மாணவர்களுக்கு உலகக்கல்வி பெற பணிகளை தொடங்கியுள்ளோம். இந்தத் திட்டத்தின் படி, 5,000 மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை எழுத, இலக்கு நிர்ணயித்துள்ளோம். இதேபோன்று, "ஜன்பாட்டினா சிட்டியில்" வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் 1,200 குடும்பங்கள் வசிக்கக் கூடிய அடுக்குமாடி கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது.

கர்நாடகாவில், முஸ்லிம் சமுதாயத்திற்காக மட்டுமல்லாமல் அனைத்து சகோதர சமுதாயத்திற்கும் பலனளிக்கும் வகையில் சிறுபான்மையின நலத்துறை தனது பணிகளை ஆற்றி வருகிறது. இதன்மூலம் ஒரு புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது." இவ்வாறு பேசிய அமைச்சர் ஜமீர் அஹமது கான், இதற்காக சிறுபான்மையின நலத்துறைக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்என போராடி பெற்று சிறப்பான முறையில் பணிகளாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

**குவியும் பாராட்டுகள் :**

கர்நாடக மாநில சிறுபான்மையின நலத்துறை அமைச்சர் ஜமீர் அஹமது கான், ஆற்றி வரும் பணிகளை அம்மாநில முஸ்லிம்கள் மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டி வருகிறார்கள். சாதி, மதம், மொழி, இனம் என எதையும் பார்க்காமல் தாம் ஏற்றுக் கொண்ட அரசியலமைப்பு சட்ட உறுதிமொழிக்கேற்ப ஓர் அமைச்சர் பணியாற்ற வேண்டும் என்ற நிலைபாட்டில் ஜமீர் அஹமது கான் உறுதியுடன் இருந்து சேவையாற்றி வருகிறார்.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**

# இஸ்லாம் குறித்து இலண்டனில் நடைபெற்ற உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழா!

**எஸ்.ஏ. அப்துல் அஜீஸ்**

அமைதி மார்க்கமான இஸ்லாம் குறித்து, உலகளாவிய ஊடகங்கள் தவறான, பொய்யான, போலியான கருத்துகளை தொடர்ந்து பரப்பிவரும் நிலையில் கூட, இஸ்லாமிய வாழ்க்கை முறை குறித்து அறிந்து கொள்வதில் உலக மக்களிடையே தொடர்ந்து ஆர்வம் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக உலகில் தற்போது வேகமாக வளர்ச்சியடையும் மார்க்கமாக இஸ்லாம் இருந்துவருகிறது. இஸ்லாமிய வாழ்க்கை முறையால் கவரப்பட்டு, இஸ்லாமிய போதனைகளை அறிந்து அவற்றை பின்பற்ற ஆர்வம் கொண்டு, உலகம்முழுவதிலுமிருந்துநாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்லாத்தைத் தழுவி வருகின்றனர்.

இஸ்ரேல் – ஹமாஸ் போராளிகளுக்கு இடையே நடைபெற்று வரும்போரை ஆழ்ந்துகவனித்து வரும் உலகம், பலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேலிய இராணுவம் நடத்திவரும் கொடூர தாக்குதல்களைக் கண்டு அதிர்ச்சியடைந்து வருகிறது. காஸா மீது இஸ்ரேல் நடத்திய கொடூர தாக்குதல்கள் உலக மக்களை வேதனையில் ஆழ்த்தினாலும், இஸ்லாம் குறித்து அறிந்து கொள்வதிலும், பலஸ்தீன மக்கள் வரலாற்றை அறிந்து கொண்டு, ஒரு நல்ல தீர்வு காண பலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த முயற்சிகளின் காரணமாக இஸ்லாம் குறித்த அவர்களின் பார்வை மேலும் விரிவடைந்து வருகிறது. இஸ்ரேல் – ஹமாஸ் போராளிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் இந்த போரின் காரணமாகவும், பலஸ்தீன மக்களின் கொள்கை உறுதியாலும் இஸ்லாமிய மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு நல்ல, அமைதியான வாழ்க்கை நெறியை பின்பற்ற ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தற்போது ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளார்கள். இதனால், நாள்தோறும் இஸ்லாமிய மார்க்கத்தில் இணையும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

## அமைதி மற்றும் ஒற்றுமை விழா :

இப்படி இஸ்லாமிய மார்க்கத்தில் இணையும் மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்தாலும், அமைதி மார்க்கமான இஸ்லாம் குறித்து போலியான, தவறான கருத்துகள் இன்னும் களையவில்லை. பொய் பிரச்சாரங்கள் நிறுத்தப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில், இங்கிலாந்து நாட்டிலுள்ள பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் (Muslim Council of Britain) இலண்டனில் "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழா 2024" (Global Peace and Unity Festival 2024) என்ற பெயரில் கடந்த அக்டோபர் 19 மற்றும் 20 தேதிகளில் அற்புதமான ஒரு திருவிழாவை நடத்தியது. பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழாவை" மீண்டும் நடத்தி தன்னை பெருமைப்படுத்திக் கொண்டது.

மிகவும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழாவில்" நூற்றுக்கணக்கான அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வோர் அரங்கிலும், பல்வேறு தலைப்புகளில் தகவல்கள் கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக, "இஸ்லாம் குறித்தும், இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமிய வாழ்க்கை முறை, இஸ்லாம் காட்டும் சகோதரத்துவம், இஸ்லாமிய கல்வி, இஸ்லாமிய அறிவியல், இஸ்லாமிய சமூக வாழ்க்கை, இஸ்லாமிய பொருளாதாரம் என இஸ்லாம் குறித்து "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழாவிற்கு" வந்த பார்வையாளர்களுக்கு தகவல்கள் கிடைக்கும் வகையில் விழா ஏற்பாட்டாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்மூலம் அமைதி மற்றும் ஒற்றுமை விழாவை காண வந்த இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல், சகோதர சமுதாய மக்களும் இஸ்லாம் குறித்து ஒரு நல்ல தெளிவைப் பெற்றனர்.

## பார்வையாளர்களை கவர்ந்த ஒற்றுமை விழா :

இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை திருவிழா பார்வையாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது என விழாவை ஏற்பாடு செய்த பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் பிரதிநிதிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். விழாவை காண நாள்தோறும் இங்கிலாந்து நாட்டிலிருந்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து சென்றதாகக் கூறிய அவர்கள், மக்களை ஒன்றிணைத்து

ஒற்றுமையாகக் கொண்டாடியது பெருமையளித்ததாகவும் கூறினர். இந்த அற்புதமான திருவிழாவிற்கு முஸ்லிம் சமூகத்தில் மிகப் பெரிய அளவுக்கு ஒத்துழைப்பு இருந்தது என்றும் பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

"எங்கள் குழு, பரந்த பொது மக்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவது, கேள்விகளுக்கு பதிலளிப்பது மற்றும் இங்கிலாந்து முழுவதிலுமுள்ள முஸ்லிம் சமூகங்களை ஆதரிப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் பிரிட்டன் முஸ்லிம் கவுன்சிலின் தொடர்ச்சியான முயற்சிகள் பற்றிய நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நம்ப முடியாத நேரத்தைக் கொண்டிருந்தது. மதங்களுக்கிடையிலான உரையாடலை ஊக்குவிப்பதிலிருந்து இஸ்லாமோஃபோபியா போன்ற முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது வரை எங்களது பல்வேறு பிரச்சாரங்கள் மற்றும் முன் முயற்சிகள் பற்றி விவாதிக்கும் வாய்ப்பை நாங்கள் பெற்றோம். இந்தத் திருவிழாவிற்கு மற்ற முஸ்லிம் அமைப்புகள் மற்றும் வணிகங்களின் பங்களிப்புகளைப் பார்ப்பது சமமாக ஊக்கமளிக்கிறது. அவையனைத்தும் தங்கள் சொந்த வழிகளில் நேர்மறையான மாற்றத்தை நோக்கி செயல்படுகின்றன" என்று பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

**அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகள் :**

இலண்டன் நகர மக்களை மட்டுமல்லாமல், இங்கிலாந்து முழுவதும் வாழும் முஸ்லிம் மக்களை பெரிதும் கவர்ந்த இது போன்ற அருமையான நிகழ்வில், சிறப்பு ஷாப்பிங் மற்றும் கண்காட்சி அரங்குகள், இரண்டு நாள் நஷீத் கச்சேரிகள், ஊக்கமளிக்கும் பேச்சாளர்களின் கல்வி கருத்தரங்குகள், பேச்சுக்கள் மற்றும் பல அற்புதமான அம்சங்கள் இடம் பெற்றிருந்தன. அமைதி மற்றும் ஒற்றுமை விழாவில் உலகம் முழுவதிலுமிருந்து வந்திருந்த அறிஞர் பெருமக்கள் அழகிய அற்புதமான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். பாகிஸ்தான் அறிஞர் மவ்லானா தாரிக் ஜமீல், பய்யினாவின் தலைமை செயல் அலுவலர் உஸ்தாத் நௌமான் அலீ கான், இங்கிலாந்தைச் சேர்ந்த பேச்சாளர் மின்ஹாஜுல் குரான், யு.கே.வின் ஆசிரியர் ஷேக் ஹம்மாத் முஸ்தபா அல் மதானி அல்காத்ரி, தென்னாப்பிரிக்கா அறிஞர் ஷேக் சுலைமான் மூலா, எக்ஸிடெர் பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் இலன் பாப்பே, டொரண்டோ இஸ்லாமிய நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளர் டாக்டர் அப்துல்லாஹ் ஹக்கீம், விரிவுரையாளர் ஷேக்

முஹம்மது மஹ்மூத், கனடா அறிஞர் ஷேக் அலா எல்சைட், ஆசிரியர் மற்றும் விரிவுரையாளர் ஷேக்கா பாத்திமா பர்கத்துல்லாஹ் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அறிஞர் பெருமக்கள் இந்த அமைதி விழாவில் கலந்து கொண்டு இஸ்லாம் குறித்தும், இஸ்லாம் போதிக்கும் வாழ்க்கை முறை குறித்தும், இஸ்லாம் காட்டும் அமைதி வழி குறித்தும் விழாவிற்கு வந்தவர்கள் மிகவும் தெளிவு பெறும் வகையில் விளக்கங்களை அளித்தார்கள்.

**சிந்தனையை தூண்டும் விழா :**

உலகெங்கிலுமுள்ள துடிப்பான முஸ்லிம் வாழ்க்கை முறை, கலாச்சாரம் மற்றும் வணிகக்காட்சியின் பிரகாசமான அடையாளமான "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழா" (GPU) பிராண்டுகள், வணிகங்கள் மற்றும் உத்வேகத்திற்கான உருமாறும் மையமாக அமைந்திருந்தது. இந்த திருவிழா பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து, வளமான மரபுகள் மற்றும் சமகால வாழ்க்கை முறைகளைக் கொண்டாடியது. அப்பணிப்புள்ள ஷாப்பிங் மற்றும் கண்காட்சி அரங்குகள், ஊக்கமளிக்கும் பேச்சாளர்கள், நேரடி இசை, சிந்தனையைத் தூண்டும் கருத்தரங்குகள், நுண்ணறிவுமிக்க குழு விவாதங்கள் மற்றும் சிலிர்ப்பான அம்சங்களுடன் நடைபெற்ற இவ்விழா இந்த ஆண்டு மறக்க முடியாத அனுபவத்தை அளித்ததாக பார்வையாளர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

வாழ்க்கையில் பொருளாதார ரீதியாக தேவையிலுள்ள அநாதைகள், ஆதரவற்றவர்கள், மாணவர்கள் என பல்வேறு தரப்பினர் இந்த மாபெரும் நிகழ்வில் பங்கேற்றார்கள். இதன்மூலம், ஏழ்மையைப் புரிந்து கொள்ளவும், தங்கள் கண்காட்சியைப் பார்வையிடவும், மேலும் நெகிழ்ச்சி மிக்க, உண்மையான கதைகளைக் கேட்கவும் ஒரு வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் செய்யும் பணிகளில் அநாதைகள் மற்றும் விதவைகள் ஏன் இருக்கிறார்கள்? என்பதைக் கண்டறிய ஒரு வாய்ப்பு உருவாகி இருப்பதுடன், தங்கள் நிறுவனர் மற்றும் திட்ட இயக்குநரைச் சந்திக்கவும் வாய்ப்பு கிட்டியது. மேலும் ஒருவர் காட்டும் இரக்கம் எவ்வாறு மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு நம்பிக்கையையும், மாற்றத்தையும் கொண்டு வரும் என்பதைப் பார்க்கவும் இந்த "உலகளாவிய அமைதி மற்றும் ஒற்றுமை விழா - 2024" ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது என்று பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் தெரிவித்து பெருமையடைந்துள்ளது.



# சீரழிக்கும் செல் போன்கள்



மவ்லானா மவ்லவீ ஹாபிழ் அல்ஹாஜ்
எஸ். லியாக்கத் அலீ மன்பஈ

يٰنِسَآءَ النَّبِيِّ لَسْتُنَّ كَاَحَدٍ مِّنَ النِّسَآءِ اِنِ اتَّقَيْتُنَّ
فَلَا تَخْضَعْنَ بِالْقَوْلِ فَيَطْمَعَ الَّذِىْ فِىْ قَلْبِهٖ مَرَضٌ وَّ
قُلْنَ قَوْلًا مَّعْرُوْفًا ۚ ﴿٣٢﴾

**“நபியின் பெண்களே! நீங்கள் சாதாரணமான மற்ற பெண்களின் ஒருவரைப் போன்றவர்களல்ல, இறையச்சமுள்ளவர்களாக நீங்கள் இருந்தால் பிறரிடம் பேசும் பொழுது குழைந்து பேசி பேச்சில் மென்மையைக் காட்ட வேண்டாம். அதனால் சபலம் எனும் நோய் உள்ளத்தில் இருப்பவர்கள் (உங்கள் மீது) ஆசைப்படக்கூடும். (மேலும் யாரிடம் பேசினாலும்) நல்ல பேச்சையே பேசுங்கள்”**

– அல்குர்ஆன் : 22:32

## எங்கும் பெண்களே.....

பெண்களின் குரலோசை உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் காலமிது. எங்கும் பெண்கள்; எதிலும் பெண்கள். குறிப்பாக வானொலி, தொலைக் காட்சி, இண்டர்நெட் என எதைத் திறந்தாலும் அதில் அகில உலக செய்தி முதற் கொண்டு அடுப்பங்கரை வரையிலான அனைத்துச் செய்திகளையும் அள்ளித் தருவதற்கு பெண்கள்தான் நியமிக்கப் படுகிறார்கள். சோப்பு, சீப்பு, மல்லி, மிளகாய் முதற்கொண்டு ஆண்கள் மட்டுமே அணிகின்ற பனியன் ஜட்டிக்குக்கூட விளம்பரம் செய்ய பெண் குரல்தான் பொருத்தமானதாக முழு உலகமும் கருதுகின்றது. ஐயகோ.. கொடுமை! இதை யாரிடம் சொல்லி அழுவது?

இந்நிலையில் தான் பொதுவாக நம் முஸ்லிம் சமுதாயப் பெண்களுக்கும் குறிப்பாக நல்லவர்களாக வாழ வேண்டுமென்றும் நபியினுடைய ஆசியைப் பெற வேண்டுமென் றும் ஆசிக்கின்ற நமது பாத்திமாக்களுக்கும் ஆயிஷாக்களுக்குமாவது சொல்ல வேண்டுமே என்ற கவலையில் இருந்த பொழுது கண்ணில் பட்டதே மேற்கண்ட இறைவசனம்.

## கனிவும் கண்டிப்பும்

சுப்ஹானல்லாஹ்! அதில் தான் எத்தனை எத்தனைக் கனிவும் கருணையும்; அத்தோடு கண்டிப்பும் நிறைந்திருக்கின்றது என்பதைக் கொஞ்சம் பார்க்கலாமா?

'நபியின் பெண்களே' என்று இறைவன் இங்கே நேரடியாக அழைத்திருப்பது அகிலம் போற்றும் அன்னையர்களான (உம்மஹாத்துல் முஃமினீன்) விசுவாசிகளின் தாய்மார்களைத்தான்; ஓ! நபியின் மனைவியரே என்பதைக் குறிப்பதற்கு நேரடியான வார்த்தை "யா அஸ்வாஜன் நபிய்யி" என்பது தான். ஆனால் இஸ்லாம் கற்றுத் தரும் பேச்சொழுக்கத்தின் ஒரு முக்கியப்பகுதியாக மனைவி என்ற வார்த்தையால் பச்சையாகப் பேசாமல் துணையவரைக் குறிப்பதற்கு 'அஹ்ல்' – குடும்பம் – இம்ரஅத் –பெண்மணி,போன்ற கசக்கனை வார்த்தையால் பல இடங்களில் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

**(பார்க்க : –அல்குர்ஆன் வசனங்கள் : 7 : 83, 11 : 71, 21:84)**

தமிழில் கூட மனைவியைக் குறிப்பிடுவதற்கு "என் பெண்டாட்டி" என்று சொல்வது நாகரீகமற்றதாகவும்" இல்லத்தரசி (அஹ்லுல்பைத்) என்றோ, தலைவி (ஸய்யிதா) என்றோ சொல்வது நாகரீகமானவர்களின் மேன்மை மிக்கவர்களின் பண்பாக அமைந்துள்ளது. எனவே இவ்வசனத்தில் இறைவன் பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களின் பிராட்டிமார்களை அழைக்கும் பொழுது மிகவும் மரியாதை கொடுத்து அன்பொழுக அழைக்கின்றார்.

## பத்தோடு பதினொன்றா?

நீங்கள் சாதாரணமான பெண்களல்ல; மிகவும் உயர்ந்தவர்கள், கண்ணியமானவர்கள்; இம்மையிலும் மறுமையிலும் இறைவனின் அன்புக்கும் அருளுக்கும் உரியவர்கள் என்பதைக் குறிப்பிடும் வகையில் 'இதர பெண்களில் ஒருவரைப் போன்றவரல்ல நீங்கள்' என சுட்டுகின்றான். ஆம்! முஸ்லிம் பெண்களே! நீங்கள் பத்தோடு பதினொன்றல்ல, பத்தரைமாற்றுப் பசும் பொன்கள். எனவே உங்களைப் பாதுகாக்க வேண்டி சில ஒழுக்க

மாண்புகளை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். அவற்றில் முக்கியமானது உங்களின் பேச்சொழுக்கம்! உங்களின் உரையாடல், பிறரின் உள்ளத்தில் உங்கள் மீது ஆசையை வளர்ப்பதாக அமைந்து விடக் கூடாது. எனவே நீங்கள் பிறரிடத்தில் பேசும் பொழுது குழைந்து பேசும் முறையில் இனிமையாக கனிவாக இருக்கக் கூடாது" இதுதான் இவ் வசனம் சுட்டும் முதலாவது ஒழுக்கமாகும்.

## அவர்களுக்கு மட்டுமா?

இந்த ஒழுங்குமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைத் துணைவிமார்களுக்கே நேரடியாகக் கூறப்பட்டாலும் உலகில் வாழுகின்ற, வாழப் போகின்ற அனைத்து முஸ்லிம் பெண்களுக்கும் ஏன்? ஒழுக்கத்தை விரும்பும் எல்லா மத பெண்களுக்கும் உரிய உயர் நெறி என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

## என்ன வேறுபாடு?

நீங்கள் சாதாரணப் பெண்களல்ல என்று அப்பெருமாட்டிகளை நோக்கி அல்லாஹ் கூறுகின்றான். ஆம்! அவர்கள் விசுவாசங்கொண்ட முஸ்லிமான மற்ற பெண்களிலிருந்தும் வேறுபடுகின்றார்கள்.

1. அவர்கள் "உம்முல் முஃமினீன்" விசுவாசிகள் அனைவருக்கும் அன்னையர் ஆவர்.

-அல்குர்ஆன் : 33:6

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னர் அவர்களை வேறு யாரும் மண முடிக்கக் கூடாது.

-அல்குர்ஆன் : 33:53

3. மிக முக்கியமான மா பெரும் பெறற்கரிய பேறு, அவர்கள் அனைவரும் மறுமையிலும் மாநபியின் மனைவியர் என்ற அந்தஸ்துடன் சுவனம் செல்வார்கள். சுவனத்திலும் நபியுடன் நல்வாழ்க்கை வாழ்வார்கள். இவைபோன்ற பல பெருமைமிக்க பாக்கியங்களுக்கு உரிமைபெற்ற அந்தப் புனிதவதிகள் இம்மையில் சில கண்ணியத்தைக் கடைபிடிக்கத்தானே வேண்டும்.

## ஏன் இப்படி?

நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இல்லத்துக்குப் பலரும் பல பிரச்சனைகளுக்காக வருவார்கள். மார்க்கம் சம்பந்தப்பட்ட பல் வேறு வினாக்களுக்கு விடை காண வருவோர் ஒருபுறம். அரசியல் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள வருகின்ற உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள் மறுபுறம்; யூதர் கள், கிறிஸ்தவர்கள் மற்றும்

இணைவைப்போரின் தூதர்களாக மாநபியைக் காணவருவோர் இன்னொருபுறம். இப்படிப் பல்வேறு துறை சார்ந்த பாமரர் முதல் படித்தோர் வரை யாவரும் நேராக மஸ்ஜிதுன் நபவீக்கு வருவர். அங்கே அண்ணலார் இல்லையெனில் அன்னாரின் இல்லம் தேடி வரத் தான் செய்வர்.

## பேச வேண்டும்தான்

அப்பொழுதெல்லாம் விரும்பியோ விரும்பாமலோ அவர்களுக்கு பதிலளிக்கவேண்டிய கட்டாயம் இம்மாதரசிகளுக்கு ஏற்படத்தான் செய்யும். அது போன்ற நிலைகளில் எப்படி உரையாட வேண்டும் என்பதற்குத்தான் இந்த வசனம் வழிகாட்டுகிறது.

ஏனெனில் அவர்கள் விசுவாசிகளின் அன்னையர் என்பது அவர்களை மணமுடிப்பது கூடாது என்ற அடிப்படையில் தானேயன்றி இதர விஷயங் கள் அனைத்திலும் அந்நியப் பெண்களைப் போலவே தான் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும் என்பது ஒவ்வொரு ஸஹாபிக்கும் தெரியும். எனவே எந்த மனிதரின் உள்ளத்திலும் அவர்கள் மீது கடுகளவும் சிறு சபலம் ஏற்பட்டுவிடாதவாறு வெகு ஜாக்கிரதையான நடைமுறையாக இந்த ஒழுக்கம் அமைந்திருந்தது.

## அவர்களுக்கே இப்படி என்றால்.....

அன்னையர் என்ற – திருமணம் முடிக்கக்கூடாத உயர்ந்த அந்தஸ்து அவர்களுக்கு இருந்தும் பிள்ளைகளாகிய இந்த உம்மத்தவரிடம் அவர்கள் பேசும்பொழுது குழைந்து பேசக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தால், சாதாரணமான முஸ்லிம் பெண்களிடம் அந்நியவரான ஆடவர் பேசும்பொழுது எப்படி ஒழுக்கமாகவும் கட்டுப்பாடாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொரு முஸ்லிம் ஆணும் பெண்ணும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## எப்படிப் பேசலாம்?

அந்நியரிடம் பேச வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் ஏற்படுவது இயல்பானது தான். அப்போது முஸ்லிம் பெண்கள் சற்று கனத்த தொனியில் அதட்டும் முறையில் பதிலளிக்க வேண்டும். முன்பின் தெரியாதவர்களாக இருந்தால் ‘வீட்டில் ஆண்கள் இல்லை’ என்ற ஒரே பதிலில் முடிக்கலாம். அல்லது ஏதும் விபரம் சொல்ல வேண்டியிருப்பின் சத்தமாக மளமளவென்று சொல்லிவிட வேண்டும். அவ்வாறின்றி மென்மையான குரலில், இனிமையான வார்த்தைகளில் உரையாடினால் கேட்பவரின் உள்ளத்தில் தவறான எண்ணம் ஏற்பட்டுவிடும். எனவேதான்

குழைந்த - கனிந்த குரலில் பேசக் கூடாது என்று இவ் வசனம் எச்சரிக்கிறது.

அப்படியானால் பிற ஆடவரிடம் எப்படித் தான் பேச வேண்டும் என்று கேட்கின்றீர்களா?

ஒரு பெண் தன் கணவனிடம் பேசுவது போல அந்நிய ஆடவருடன் பேசக் கூடாது. அவளது பதிலைக் கேட்டும் எவரும் "இவளிடம் நமது பாச்சா பலிக்காது" என்று அரைகுறையாக பேச்சை முடித்துக் கொண்டு போய்விடும் அளவுக்குப் பெண்களின் உரையாடல் அமைய வேண்டும் (இப்னுகஃதீர்)

## காதுகளின் விபச்சாரம்

"பெண்கள் ஷைத்தானின் வலைகள்" என்று எச்சரித்த எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் காலத்திற்குப் பிறகு ஆண்களின் மீது அதிக இடையூறான எந்தச் சோதனையையும் நான் விட்டுச் செல்லவில்லை பெண்களைத் தவிர" என்று கூறினார்கள். ஒரு பெண்ணின் அனைத்துமே அவளது அழகு மட்டுமல்ல, பேச்சும் கூட அந்நிய ஆணின் உள்ளத்தில் சபலத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதை இப்படி விளக்குகிறார்கள்:-

**"ஆதமுடைய மகன் மீது விபச்சாரத்தின் ஒரு பங்கு விதிக்கப்பட்டே உள்ளது. அதை அவன் அடைந்தே தீருவான். அது எப்படி எனில் இரு கண்களின் விபச்சாரம், அந்நியப் பெண்களை (ஆசையுடன்) பார்ப்பது, இரு காதுகளின் விபச்சாரம் என்பது பிற பெண்களின் குரலைக் (காம உணர்வுடன்) கேட்பதாகும். நாவின் விபச்சாரம் பேசுவது, கரத்தின் விபச்சாரம் பிடிப்பது, கால்களின் விபச்சாரம் நடப்பது, உள்ளம் செய்யும் விபச்சாரம் பிற பெண்ணை இச்சிப்பது. இப்படி எல்லா உறுப்புகளும் தத்தம் பங்குக்கு விபச்சாரத்தின் ஒரு பகுதியை அளித்தாலும் மர்ம உறுப்புதான் அந்த விபச்சாரத்தின் எண்ணத்தை செயல்படுத்தி மெய்ப்பிக்கின்றது அல்லது முற்றாக ஒதுங்கி பொய்யாக்குகின்றது (அதை வைத்தே பாவம் பதிவாகுவதும் தண்டனை உறுதிப்படுவதும்)"**

– புஹாரீ, முஸ்லிம்

## இன்று நடப்பதென்ன?

அன்புச் சகோதர சகோதரிகளே! இப்போது நம் உலகிற்கு வாருங்கள்: நம் பெண்களின் நிலை என்ன? குறிப்பாக திருமணமாகாத-பருவம் அடைந்த பள்ளி கல்லூரிகளில் படிக்கும் பாவையரின் இன்றைய பொழுது போக்கு என்ன?

செல்போனில் சதா பேசிக் கொண்டிருப்பதுதான் என்பதை பஸ்களில், கார்களில் சாதாரணமாகப் பார்க்கிறோம் இல்லையா? அந்நிய ஆண்கள் நம் வீட்டு வாசற்படியை மிதித்து கதவின் ஓரத்தில் சன்னலின்

அருகில் நின்று பேசுவதின் ஒழுக்கம் தான் மேலே கண்ட இறையாணை. ஆனால் இன்றைய நிலை....?

பெண்கள் எங்கெல்லாம் போகிறார்கள்? யாரிடம் பேசுகிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? எப்படிப் பேசுகிறார்கள்? என்பதை ஒவ்வொரு தகப்பனும் தமயனும் வெகு எச்சரிக்கையாகக் கண்காணிக்க வேண்டிய காலமிது! காரணம் செல்போன்களினால் ஏற்படும் ஆபத்துகள் தாம்!

## எஸ்.எம்.எஸ். படுத்தும் பாடு

ஒரு பெண்ணிடம் செல் இருப்பது தெரிந்தால் உடனே அவளுக்கு எவன் எவனோ மெசேஜ் அனுப்புகின்றான். உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து கூட ஆபாசமான செய்திகள் அதில் பதிவாகின்றன. அவள் பேசினாளோ அவ்வளவுதான் போனிலேயே அவளை மயக்கி, இறுதியில் அவளது கற்பு கிழிக்கப்படும் கோரம் பற்பல இலட்சம் பெண்களை சீரழித்து விடுகின்றது.

## இரவில் மட்டுமே

காலத்தின் கோலத்தை என்னவென்று சொல்வது? ஒரு காலத்தில் வயதுக்கு வந்த பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவது என்பதே அபூர்வம். அதுவும் மலஜலம் கழிக்கும் தேவைக்காக வீட்டில் கழிப்பறை வசதி இல்லாதவர்கள்தான் இரவிலே ஆறு, குளம் பக்கம் போவார்கள் என்பது தமிழகத்தின் பண்பாடாகவும் முஸ்லிம்களின் கண்ணியமான கலாச்சாரமாகவும் இருந்தது. ஆனால் இன்றோ, எங்கும் பெண்கள்! எதிலும் பெண்கள்!

## கோர்ட்டிலும் ஸ்டேஷனிலும்

இதனால் ஆயிரமாயிரம் இளம் பெண்களின் வாழ்வு விவாகரத்தில் மூழ்கிப் போயிருக்கிறது என்ற உண்மையை தினசரிகளில் - மகளிர் காவல் நிலையங்களை மையமாகக் கொண்ட செய்திகள் வெளிச்சம் போட்டுக்காட்டி வருகிறது.

## உங்களை விடமாட்டார்கள்

பெண்பிள்ளை பெற்றவர்களே! உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு என்று எதை எதையோ கொடுக்க முயற்சிக்கின்றீர்கள். தவறல்ல; ஆனால் அவர்களின் கற்பொழுக்கத்தைக் காப்பாற்ற நீங்கள் கட்டுப்பாடுகளை விதித்து கண்களை இமை காப்பது போல் காக்கவில்லையெனில் அவர்கள் மட்டும் நரகம் போகமாட்டார்கள். உங்களையும் சேர்த்துத் தான் இழுத்துச் செல்வார்கள். அப்போது உங்களின் எந்த உயர் பதவியும் பட்டமும் காப்பாற்ற முடியாது என்பதைப் புரிந்து செயல்படுங்கள்!


"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

## Travel & Tours India (p) Ltd

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

## பார்வையற்றோர் மதரஸா மற்றும் பள்ளிவாசல் கட்டுமானத்திற்கு உதவுங்கள்

மதரஸா–யே–இம்தாதியா (பார்வையற்றோருக்காக, மேல்விஷாரத்தில் கடந்த 15 ஆண்டுகளாக பார்வையற்ற மற்றும் பார்வையுள்ள மாணவ, மாணவிகள் மார்க்கக் கல்வியுடன் உலகக் கல்வியும் பயின்று வருகின்றனர். இதுவரை 130 மாணவ, மாணவிகள் திருக்குர்ஆனை மனனம் செய்து முடித் துள்ளனர். மற்றும் 22 மாணவர்கள் ஆலிம்களாகப் பட்டம் பெற்றுள்ளனர்.

மதரஸா ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை மதரஸா விற்காக சொந்த இடம் எதுவும் இல்லை. தற்போது நல்லுள்ளம் கொண்ட ஒருவர் தனது பெரும் மதிப்புமிக்க இடத்தை மதரஸாவிற்காக நன்கொடை யாக வழங்கியுள்ளார். ஆனால், இந்த கட்டிடம் மிகவும் பழமையானது மற்றும் கூரையினால் (ஷீட்டினால்) ஆனது. எனவே, மாணவர்கள் கோடை, குளிர் மற்றும் மழைக்காலங்களில் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இன்ஷா அல்லாஹ், இந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு, அதே இடத் தில் பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டவும், மேலும் இதற்கு சுமார் 92 லட்சம் ரூபாய் செலவாகும் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவது என்பது "ஸதகத்துல் ஜாரியா" அதாவது என்றென்றும் நன்மை தரக் கூடிய ஸதகா ஆகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "எவர் ஒருவர் பள்ளிவாசலை கட்டுகிறாரோ, அவருக்கு அல்லாஹ் சுவனத்தில் ஒரு மாளிகையை கட்டுகிறான்."

எனவே, தாங்கள் அனைவரும், சுவனத்தில் மாளிகையைப் பெறும் நோக்கில், தங்களுக்காகவும், மறைந்த தங்கள் முன்னோர்களின் நன்மைக்காகவும் பள்ளி வாசல் மற்றும் மதரஸாவின் கட்டுமான பணிக்காக குறைந்தது 1,000 ரூபாய் நன்கொடை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (அதிகமாகக் கொடுக்க விரும்பினாலும் கொடுக்கலாம்). தங்கள் நண்பர்களையும் இந்நற்செயலில் பங்கெடுத்துக்கொள்ள ஊக்குவிக்கவும். மேலும் மதரஸாவின் வங்கி விவரங் கள் மற்றும் **QR CODE** மூலமாகவும் தங்களின் பங்களிப்பை அளிக்கலாம்.

**குறிப்பு**

★ கட்டுமானப் பொருட்களாகவும் தங்களின் பங்களிப்பை அளிக்கலாம்.
★ கட்டுமானப் பணிக்காக ஜகாத் தொகையை செலுத்த வேண்டாம்.

**9200 x Rs.1000 = 92,00,000/-**

**Cost around Rs.92,09,000/-**

**BANK DETAILS**

**Name : Imdadiya Educational and Charitable Trust**
**A/C No : 6288904753**
**IFSC : IDIBO00M139**
**Branch : Melvisharam 1312**

Indian Bank
UPI ID : imdadiya@indianbnk

**SCAN AND PAY**

BHIM UPI

+91-9952120340
539, Anna Salai, Melvisharam

# மதரஸா-யே-இம்தாதியா (பார்வையற்றோருக்காக)

எண். 539, அண்ணா சாலை, மேல்விஷாரம் – 632509

அல்ஹம்துலில்லாஹ்! 2010–ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிப்படியாக வளர்ச்சியடைந்து தற்போது நாழிரா, ஹிஃப்ழு, ஜூம்ரா மற்றும் கிராஅத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

மதரஸாவில் 100 மாணவர்கள் (ம) 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 40 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்) இதுவரை சுமார் 31 மாணவர்கள் 10–ம் வகுப்பு மற்றும் 13 மாணவர்கள் கல்லூரி பட்டப்படிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 1,000 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2,000/– செலவாகிறது. மதரஸாவில் 20 ஆசிரியர்கள் மற்றும் 11 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம் அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றன.

| பிரிவுகள் | பார்வையற்ற மாணவர்கள் | பார்வையுள்ள மாணவர்கள் | மொத்த மாணவர்கள் | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|
| நாழிரா | 10 | 18 | 28 | ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,500 |
| ஹிஃப்ழு | 17 | 22 | 39 | நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 6,60,000 |
| ஜூம்ரா | 10 | 18 | 28 | ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 66,000 |
| கிராஅத் | 03 | 02 | 05 | நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 79,20,000 |
| மக்தப் | - | 20 | 20 | மதரஸாவின் கடன் | 10,00,000 |
| மொத்தம் | 40 | 80 | 120 | மதரஸாவின் கட்டுமான செலவு | 92,09,000 |

BHIM | UPI

SCAN AND PAY

*Bank Details*

**Name** : Imdadiya Educational and Charitable Trust

**A/C No** : 35612371063

**IFSC** : SBIN0003783

**Branch** : Melvisharam

SBI

UPI ID : imdadiyaeducationalctesbi


+91-9952120340 539, Anna Salai, Melvisharam - 632509

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்

(நூல் : திர்மிதி)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

# சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## அறிவுள்ள மாணவர்

ஒரு ஞானிக்கு பல மாணவர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் இளைஞர். அவருக்கு அந்த ஞானி அதிக மரியாதையும், கண்ணியமும் கொடுத்து வந்தார். இது மற்ற மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை.

“ஒரு நாள் அம்மாணவர்கள், ஞானியிடம் அனுபவத்திலும், வயதிலும் மூத்தவர்களாகிய நாங்கள் எல்லாம் இருக்க, வயதில் இளையவரான அவருக்கு மட்டும் அதிக கண்ணியமளிப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?” என்று கேட்டு விட்டனர்.

அதற்கு அந்த ஞானி சில பறவைகளைப் பிடித்து ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு பறவை விகிதம் கொடுத்தார். அவ்விளைஞருக்கும் ஒரு பறவை கொடுக்கப்பட்டது. எல்லோரிடமும் அந்த ஞானி, “இப்பறவையை நீங்கள் யாரும் பார்க்காத இடத்தில் யாரும் இல்லாத இடத்தில் கொண்டு போய் அறுத்துக் கொண்டு வாருங்கள்” என்று கூறி பறவையை ஒவ்வொருவரிடமும் கொடுத்தார்.

சிறிது நேரத்தில் எல்லோரும் அறுத்த பறவை சகிதமாக ஞானியிடம் வந்தனர். ஆனால், அந்த இளைஞர் மட்டும் பறவையை அறுக்காமல் உயிரோடு கொண்டு வந்தார். அதைக் கண்ட ஞானி “எல்லோரும் பறவையை அறுத்துக் கொண்டு வந்திருக்கிறார்களே! நீர் ஏன் பறவையை அறுக்கவில்லை?” என்று கேட்டார்.

அதற்கு அந்த இளைஞர் “நீங்கள் யாரும் பார்க்காத இடத்தில், யாரும் இல்லாத இடத்தில் போய் இப்பறவையை அறுக்கும்படிக் கூறினீர்கள். ஆனால், எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளான். அவன் உலகில் நடக்கும் எல்லாவற்றையும் பார்க்கின்றான். இவ்வுலகில் அவன் இல்லாத, பார்க்காத இடமேயில்லையே! அப்படியிருக்க நான் எங்கு சென்று இப்பறவையை அறுப்பது? அதனால் அறுக்காமல் கொண்டு வந்து விட்டேன்” என்று கூறினார்.

அதைக் கேட்ட மற்ற மாணவர்கள், “நீங்கள் இவ்வளவு அறிவுள்ள இந்த இளைஞருக்கு கொடுத்த

மரியாதையும், கண்ணியமும் பொருத்தமானவையே!" என்று ஒப்புக்கொண்டனர்.

## ஹள்ரத் மூஸா (அலை) அவர்களும் – பச்சிலை மருந்தும்

ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்களுக்கு ஒரு நாள் காய்ச்சல் கண்டது. அவர்கள் நோய் குணமாவதற்கு அல்லாஹ்விடம் துஆ இறைஞ்சினார்கள். அல்லாஹுதஆலா நபி மூஸா (அலை) அவர்களிடம் "இன்ன மலையடிவாரத்துக்குச் செல்லுங்கள். அங்கு இன்ன வடிவமுள்ள பச்சிலை கிடைக்கும்; அதைச் சாப்பிடுங்கள். குணமாகி விடும்" என்று கூறினான். நபி மூஸா (அலை) அவர்களும்அப்படியே செய்ய நோய் குணமாகி விட்டது.

இரண்டு வருடங்கள் கடந்து ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்கள் மீண்டும் அதே நோய்க்கு ஆளாகிறார்கள். இப்போது அல்லாஹ் சொன்ன பச்சிலை மருந்து அவர்களுக்கு ஞாபகம் வருகிறது. அந்த மலையடிவாரத்திற்குச் சென்று அந்த பச்சிலையைப் பறித்து சாப்பிடுகிறார்கள். ஆனால், நோய் குணமாகவில்லை. ஆகவே, அல்லாஹ்விடம் வினவினார்கள். "யா அல்லாஹ்! முதலில் நான் உடல் நலமின்றியிருந்தபோது நீ சொன்ன மருந்தைச் சாப்பிட்டேன். நோய் குணமாகிவிட்டது. ஆனால், இப்போதும் அதே மருந்தைத்தானே சாப்பிட்டேன் நோய் குணமாகவில்லையே" என்று.

இறைவன் அதற்கு பதில் சொன்னான் : "மூஸாவே! முதலில் உங்களுக்கு நோய் வந்தபோது என்னிடம் நோய் குணமடைய வேண்டினீர்கள். நான்மருந்து சொன்னேன். குணமாகியது. ஆனால், இப்போது நீராகவே மருந்தைச் சாப்பிட்டீர். என்னுடைய உதவியை நீர் வேண்டவில்லை. ஆகவே, அந்த பச்சிலை யிலிருந்து நோயை ஷிஃபாவாக்கும் தன்மையை நாம் எடுத்துவிட்டோம்" என்று.

ஆகவே, நாமும் நமக்கு நோய் வந்தால் முதலில் அல்லாஹ் விடம் இன்ன மருத்துவரிடம் சிகிச்சை பெறச் செல்கிறேன். அல்லாஹ்வே! என்னுடைய நோயை நீ ஷிஃபாவாக்கித் தரு வாயாக" என்று துஆ கேட்டுச் செல்வோமானால் எந்த நோயா யினும் அல்லாஹ் அதை ஷிஃபாவாக்கித் தரப் போதுமானவன்.

நம்முடைய எந்தக் குறைகளையும் அல்லாஹ் மீது தவக்கல் வைத்தவர்களாக முறையிட்டோமானால் அவன் அதை நலமாக்கித் தர போதுமானவனாக இருக்கிறான்.

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

# N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர்,
மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள்
அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

---

*A.Saleem*
*S.Mohammed Kassim*

93632 20624
99943 23977
99767 78597



# Rahmaan Builders
## Property Developers

45D, Ramasamy Pillai Street, Maruthamalai Main Road,
Vadavalli (P.o.), Coimbatore - 41.





## கலப்படம் வேண்டாம்!

ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்களிடம் சிலர் வந்து கூறினார்கள் : "எங்களுடைய சகோதரர் ஒருவர் காலமாகி விட்டார். அவரை நல்லடக்கம் செய்ய நாங்கள் கபுரு தோண்டினோம். அதில் ஒரு கருநிறப்பாம்பு ஒன்றைக் கண்டோம். அவ்விடத்தை விட்டு விட்டு வேறிடத்தில் தோண்டினோம். அங்கும் அப்பாம்பு காணப்படவே, மூன்றாம் இடத்தில் தோண்டினோம். அங்கும் அப்பாம்பு காணப்பட்டது. இப்போது நாங்கள் என்ன செய்வது? என அவர்கள் ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்களிடம் வினவினர். அப்போது அன்னார் "அதே மண்ணறைகளில் ஏதேனும் ஒன்றில் புதைத்து விடுங்கள். இது அவர் செய்த செயலின் விளைவாகும். உலகம் முழுவதிலும் நீங்கள் கபுரு தோண்டினாலும் ஒவ்வொன்றிலும் இப்பாம்பு காணப்படும்" என்றனர். அவ்வாறே, அவர்கள் புதைத்து விட்டனர். பின்னர் திரும்பி வந்து அவரின் மனைவியிடம் நிலைமைகளை விசாரித்தபோது மனைவி கூறியதாவது : "அவர் உணவு தானிய வியாபாரம் செய்து வந்தார். தினசரி உணவுக்காக தானியத்தை எடுத்துக் கொண்டு அந்த அளவு பொடிக்கற்களையும், கட்டைத்தூசுகளையும் தானியங்களில் கலந்து விடுவார்" என அவர் மனைவி கூறினார்.

## இரு பலிகள்

இரண்டு பலிகளின் பரம்பரையைச் சார்ந்தவர்கள் தாமே அவர்கள். முதல் பலி பிரசித்தி பெற்றது. அவர்களின் மூதாதையர்களில் ஒருவரான ஹள்ரத் நபி இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட அழைத்துச் சென்ற வரலாறு; அது நிகழ்ந்து பல ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது பலிக்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ் அவர்கள். அச்சம்பவத்தின் சுருக்கம் இது : கஃபா எனும் இறையாலயத்திற்கு பயணிகள் வந்துபோன அந்தக் காலத்தில் அங்கே ஒரு பூசாரி நியமனம் பெற்றிருந்த காலச் சூழல் அது. கடுமையான தண்ணீர்ப்பஞ்சத்தில் அந்தப் பாலைவனம் கொதித்துக் கொண்டிருந்த வேளை அது. பயணிகள் அல்லலுற்றனர். பெருமானார் (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபும், பாட்டனாரின் ஒரே புதல்வர் ஹாரிதும் அந்தத் தண்ணீர் பஞ்சத்தைப் போக்க முயற்சிக்கிறார்கள். அவர்களை குறைஷிக் குலத்தோர் கேலி செய்தனர்; வீண் முயற்சி என நகைத்தனர் என்றாலும் அவ்விருவரும் தளர்ந்து விடவில்லை. "இறைவா! நானும், என் புதல்வர் ஹாரிதும் ஈடுபட்டுள்ள இந்த நன்முயற்சியில் எங்களோடு ஒத்துழைக்க

குறைஷிகளில் யாரும் முன் வரவில்லை. எனவே, நீ எனக்குப் பத்து ஆண் மக்களைத் தந்து அவர்களின் மூலமாக என்மூதாதையர் தோண்டிய ஜம்ஜம் கிணற்றைக் கண்டுபிடித்து தோண்டும் பாக்கியத்தை அருளினால் நான் என் மக்களில் ஒருவரை உன் ஆலயத்திற்குக் கொண்டு வந்து பலியிடுவேன்" என்று அப்துல் முத்தலிப் அவர்கள் அல்லாஹ்விடம் வேண்டினார்கள்.

வல்ல அல்லாஹ் அவர்களின் துஆவை கபூல் செய்தான். அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தனர்.

ஓர் இரவில் கனவு கண்டார்கள். அஸப், நைலா எனும் இரு சிலைகளின் அடிப்பாகத்தில் ஜம்ஜம் கிணறு மறைந்து கிடப்பது அக்கனவில் உணர்த்தப்பட்டது. அப்துல் முத்தலிப் கஃபாவிலிருந்த பூசாரியிடம் வந்து நடந்ததைச் சொன்னார்கள். குறிப்பிட்ட அந்த சிலைகளை அப்புறப்படுத்தச் சொன்னார்கள். மூதாதையர் வணங்கிய சிலைகளை அப்புறப்படுத்தலாகாது என பூசாரி மறுத்தார். பூசாரியை சமாதானப்படுத்தி அந்தச் சிலைகளை அப்துல் முத்தலிப் அப்புறப்படுத்தி அவ்விடத்தை தோண்டியதும் தண்ணீர் பீறிட்டு ஓடியது. ஜம்ஜம் கிணறு வெளிப்பட்டது. பஞ்சம் புதையுண்டது.


குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்
குட்லக் புர்கா கடை
குட்லக் எண்ணெய் கடை
குட்லக் நாட்டு மருந்துக்கடை

எங்களிடம் அனைத்து வகையான காலணிகளும், பேக் மற்றும் சூட்கேஸ் வகைகளும், பெண்களுக்கு தேவையான புர்கா, ஷால், மக்கன்னா போன்றவைகளும், சமையலுக்குத் தேவையான சுத்தமான செக்கு எண்ணெய் வகைகளும் மற்றும் நம்பகமான நாட்டு மருந்துகளும் தரமான வகையில், நியாயமான விலையில் கிடைக்கும்.

தொடர்புக்கு

தரமான ஸ்கூல் பேக் அனைத்து பேக்குகளும் தயாரிப்பாளர்

குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்
4027, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை - 622 001.
✆ 04322-222466; Cell : 9443346313

இறைவனிடம் வாக்குக் கொடுத்தபடி தம் மக்கள் பத்து பேரையும் அழைத்துக் கொண்டு அவர்களில் ஒருவரைப் பலி கொடுக்க அப்துல் முத்தலிப் வந்தார்கள். பத்து பெயர்களையும் தனித்தனிச் சீட்டுகளில் எழுதி குலுக்கிப் போட்டு அவற்றில் யாருடைய பெயர் வருகிறதோ அவரைப்பலி கொடுப்பதுஎன்றும் முடிவாயிற்று. அவ்வாறு செய்ததில் வந்த பெயர் அப்துல்லாஹ். முந்தைய பலியில் இஸ்மாயீல் நபிக்குப் பகரம் அல்லாஹ் ஓர் ஆட்டை அறுக்க வைத்தான். இரண்டாவது பலியில் அப்துல்லாஹ்வுக்குப் பகரம் நூறு ஒட்டகங்கள் பலியிடப்பட்டன. அதனால்தான் அந்த அப்துல்லாஹ்வின் புதல்வரான நபி (ஸல்) அவர்கள், “நான் பலியிட அழைத்துச் செல்லப்பட்ட இருவர்களின் மகனாய் இருக்கிறேன்” என்றார்கள்.

## பணிவு

ஒரு நாள் ஜனாதிபதி ஹள்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களுடன் ஒரு விருந்தாளி இரவில் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். பக்கத்தில் பணியாளர் ஒருவர் படுத்துக் கிடந்தார்.

அப்போது, “எரிந்து கொண்டிருந்த ஒரே விளக்கும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கத் தொடங்கியது. அதைச் சரி செய்ய பணியாளரை எழுப்பலாமா?” என விருந்தினர் வினவினார்.

“வேண்டாம் அயர்ந்து தூங்கட்டும்” எனக் கூறி விளக்கைச் சரி செய்ய ஜனாதிபதியே எழுந்தார்.

விருந்தினரோ “நீங்கள் இருங்கள். நானாவது சரி செய்கிறேன்” எனப் பதறிப் பதைத்துச் சொன்னார்.

“நீங்கள் விருந்தினர்; இவற்றையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டாம்” எனக் கூறிக் கொண்டே சென்று விளக்கை சரி செய்து விட்டுத் திரும்பினார்.

“ஜனாதிபதி அவர்களே! இவ்வேலைகளை நீங்கள்தான் செய்ய வேண்டுமா?”

குடியரசுத் தலைவர் பணிவுடன் பதிலுரைத்தார் :

“என்ன குறைந்து விட்டது அன்பரே! ஏன் பரபரப்படைகிறீர்கள்? விளக்கை சரிசெய்ய எழுந்து போகும்போதும் உமர் பின் அப்துல் அஜீஸாக இருந்தேன். இப்போதும் அப்படித் தானே இருக்கிறேன். இதனால் எவ்விதப் பெருமையும், சிறுமையும் வருவதில்லையே!”

(தொடரும்)

# வழங்கி வாழ்தல் — நயமிகு நல்வழி!

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

அல்லாஹ் உவந்து தேர்ந்த இஸ்லாமிய நெறி, மனித குலத்திற்கு வழங்கப்பட்ட ஓர் அற்புத வழிகாட்டி. அதன் உன்னதக் கொள்கைகள், மனித குலத்தின் வளத்திற்கும், நலத்திற்கும், ஒற்றுமைக்கும், உயர்வுக்கும், வழி சிந்தும் ஒளி விளக்காகும். சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் வற்புறுத்தி, மனித நேயத்தை மலரச் செய்யும் சத்திய நெறிகளாகும்.

மனிதர்கள் பல்வேறு இனத்தவர்களாகவும், நிறத்தவர்களாகவும், நாட்டினர்களாகவும், பேசும் மொழியால் வேறுபட்டவர்களாகவும் இருந்தபோதிலும், அனைவரும் சகோதர, சகோதரிகளேயாவர். முதல் மனிதர் நபி ஹள்ரத் பாவா ஆதம் (அலை) அவர்களும், அவர்களிலிருந்து படைக்கப்பட்ட ஹள்ரத் அன்னை ஹவ்வா (அலை) அவர்களும் மனித குலத்தின் தந்தையும், தாயுமாவர். இதனை உணர்வதன் மூலம், மனிதன் ஏற்படுத்திக் கொண்ட வேறுபாடுகளைத் தவிர்த்து விடலாம்.

திருகுர்ஆனும், திருநபி மொழிகளும் வெற்றி வாழ்வுக்கு வழிகாட்டிய போதிலும், சிற்றறிவாளனான மனிதன் அறியாமையில் மூழ்கித் திளைக்கிறான். நேர் வழி மறந்து, சீர்வழி தவறி, சிதைந்து போகிறான். ஆகவே பேரிழப்பு அவனைச் சூழ்கிறது!

அல்லாஹ் படைத்ததன் நோக்கத்தை அறிந்து, உணர்ந்து செயல்படும்போது, வெற்றி அவனை அணைக்கிறது!

அல்லாஹ்வின் படைப்பில் சில ஏற்றத் தாழ்வுகளைக்காணலாம். சிலர் செல்வந்தர்கள்; சிலர் ஏழைகள்; சிலர் அறிவு மிக்கவர்கள்; சிலர் அறிவு குறைந்தவர்கள்; சிலர் திறமை மிக்கவர்கள்; சிலர் திறமை குறைந்தவர்கள். உலகம் இயங்குவதற்கு, இத்தகு ஏற்றத் தாழ்வுகள் இன்றியமையாதவையாகும்.

செல்வமும், அறிவும், திறமையும் மிக்கவர்கள், அவை குறைந்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும். அனுசரணையுடன் நடந்து

கொள்ள வேண்டும். இதனை இஸ்லாம் வலியுறுத்தக் காணலாம்.

ஒருவர் தனக்கு விரும்பு வதையே மற்றவருக்கும் விரும்புமாறு வழிகாட்டப் பட்டுள்ளோம்.

நபி [ஸல்] அவர்கள், கூறினர்: "இறைவன் உங் களுக்கிட்ட கட்டளைக்கிணங்க, இறையடியார்களான நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் சகோதர ராக இருந்து வாருங்கள். ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லி முக்குச் சகோதரரேயாவார். அவர் [பிற முஸ்லிமுக்கு] அநியாயம் செய்யமாட்டார். அவர் பிறரை கைவிடவும் மாட் டார். இழிவுபடுத்தவுமாட்டார். மனிதன் தீயவனாக ஆகுவதற்கு, தன் சகோதர முஸ்லிமை இழி வாகக் கருதுவதே போதுமானா தாகும். ஒவ்வொரு முஸ்லிமின் மீதும், பிற முஸ்லிமுடைய உயிர், பொருள், மானம் தடை செய்யப் பட்டிருக்கின்றன. நிச்சயமாக, இறைவன் உங்களுடைய தோற்றத்தையும், உடல் அமைப் பையும் பார்ப்பதில்லை. எனினும், உங்களுடைய உள்ளத்தையும், செயல்களையும் தான் நோட்டமிடுகிறான்!!

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள், (ஆதாரம் : புகாரீ, முஸ்லிம், (முஅத்தா, அபூதாவூத், திர்மிதீ)

நபி [ஸல்] அவர்கள் கூறினர்: "பசித்தவருக்கு உணவளி யுங்கள், நோயாளியை நலம் விசாரியுங்கள். கைதிகளை விடுவியுங்கள்."

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரளி) அவர்கள், (ஆதாரம்: புகாரீ, அபூதாவூத்)

ஆகவே, ஒருவர் மற்றொரு வருக்கு உதவிக்கரம் நீட்டு வது மிக்குயர்ந்த செயலாகும். மனித நேயத்தின் மகத்தான வெளிப்பாடாகும். பசித்தவ ருக்கு உணவளித்தல், தாகித்த வருக்கு தண்ணீர் வழங்குதல், இடர்பட்டவருக்கு தோள் கொடுத்தல் போன்றவை மனம் கொள்ளத்தக்க மனிதமாகும். பரந்த மனப்பான்மை, பரிவு, இரக்கம், ஈகை ஆகிய குணங் கள் இஸ்லாம் வலியுறுத் தும் ஒப்பற்ற உயர் குணங்களாகும்.

## 1. உணவு வழங்குதல்

பசித்தவருக்கு உணவு வழங்குதல் மிகச் சிறந்த செயல். அன்பின் வெளிப்பாடு. மிகவும் வற்புறுத்தப்பட்ட அழகிய செயலும் கூட. சகமனிதரின் சிரமத்தை நீக்கும் பண்பட்ட உதவி. சகோதரர்களுக்கிடை யில், பாசத்தையும், நேசத்தை யும் தூண்டும் அழகிய செயல்.

அல்குர்ஆன் கூறுகிறது:-

"அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழை

களுக்கும், அனாதைகளுக்கும், சிறைப்பட்டவர்களுக்கும் உணவளிப்பார்கள். [தம்மிடம் பெறுவர்களை நோக்கி] நாம் உங்களுக்கு உணவளிப்பதெல்லாம், அல்லாஹ்வின் முகத்தை நாடியேயன்றி, உங்களிடம் நாம் யாதொரு கூலியையோ அல்லது [நீங்கள் நமக்கு] நன்றிசெலுத்துவதையோ கருதவில்லை [என்றும்]; நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனின் ஒரு நாளைப்பற்றி பயப்படுகிறோம். அந்நாளில் முகம் கடுகடுத்துச் சுண்டிவிடும் [என்றும் கூறுவார்கள்]."

- அல் குர்ஆன் (76: 8,9,10)

"[நபியே!] கூலி கொடுக்கும் நாளைப் பொய்யாக்குபவனை நீங்கள் [கவனித்துப்] பார்த்தீர்களா? [திக்கற்ற] அனாதைகளை வெருட்டுபவன் அவன்தான். அவன் ஏழைகளுக்கு [உணவளிக்காதது டன்] உணவளிக்கும்படி [பிறரைத்] தூண்டுவதுமில்லை."

- அல்குர்ஆன் (107: 1,2,3)

நபி[ஸல்] அவர்கள் கூறினர்: "உங்களில் சிறந்தவர்கள், மற்றவர்களுக்கு உணவு அளிப்பவர்களேயாவர்."

(அஹ்மத்)

"அபூதர்ரே! நன்மையான செயல்களில் எதனையும் இழிவுபடுத்தாதீர்கள். உம்முடைய சகோதரரிடம் சிரித்த முகத்துடன் பேசுவதாக இருப்பினும் சரியே - ஆணம் காய்ச்சினால், தண்ணீரைச் சற்று அதிகமாக வைத்து அதிலிருந்து அண்டை வீட்டாரின் பாத்திரத்திலும் சிறிது அளித்து வாருங்கள்."

அறிவிப்பவர்: ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள்.
(ஆதாரம்: திர்மிதீ)

"உங்களுக்குப் பிரியமான பொருள்களிலிருந்து நீங்கள் [தானமாக] செலவு செய்யாத வரையில், நிச்சயமாக நீங்கள் நன்மையை அடையமாட்டீர்கள். ஒரு சொற்பத்தை நீங்கள் தானம் செய்த போதிலும், நிச்சயமாக அல்லாஹ் அதனையும் நன்கறிவான்."

- அல்குர்ஆன் (3 : 92)

இத்திருவசனம் அருளப்பட்ட பின், நபித்தோழர் ஹள்ரத் அபூ தல்ஹா (ரளி) அவர்கள், தங்களுக்குப் பிரியமான 'பைரஹா' என்ற பெரியத் தோட்டத்தை, அல்லாஹ்வின் வழியில் அறம் செய்ய விரும்பி, நபி (ஸல்) அவர்களின் ஆலோசனையின்படி, தம் உறவினர்களுக்கு பகிர்ந்து கொடுத்து விட்டனர்.

இத்தோட்டத்திலிருந்த கிணற்று நீர் மிகச்சுவையாக இருந்ததால், நபி (ஸல்) அவர்கள் அங்கு அடிக்கடி

வருகை தந்து அதனைப் பருகுவார்கள்!

"அண்டை வீட்டார் பசித்திருக்க, தான் மட்டும் வயிறு நிறைய உண்பவன், என்னை சேர்ந்தவனல்ல" என நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

"அண்டை வீட்டார் என்றால் எத்தனை வீட்டினர்?" என நபித்தோழர்கள் வினவினர்.

"ஒவ்வொரு திக்கிலும் நாற்பது வீடுகள்" என நபி (ஸல்) அவர்கள் பதிலுரைத்தனர்

(புகாரீ).

## 2. தாகம் தீர்த்தல்

"நீரின்றி அமையாது உலகு" என்ற சொற்களில், தண்ணீரின் இன்றியமையாத் தன்மையை அறிந்து கொள்கிறோம்.

அல்லாஹ் படைத்துள்ள அனைத்து உயிர் பிராணிகளுக்கும், தண்ணீர் உட்கொள்வது மிக அவசியமானதாகும். கடல் வாழ் மீன்களுக்கும் அது பொருந்தும்.

மனித உடலில் ¾ பங்கு தண்ணீரும், மீதி ¼ பங்கு, மற்றவையுமாகும். உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் பராமரிக்கப்பட வேண்டும். வியர்வையாகவும் அல்லது வாந்தி, வயிற்றுப் போக்கு போன்ற நோய்களாலும், உடல் நீர் வெளியேறும்போது, 'தாகம்' என்ற அறிவிப்பை அல்லாஹ் அமைத்து, அதன் மூலம் நீர் அருந்தி, உடல் பாதுகாக்கப்படுகிறது.

உடற்பணியைப் பொறுத்து இரண்டு அல்லது மூன்று லிட்டர் தண்ணீர் தினமும் குடிக்கப் பட வேண்டும். எனவே, தண்ணீர் ஒருவருக்கு வேண்டும். தண்ணீர் வழங்குதலை சிறந்த அறமாக இஸ்லாம் கருதுகிறது.

மேலும், ஒருவருக்கு, பழச் சாறு, காஃபி, அல்லது தேநீர் போன்றவற்றை வழங்குவது மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்லாமல், அன்பையும், நேசத்தையும் வலுப்படுத்தக் காணலாம்.

திருமறை வழிகாட்டுகிறது:

"நம்பிக்கையாளர்களே! [தர்மம் செய்யக் கருதினால்] நீங்கள் சம்பாதித்தவற்றிலிருந்தும், நாம் உங்களுக்குப் பூமியிலிருந்து வெளியாக்கிய [தானியம், கனிவர்க்கம் ஆகிய] வற்றிலிருந்தும் நல்லவற்றையே [தர்மமாக] செலவு செய்யுங்கள்."

-அல்குர்ஆன் (2:267).

நபி (ஸல்) அவர்கள் கூறினர்: "எவரொருவர், தாகத்துடன் வருபவருக்கு தண்ணீர் வழங்குகிறாரோ, மறுமையில் அவருக்கு சுவனத்து பானம் வழங்கப் பெறுவார்."

(இப்னு மாஜா)

# வாய் மணக்க தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**

தபால் பெட்டி எண் : 14,

புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

மணக்கும் மதீனாவில், "பிஉருரூமா" என்ற கிணறு ஒரு யூதருக்குச் சொந்தமானது. வேறு கிணறுகளில் உவர்ப்பு நீரே கிடைத்தது. ஆகவே, முஸ்லிம்கள் 'பிஉருரூமா'வில் தண்ணீர் எடுப்பதற்கு, யூதர் அனுமதிக்கவில்லை.

தோழர்கள் துயருறுவதைக் கண்ணுற்ற காருண்ய நபி (ஸல்) அவர்கள். 'பிஉருரூமா'வை விலை பேசிப் பெற்று, முஸ்லிம்களுக்கு உடைமையாக்குபவர் உங்களில் எவரோ, நான் அவருக்கு சுவனத்தைப் பற்றி உறுதி கூறுகிறேன்" என்று அறிவிப்புச் செய்தனர். பொன் மனம்கொண்ட ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள், அறிவிப்பைச் செவியுற்று கிணற்றின் உரிமையாளனுடன் பேசி, 12,000 திர்ஹம் கொடுத்து, பாதி உரிமை பெற்றனர்.

ஒரு நாள் யூதரும், மறு நாள் முஸ்லிம்களும் கிணற்றில் நீர் எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்தனர். யூதர், நீர் அள்ளும் நாட்களில், சரியான வருவாய் கிடைக்கவில்லை என்பதால், யூதர் முழு உரிமையையும் வழங்க விரும்பினார். ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள் 8,000 திர்ஹங்கள் வழங்கிப் பெற்று முஸ்லிம்களுக்கு முழு உடைமையாக்கி வைத்தனர்.

## 3. புகலிடம் (shelter) வழங்குதல்.

பாதுகாப்புடன் வாழ்வதற்குரிய இருப்பிடமின்றித் தவிக்கும் ஒரு குடும்பத்தினருக்கு, வீடு வழங்கி உதவிக் கரம் நீட்டுவது, போற்றுதலுக்குரிய ஒரு நற்செயலாகும்.

வீட்டைப் பெறுபவர்கள் மகிழ்ச்சியும், மனநிறைவும் பெறுவர். மழை, வெயில், காற்று மனிதர்கள் மற்றும் பிராணிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

திருமறை கூறுகிறது:

**"அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுக்கு எதையும் இணைவைக்காதீர்கள்; தாய் தந்தையருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், உறவினரான அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், வழிப் போக்கருக்கும், உங்கள் வலக் கரங்கள் சொந்தமாக்கிக் கொண்ட அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்.**

- அல்குர்ஆன் (4:36)

**நபி (ஸல்) அவர்கள் கூறினர்: "ஒரு முஸ்லிமுக்கு புகலிடம் தரும் ஒருவருக்கு, மறுமையில் உயிர் கொடுத்து எழுப்பப் படும் நாளில் அல்லாஹ் நிழல் வழங்குவான்"**

(ஸஹீஹ் முஸ்லிம்)

## 4. நிலம் வழங்குதல்:

ஒருவருக்கு நிலம் அன்பளிப்புச் செய்து, அதன் உரிமையை வழங்குதல் மிக்குயர்ந்த ஒரு செயலாகும். நிலத்தைப் பெறுபவரின் வளர்ச்சிக்கும், வாழ்வாதாரத் துக்கும்பேருதவியாக அமையும்.

திருமறை கூறுகிறது:

**"மனிதர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நம்பிக்கை கொள்ளுங்கள். இன்னும் அல்லாஹ் உங்களுக்கு முன் சென்றவர்களின் எப்பொருள் களுக்கு உங்களை பிரதிநிதி களாக ஆக்கினானோ, அப் பொருள்களிலிருந்து நீங்கள் தானம் செய்யுங்கள். உங்களில் எவர்கள் நம்பிக்கை கொண்டு தானம் செய்கிறார்களோ, அவர்களுக்கு பெரியதொரு கூலி உண்டு."**

- அல் குர்ஆன் (57:7)

இறைவன் படைப்பில் மரங்களின் பணி மகத்தானது. எண்ணிலா நன்மைகளைச் சொரிந்து, வழங்கி வாழ்கின்றன. பயனுள்ள பிராண வாயுவை வழங்கி, இவர் தரும் கரிய மிலவாயுவை நீக்கி விடுகின் றன. கனிகள் வழங்கியும், நிழல் தந்தும் உதவுகின்றன. மழை பொழிய இன்றியமையாததாக உள்ளன. மரத்தின் அனைத்து பகுதிகளும், பயன் தருவதாகவே காண்கிறோம்.

"ஒருவரின் கையில், மரணிக்கும் தருணம், ஒரு செடியிருப்பின், அவர் உடனே பூமியில் நட்டு விடுக" என்பதும்,

"ஒரு முஸ்லிம் செடி அல்லது விதையை பூமியில் நட்டு வளர்த்த பின், அது மரமாக வளர்ந்து, அதன் நிழ லில் தங்கியும், அதன் கனிகளை உண்டும் மனிதர்களும், பிராணிகளும் பயனடைவது, அவருக்கு ஸதகா என்ற விருப்பக் கொடையாகும்" என்பதும் நபி மொழியாகும்.

## 5. நிவாரணி

ஒருவர் நோயினால் துன்புறும் போதும் அல்லது பல்வேறு பிரச்சனைகளால் இடர்படும் போதும், உதவுவது ஒரு மகத்தான செயலாகும். அது பரிவின் வெளிப்பாடாகும். நிவாரணம், இடர்களைக் குறைக் கின்றது. அல்லது நீக்கி விடு கிறது, வாழ்வில் நம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

**"நான் நோயுற்ற தருணத் தில் அவனே என்னை குணப்படுத்தினான்."**

-அல் குர்ஆன் (26: 80)

**நபி (ஸல்) அவர்கள் கூறினர்: "அல்லாஹ்வின் அடியார்களே! சிகிச்சை செய்து கொள்ளுங் கள். ஏனெனில், அல்லாஹ் எந்த நோயையும், அதற்கான நிவாரணியை அளிக்காமல் ஏற்படுத்துவதில்லை.**

[முதுமை என்னும் நோயைத் தவிர]''

(திர்மிதீ, அஹமது, ஹாக்கிம்)

நோயுற்று, துயருற்றவரை சென்று சந்தித்து, ஆறுதல் கூறும் செயல் மிக்க சிறப்பிற் குரியதாகும். 'நோயுற்றவரை வினவ எவர் மாலையில் செல்கின்றாரோ, அவருடன் எழுபதாயிரம் வானவர்களும் புறப்பட்டுச் சென்று, அவருக் காக விடியும் வரை பாவ மன்னிப்புக் கோருகின்றனர். மேலும், அவருக்குச் சுவனபதி யில் ஒரு சோலையும் குறிக்கப் பட்டு (ஒதுக்கப்பட்டு) விடு கிறது. அன்றி, எவர், காலை யில் செல்கின்றாரோ, அவ ருடன் எழுபதாயிரம் வானவர் கள் புறப்பட்டுச் சென்று, அவ ருக்காக மாலை வரை பாவ மன்னிப்புக் கோருகின்றனர். மேலும் அவருக்காக சுவனபதி யில் ஒரு சோலை குறிக்கப் பட்டு (ஒதுக்கப்பட்டு) விடு கிறது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினர்.

அறிவிப்பவர்: ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்.

(ஆதாரம்: அபூதாவூத், திர்மிதீ)

''நோயாளியை எவர் வினவு கின்றாரோ அவர் திரும்பும் வரை, சுவனபதியின் கனிகளை கொய்து கொண்டிருப்பவராவார்'' என்று நபி [ஸல்] அவர்கள் கூறி னர். அறிவிப்பவர்: ஹள்ரத் ஸவ்பான் (ரளி) அவர்கள், (ஆதாரம்: (முஸ்லிம், திர்மிதீ).

கடன், சொத்துப்பிரிவினை போன்ற மற்ற பிற சிரமங்களுக் கும் உட்பட்டவர்களுக்கு உதவிக் கரம் நீட்டல் மனித நேயத்தின் வெளிப்பாடேயாகும்!

## 6. நேரம்

நேரம் என்பது விலை மதிக்க முடியாத ஒரு சொத்து. அதைப் பயனுள்ள வழியில் பயன்படுத்துவதே அறிவு சார்ந்தது. அதனை சக மனிதர்களுக்காகவும், நாம் பகிர்ந்து கொள்வது, பண்பு மிக்க செயலாகும்.

திருமறை வழிகாட்டுகிறது:

''காலத்தின் மீது சத்திய மாக! மனிதன் [தன் ஆயுளை வீணில் செலவு செய்து] நிச்சய மாக நஷ்டமடைந்து விட்டான். ஆயினும், எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக் கொருவர் உபதேசம் செய்து [பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும், ஏற்படும் கஷ்டங்களை] சகித்துக் கொள்ளுமாறும் ஒருவருக் கொருவர் உபதேசம் செய்து வந் தார்களோ, அவர்களைத்

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

தவிர (இவர்கள் நஷ்டமடைய வில்லை)."

–அல்குர்ஆன் (103: 1,2,3).

"காலம் என்பது மனித வாழ்வில் ஒரு பொற்களஞ்சியம்; கிடைப்பதற்கரிய கருவூலம் ஆகும். காலம் என்பது மனிதனில் பாதியாகும். யார் அதன் மதிப்பை உணராமல் வீண் விளையாட்டில் ஈடுபட்டு – பாவமான செயல்களில் மூழ்கி கால நேரத்தை வீணடிக்கிறார்களோ, அவர்கள் உண்மையில் தம்மைத் தாமே தற்கொலை செய்து கொள்பவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஒவ்வோர் உறுப்பிலிருந்தும் உயிர் பிரிந்து மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பவரைப் போன்ற பரிதாப நிலை தான் அவர்களின் நிலை."

(தஃப்சீர் இப்னு கஸீர் பாகம் 10, பக்கம் 423)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்: "ஐந்துக்கு முன் ஐந்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்; முதுமைக்கு முன் இளமை; நோய்க்கு முன் உடல் நலம்; ஏழ்மைக்கு முன் செல்வம்; பணிக்கு முன் ஓய்வு நேரம்; மரணத்திற்கு முன் வாழ்வு."

(ஹாக்கிம்)

ஆகவே, பெறற்கரிய நமது நேரத்தை, மற்றவர்களின் தேவைக்காக, பகிர்ந்து சேவையாற்றுவது, மனம் நிறையும் நற்செயலாகும். (தொடரும்)


# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**

**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
**Tel : +91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

# இந்தியா என் தாய்நாடு

– தென்காசி மஸ்ஊது

உலகளவில் கருப்பைவாய்ப்புற்றுநோயால் பாதிக்கப்படும் 5 பேரில் ஒருவர் இந்தியராம்.

★ ★ ★

மார்ச் 8, உலக பெண்கள் தினத்தில், கவனம் பெற்ற இந்திய பெண்கள் வரிசையில் நிகர் ஷாஜி என்பவரும் இடம் பெற்றுள்ளார். சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்டிருக்கும் ஆதித்யா எல் - 1 விண்கலத்தின் திட்ட இயக்குனர் ஆவார். தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் பிறந்த இவர் 1987ஆம் ஆண்டு இஸ்ரோவில் பணியில் சேர்ந்தார்.

★ ★ ★

இந்தியாவில் கார்கள் திருட்டு போவதில் டெல்லி முதலிடத்திலும், சென்னை இரண்டாம் இடத்திலும் உள்ளன. இந்த திருட்டில் மாருதி சுசுகி வகை கார்கள்தான் 47 சதவீதமாக உள்ளன.

★ ★ ★

அனைத்து இந்துக்களும் உருவ வழிபாடு செய்பவர்கள் அல்ல; இந்து மதத்தின் அங்கமான ஆரிய சமாஜ் உருவ வழிபாட்டை எதிர்க்கிறது.

துக்ளக் (20 .03.24)

★ ★ ★

உலகில் அதிக விஷத்தன்மை கொண்ட பாம்புகள் மட்டும் வசிக்கும் தீவு ஒன்று பிரேசில் நாட்டில் உள்ளது. இங்கே நான்காயிரத்திற்கும் அதிகமான பாம்புகள் உள்ளன.

★ ★ ★

உலகம் முழுவதும் 2021ஆம் ஆண்டில் மட்டும் 1.10 கோடி பேர் நரம்பியல் நோய்களால் மரணமடைந்துள்ளார்கள்.

★ ★ ★

உலகளவில் சாலை விபத்துக்களால் அதிகம் உயிரிழப்பு ஏற்படும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது.

★ ★ ★

உலகில் அதிகம் காற்று மாசு கொண்ட தலைநகரங்கள் வரிசையில் டெல்லியும் உள்ளது.

★ ★ ★

உலக வரலாற்றில் “அதிகளவு வெப்பமான ஆண்டு - 2023” என ஐரோப்பிய ஒன்றிய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# நுகர்ந்தவை

**நூல் : வரலாற்று ஒளியில் பெரிய வடகரை**
**ஆசிரியர் :** மவ்லவீ **பி.எம்.கலீலூர் ரஹ்மான் மன்பயீ** M.A.,M.Phil.,
**பக்கங்கள்: 192; விலை : ரூ.150/-**
**கிடைக்குமிடம்: ஸபா பப்ளிகேஷன்,**
21/10, 14வது குறுக்குத் தெரு,
மந்தை வெளிப்பாக்கம்,
சென்னை – 600 028.
அலைபேசி : 9444314976;
8428279249

பன்னூல் ஆசிரியர் மவ்லவீ பி.ஏ.கலீலூர் ரஹ்மான் மன்பஈ ஹஸ்ரத் எழுதிய வரலாற்று நூல் இது. நூலாசிரியர் இந்நூல்மூலம் சிறந்ததொரு வரலாற்றுச் சித்திரத்தை நம் கண் முன்னால் நிறுத்துகிறார்.

பெரிய வடகரை கிராமமுள்ள பெரம்பலூர் மாவட்டத்தை யார் யாரெல்லாம் ஆண்டார்கள் என்கிற வரலாற்றுத் தரவை மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளார். ஓர் ஊரின் வரலாற்றையே பதிவு செய்வதென்பது சவாலான பணி. அதனை சரியாகச் செய்துள்ள நூலாசிரியர் மிகவும் பாராட்டிற்குரியவர்.

“வரலாற்று ஒளியில் பெரிய வடகரை” எனும் இந்த வரலாற்று நூலில் இவ்வூரில் வாழ்ந்த சங்கைமிகு உலமாபெருமக்களின் வரலாறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வூரில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல் பற்றி மிகத் துல்லியமாக எழுதப்பட்டுள்ளது. இச்சமுதாயத்திற்கு அரும்பணியாற்றிய பெரும் பெரும் உலமாபெருமக்கள் இவ்வூரைச் சார்ந்தவர்கள் என அறியும்போது நமக்கு மட்டற்ற மகிழ்வு ஏற்படுகிறது.

வரலாறு மறக்கப்படாமல் வரலாறு திருத்தப்படாமல், மறைக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால் நம் வரலாறு தாமதமின்றி உடனே பதிவு செய்யப்பட வேண்டும். முஸ்லிம்களின் பல வீழ்ச்சிகளுக்கு நம் உண்மையான வரலாறு பதியப்படாததே காரணமாகும். இந்த வரலாற்று நூலை எழுதிய நூலாசிரியர் மற்றும் இதனை வெளியிட்ட பெரிய வடகரை ஜாமிஆ மஸ்ஜித் நிர்வாகிகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

* * * * * *

**நூல் : இன்றைய இஸ்லாம்**
**தொகுப்பாசிரியர் :** முனைவர் **அ.பிச்சை**
**பக்கங்கள்:248; விலை: ரூ. 250/-**
**வெளியீடு :**
**நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்,**
5/43, யூனிகான் காம்ப்ளக்ஸ்,
குருவிக்காரன் சாலை,
மதுரை – 625 020.
அலைபேசி : 9080330200;
9843008113

சில ஆண்டுகள் கல்வித் துறையில் ஈடுபட்டு, பின்னர் திண்டுக்கல் காந்தி கிராமப் பல் கலைக்கழகத்தில் 31 ஆண்டுகள் பணியாற்றி, ஓய்வு பெற்ற முனைவர் அ.பிச்சை அவர்கள் பல்வேறு நூற்களை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நிலையில், "இன்றைய இஸ்லாம்" எனும் அழகிய நூலை சுவை குன்றாமல் தமிழ் உலகத்திற்கு தந்துள்ளார். நூலை படிக்க ஆரம்பித்தால் நூலை படித்து முடிக்காமல் கீழே வைக்க மாட்டீர்கள்.

இஸ்லாமிய மார்க்கம், இஸ்லாமிய கலை, இஸ்லாமிய இலக்கியம், இஸ்லாமிய உணவு என்ற பல்வேறு தலைப்புகளில் அரிய தகவல்களை நல்லமுறையில் தொகுத்துள்ளார் நூலாசிரியர் முனைவர் அ.பிச்சை.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் நாம் அறிந்திராத, நாம் அறிய வேண்டிய சுவையான செய்திகளை இந்நூலில் தொகுத்துள்ளார். நூலை நாம் படித்து முடிக்கும்போது ஓர் அற்புதமான நூலை படித்த மன நிறைவு நமக்கு ஏற்படுகிறது.

இதுபோன்று முஸ்லிம் சமுதாயம் பற்றிய நூற்களை முனைவர் அ.பிச்சை அவர்கள் தொடர்ந்து எழுதி வெளியிட வேண்டுகிறோம்.

* * * * * *

**நூல் : மேலப்பாளையமும், தமிழும்**

**ஆசிரியர் : "தாரீகுல் மில்லத்"**
**செ.திவான்** M.A.,M.Phil.,

**பக்கங்கள்:116; விலை : ரூ.120/–**

**கிடைக்குமிடம் :**

**ரெகான் – ரய்யா பதிப்பகம்,**
106F, 4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.
அலைபேசி : 9080330200

மேலப்பாளையத்தைச் சார்ந்த வெள்ளை கலீஃபா சையது அஹ்மத் (ரஹ்) அவர்கள் எழுதிய 90 நூற்களின் பெயர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மேலப்பாளையத்திலுள்ள தர்ஹாக்களின் பெயர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சையது முஹையதீன் கவிராசர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது பாடிய முனாஜாத்துகளும், கவிராசர் நிகழ்த்திய அற்புதங்களும் இந்நூலுக்கு அணி சேர்க்கின்றன.

மேலப்பாளையம் ஈன்றெடுத்த எழுத்தாளர்கள், திருகுர்ஆன் மொழிபெயர்ப்பு வெளியாக உதவி புரிந்தவர்கள், கவிஞர்கள் ஆகியோரை அறிமுகப்படுத்தும் அரிதான நூல் இது. வரலாற்றுப் பேரறிஞரின் கடும் உழைப்பு ஒவ்வொரு பக்கத்திலும் பளிச்சிடுகிறது. வாழ்த்துக்கள் தாரீகுல் மில்லத்!

ஆய்வு : **பாவா**

# சூட்சுமத்தை உணர்த்தும் சூஃபியாக்களின் சொற்கள்...

மவ்லவீ **பி.எம்.கல்லூர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

ஞானி ஹஸன் முதல் முறையாக பக்தாத் வந்தார். அங்கே தங்குவதற்கு அறைகளைத் தேடினார். இவருக்கு அந்த ஊரில் யாரும் அறிமுகம் இல்லாததால் எவரும் அறை வழங்கவில்லை.

இந்நிலையில் ஊரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த ஒரு வீட்டிற்கு சென்றார். அந்த வீட்டின் உரிமையாளரிடம் விபரத்தைக் கூறி, "இன்று ஓர் இரவு மட்டும் இங்கு தங்கிக் கொள்ள அனுமதி தாருங்கள்" எனக் கேட்டார். மேலும் "நாளை வேறு அறைகளில் தங்கிக் கொள்வதற்கு தாங்கள் எனக்காக சிபாரிசு செய்ய வேண்டும்" எனவும் வேண்டி நின்றார்.

அப்பொழுது அந்த வீட்டின் உரிமையாளர், "நான் ஒரு திருடன்; நீங்கள் என் வீட்டில் வேண்டுமானால் இன்று தங்கிக் கொள்ளுங்கள், நான் சிபாரிசு செய்தால் யாரும் உங்களுக்கு வீடு தர மாட்டார்கள்; நீங்கள் விரும்புகிற வரை இங்கேயே தங்கிக் கொள்ளுங்கள்; எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை" எனக் கூறினான்.

அந்தத் திருடன், "நான் என் வேலையை பார்க்கச் செல்கிறேன்; நீங்கள் தங்கி ஓய்வெடுங்கள்" என்று சொல்லி விட்டு சென்று விட்டான்.

விடியற்காலையில் திருடன் வீட்டுக்கு வந்தான். ஞானி ஹஸன் தஹஜ்ஜத் தொழுது கொண்டிருந்தார். திருடனைப் பார்த்ததும், "போன காரியம் நிறைவேறியதா?" என்று கேட்டார். "இன்று ஒன்றும் கிடைக்கவில்லை. நாளை ஏதேனும் கிடைக்கலாம்" என சாதாரணமாக சொல்லி விட்டு அவர் உறங்கச் சென்று விட்டான்.

இப்படி ஒரு மாத காலம் தொடர்ந்தது. அந்தத் திருடனுக்கு எந்த வருவாயும் கிடைக்கவில்லை. தினம் தினம் ஏமாற்றத்தோடு தான் திரும்பினார். ஆனால் ஒரு நாள் கூட அவர் அலுத்துக் கொள்ளவில்லை, வருத்தப்படவில்லை, கைசேதப்படவில்லை, வேதனைப்படவில்லை. நாளை கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் ஒவ்வொரு நாளும் அவர் நாட்களை கடத்தினார்.

பிற்காலத்தில் ஹஸன் ஞானம் பெற்ற பிறகு சொன்னார்: "என் ஞானகுரு அந்தத் திருடன் தான். தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து ஒரு காரியத்தை செய்வதைப் பார்த்து நானும் கற்றுக் கொண்டேன். எனக்கும் ஞானம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து நான் இறை வழிபாட்டில் ஈடுபட்டேன். ஞானம் பெற்று விட்டேன்" என்று சொன்னார்.

எனவே ஞானம் பெறுவதாக இருந்தாலும், எதை அடைய வேண்டுமானாலும் அதற்கான வழியை தொடர்ந்து கடைபிடித்து வரவேண்டும்.

கடப்பாறை பெயர்க்க முடியாத பாறையை மரத்தின் வேர்கள் இரண்டாகப் பிளந்து விடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அது போல தான் நமது ஏதோ ஒரு சிறிய செயல் நம்மை ஞான வாசலை திறக்க வைத்து விடும்.

## ஒரு வழிபாட்டில் ஊன்றிடுக!

பெரியதிலிருந்து சிறியதை கொண்டு வர மனிதனால் முடியும். பெரிய வேட்டியை சிறு துண்டாக்க அவனால் முடியும். ஆனால் சிறு துண்டை சேலையாக்க அவனால் முடியாது. ஆனால் இயற்கை சிறு விதையிலிருந்து பெரிய மரத்தைப் படைத்துக் காட்டிவிடும்.

ஜலாலுதீன் ரூமி தோட்டத்திற்குச் சென்றார். அங்கு மூன்று பள்ளங்கள் இருந்தன. என்ன இது? என்று மாணவர்களிடம் வினவினார். "முதலாவது இடத்தில் கிணறு தோண்டினோம். அந்த இடத்தில் தண்ணீர் வரவில்லை. உடனே இரண்டாவதாக வேறொரு இடத்தில் தோண்டினோம். அங்கும் தண்ணீர் வரவில்லை. இப்போது மூன்றாவதாக இந்த மூலையில் தோண்டுகிறோம்" என்றனர்.

"பூமியின் அடியில் எல்லா இடத்திலும் நீர் உண்டு. பல இடங்களில் தோண்டுவதை விட ஒரே இடத்தில் நன்கு ஆழமாகத் தோண்டுங்கள். நீர் பீறிட்டுக் கொண்டு வரும்" என்றார்.

மனிதர்கள் இறைவனை அடைய ஏதாவது ஒரு வழியில் முயற்சிப்பார்கள். பின்னர் அதில் சலித்துப்போய் வேறொரு வழியில் முயற்சி செய்வார்கள். பிறகு அதனைவிட்டுவிட்டுஇன்னொரு முயற்சி மேற்கொள்வார்கள். இப்படி மாறி மாறி முயற்சிப்பதை விட ஒரே முயற்சியை உறுதியுடன் தொடர்ந்து மேற்கொண்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

மூச்சு விட யாரும் மறப்பதில்லை. அதனால் மூச்சு விடுவது பற்றி யாரும் நினைப்பதே

இல்லை. மூச்சு எப்படி இறுதி வரை உள்ளதோ மூச்சு விடுதல் எப்படி இயல்பான தொடர் நிகழ்வோ அதுபோல் தொடர்ந்து ஒரே நற்செயலை செய்து வந்தால் ஞானம் பிறக்கும்.

## ஞானப்பசி

பசி என்ற ஒன்று எடுக்கா விட்டால் உங்கள் முன் எவ்வளவு உணவு வகைகளை அடுக்கி வைத்தும் பலன் இல்லை. பசியே இல்லாதவ ணால் அதிலிருந்து ஒரு பிடி கூட சாப்பிட முடியாது. நன்கு ருசித்து சாப்பிடுவதில் உணவின் தேவை இரண்டாவது இடத்தில் தான் இருக்கிறது. உனக்குள் பசி இருப்பதே இங்கு முக்கியம்.

சிந்திக்கும் திறனற்ற மாண வனுக்கு எத்தனை பேராசிரியர் கள் கூடி அறிவுநூல்களிலிருந்து போதித்தாலும் பலனில்லை. மரமண்டை என்று பள்ளி ஆசிரியர்கள் திட்டுவதுபோல் புத்தியில் எதுவும் ஏறாது. சிந்தனைத் திறன் இருக்கும் மாணவனுக்கு போதிக்க ஆசிரியர்களே இல்லாவிட்டா லும் அந்த நூல்களை அவனே படித்துத் தேர்ந்து விடுவான்.

இதையெல்லாம் தாண்டி யது ஞானப்பசி. மனத்துள் ஆன்ம வேட்கை மூண்டு விட் டால் அவனே மலர்களைத் தேடி வண்டு பறப்பதுபோல் ஞானத்தைத் தேடிச் சென்று விடுவான். இல்லையேல் மகான்களும், ஞானிகளும் அவனைத் தேடி வந்து போதனை செய்யினும் அதனை ஏற்க மாட்டான்.

வயிற்றுப்பசி, உடற்பசி இவற்றையெல்லாம் தாண்டி யது ஞானப் பசி. ஞானம் பெறு வது இரண்டாம் பட்சம்தான். முதலில் அந்த ஞான வேட்கை மனத்துள் ஏற்பட வேண்டும்.

## ஞானம் சுரக்கும் வழி அன்பு

ஒருமுறை சூஃபி ஞானி கபீர் தன் மகனிடம், மாடு களுக்குத் தீனி வைக்க புல் வெட்டிக் கொண்டு வருமாறு சொன்னார். போனவன் நெடு நேரமாகியும் திரும்பி வரவில்லை. பொறுமையிழந்த கபீர் மகனைத் தேடிக் கொண்டு புறப்பட்டார்.

புல்வெளி ஒன்றின் நடுவே அவரது மகன் நின்று கொண்டி ருந்தார். அங்கே சிலு சிலுவென காற்று வீசிக் கொண்டிருக்க புற்கள் அசைந்தாடிக் கொண்டி ருந்தன. அவற்றுடன் கபீரின் மகனும் அழகாக அசைந்தாடிக் கொண்டிருந்தார்.

கோபத்துடன் மகனை உலுக்கிய கபீர், "உனக்கு என்ன பைத்தியமா? என்ன செய்து கொண்டிருக்கிறாய் இங்கே?" என்றார். "நான் இங்கே வந்தபோது இந்தப் புற்கள் எல்லாம் ஏகாந்தமாக காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

சட்டென்று ஓர் ஆனந்தம் என்னையும் தொற்றிக் கொண்டது. நானும் அவற்றுடன் சேர்ந்து ஆட ஆரம்பித்து விட்டேன். என்னை மறந்து நானும் புல்லோடு புல்லாக ஆகிவிட்டேன். ஆஹா! என்ன ஆனந்தம் அது?" என்றார் அவர்.

அதிர்ச்சியடைந்த கபீர், "உன்னை புற்களை வெட்டி எடுத்து வரும்படியல்லவா சொன்னேன்" என்று தான் அவருக்கு இட்ட வேலையைப் பற்றி நினைவூட்டினார்.

"என்னது? புல்லை வெட்டுவதா? என்னால் அது ஒரு போதும் முடியாது. இவை எனக்கு அளவற்ற ஆனந்தம் அளித்தவை. இவற்றுடன் நெருங்கிய உறவு எனக்கு ஏற்பட்டு விட்டது. ஒரு தனி உலகில் இவற்றுடன் நான் இதுவரை இருந்தேன். ஒரு போதும் இவற்றை என்னால் கிள்ளக்கூட முடியாது" என்றார் அவர் பதை பதைப்புடன்.

பிரமித்துப்போன கபீர், அப்போதே தனது மகனுக்கு 'கமால்' என்று பெயர் சூட்டினார்.

கமால் என்றால் பரிபூரணம் என்று பொருள். அந்தப் பெயரே அவருக்கு சூஃபி வரலாற்றில் நிலைத்து விட்டது.

புல்லுக்கும் உயிருண்டு என்றுணர்ந்து அந்த ஜீவனையும் நேசித்த அன்பு உள்ளம் இது.

உலகில் முதலில் தோன்றியவை தாவரங்களே. பின்னர் தான் அனைத்து உயிர்களும் தோன்றின. ஆண்டவன் படைப்பில் தாவரங்களே மூத்தவை. நாம் தான் கடைசியாகப் பிறந்த செல்ல கடைக்குட்டிகள்.

இறைவனுடன், ஆகாயத்துடன் நேரடியான தொடர்பு மனிதனுக்கும், தாவரங்களுக்கும் மட்டுமே உண்டு. இவை இரண்டும் தான் நேராக வானம் நோக்கி வளர்பவை. மற்றபடி புழு, பூச்சி முதல் யானை திமிங்கிலம், ஒட்டகம், மலைப்பாம்பு எல்லாமே பக்கவாட்டில் நீண்டு வளர்பவைதான்.

எனினும் மனிதனுக்கும், தாவரங்களுக்கும் ஒரு மிகப் பெரிய வேறுபாடு உண்டு. புழு, பூச்சி முதல் திமிங்கலம், ஒட்டகம், மலைப்பாம்பு என அனைத்து உயிர்களும் பக்கவாட்டில் உணவு எடுத்து பக்கவாட்டில் செலுத்தும். மனிதன் மேற்புறமாக உணவெடுத்து கீழ்ப்புறமாக செலுத்துகிறான். தாவரங்கள் மட்டுமே கீழ்ப்புறமாக உணவை எடுத்து மேல் நோக்கி செலுத்தும், அதே சமயம் மேற்புறமாகவே வளரும்.

வேர்கள் பூமியுடனும், உச்சி ஆகாயம் நோக்கியும் செல்வதால் இயற்கையுடன் ஒன்றி வாழும் ஒரே ஜீவன் தாவரங்கள் மட்டுமே.

எனவே நமக்கும் முன்னால் பிறந்த தாவரங்களை சூஃபி கபீர்

العرفة لخدمات الحج والعمرة

# அல் அரஃபா ஹஜ் சர்வீஸ்

# AL ARAFAH HAJJ SERVICE

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையால்
தொடர்ந்து 17-ஆம் ஆண்டு சேவையில்....

இன்ஷா அல்லாஹ்...
2025

## புனித ஹஜ்

# ₹5,50,000/-

முதல்.....

மாதந்தோறும்

## உம்ரா

# ₹95,000/-

**பயணங்களுக்கு முன் பதிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது**

எண். 3/4, பத்மாவதி நகர், அண்ணாசாலை,
**மேடவாக்கம், சென்னை -100.**

**Mobile : 98400 90067**

Email : hajjalarafah@gmail.com

அவர்களின் மகனார் நேசித்தது போல் நாமும் நேசிக்க வேண்டும்.

## இல்லற வாழ்விற்கும் ஸூஃபி வழிகாட்டுதல்

ஸூஃபி ஞானி கபீரை தேடிக் கொண்டு பலரும் வருவார்கள். அவர்களது சந்தேகங்களை எல்லாம் அவரிடம் தெரிவிப்பார்கள். அவரும் பொறுமையுடன் எல்லாவற்றிற்கும் பதிலளிப்பார்.

ஒருநாள் அவரிடம் வந்தவர்கள் எல்லாம் போய் விட்டனர். ஒருவர் மட்டும் தனியாக அமர்ந்திருந்தார். மாலைப் பொழுதும் ஆகிவிட்டது. அவர் இருந்த இடத்தை விட்டு அசைவதாக இல்லை.

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் கபீர். வந்தவர் தயங்கினார்.

அவரது முகத்தைப் பார்த்து கபீர் சொன்னார் : "உங்கள் முகத்தைப் பார்த்தால் உங்களுக்கு இல்வாழ்க்கையில் சந்தோஷமே இல்லை என்று தெரிகிறது. நான் சொல்வது சரியா?"

வந்தவர் ஆச்சரியப்பட்டார். "என் மனைவியும், நானும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தவில்லை. என் பேச்சை அவள் மதிப்பதே இல்லை. நாள் முழுவதும் எங்களுக்குள் போராட்டம்தான். வாழ்க்கையே நரகமாக இருக்கிறது" என்று வந்தவர் கூறினார்.

ஸூஃபி கபீர் இதற்கு பதில் ஏதும் சொல்லவில்லை. தன் மனைவியை அழைத்து இருவருக்கும் பால் கொண்டு வரும்படி சொன்னார். அவர் மனைவி பால் கொண்டு வந்து வைத்ததும் இருவரும் குடிக்க ஆரம்பித்தனர். வந்தவரின் முகம் அஷ்டகோணலாக சுருங்கியது. காரணம் அந்தப் பாலில் இனிப்பே இல்லை. இனிப்பு போட மறந்துவிட்டார் அவர் மனைவி.

ஆனால் கபீர் முகம் கோணாமல் பாலை அமைதியாகக் குடித்துக் கொண்டிருந்தார். உள்ளிருந்து அவர் மனைவி "போதுமா? எல்லாம் சரியாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

"போதும். ருசியாக இருக்கிறது" என்றார் கபீர். வந்தவர் கேட்டார். "என் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லையே?"

கபீர் சொன்னார் : குவளையைக் காட்டியபடி, "இதுதான் என் பதில். குறைகளைப் பெரிதுபடுத்தாமல் விட்டுக் கொடுத்துப் போவதே இனிய இல்வாழ்க்கைக்கு வழி"

எதையும் பெரிதுபடுத்தாமல், இதுதான் நடக்கவேண்டும், இப்படித்தான் இருக்க வேண்டும் என எல்லாவற்றையும் தன் இஷ்டத்துக்கு வளைக்காமல் அதன் இஷ்டப்படி விட்டுக் கொடுத்துப் போவதே ஸூஃபிகளின் மார்க்கமாக என்றுமே இருந்து வந்துள்ளது.

எனவே நமது இல்லற வாழ்வு எந்த வகையிலும் பாதிக்காமல் இருக்க சூஃபியாக்களின் இல்லற வாழ்வும் நமக்கு வழி கட்டுகிறது.

## ஞானம் பெறுவதே முதன்மையானது

முல்லா நஸ்ருதீன் ஒரு நாள் தெரு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அவருக்கு எதிரே பள்ளிக் குழந்தைகளை கூட்டமாக அழைத்துக் கொண்டு ஓர் ஆசிரியர் வந்து கொண்டிருந்தார்.

"பிள்ளைகளை அழைத்துக் கொண்டு எங்கே செல்கிறீர்கள்?" என்று அவரைப் பார்த்து முல்லா கேட்டார்.

"நாட்டில் மழை இல்லை. குழந்தைகள் களங்கமற்ற மனம் கொண்டவர்கள். இந்தக் குழந்தைகளின் தூய இதயங்களின் பிரார்த்தனைக்கு இறைவன் உடனே செவி சாய்ப்பான். ஆகவே அவர்களை அழைத்துச் சென்று மழை வேண்டி பிரார்த்தனை செய்யப் போகிறோம்."

இதைக் கேட்டு சிரித்தார் முல்லா; ஒரு சிறுவனை அழைத்து "உலகத்தில் உனக்குப் பிடிக்காத இடம் எது?" என்று கேட்டார். "பள்ளிக் கூடம்" என்றான் அந்தச் சிறுவன். வேறொரு பையனிடம் "உலகத்தில் உனக்குப் பிடிக்காத மனிதர் யார்?" என்று கேட்டார். "என்னுடைய கணக்கு வாத்தியார்?" என்றான் அவன்.

"பார்த்தீர்களா?" என்றார் நஸ்ருதீன். "குழந்தைகள் இஷ்டப்பட்டது எல்லாமே நடக்கும் என்றால் உலகின் எல்லா பள்ளிக்கூடங்களும் தீப்பற்றி எரியும். அதிலுள்ள எல்லா ஆசிரியர்களும் செத்து விடுவார்கள்" என்றபடி தன் வழியே போனார்.

குழந்தைகள் அறியாமையில் இருப்பவர்கள். அதனாலேயே அனைவரது அன்புக்கும் பாத்திரமானவர்கள். ஆனால் அதற்காக அறியாமையை போற்றிக் கொண்டாட முடியாது. அறியாமையிலிருந்து அறிவை நோக்கிய பயணமே கல்வி என்பது. அதே போல் வாழ்விலிருந்து ஞானத்தை நோக்கிய பயணமே உண்மையான உயிரோட்டமுள்ள கல்வியாகும்.

## நடுநிலை சூஃபியாக்களின் நிரந்தர நிலை

புத்தரிடம் ஒருவன் கேட்டான். "உங்களுக்கு கடவுளிடமிருந்து என்ன கிடைத்தது?" என்று; புத்தர் சிரித்தார்; "நான் எதையும் பெறவில்லை. அனைத்தையும் இழந்தேன். அதனால் என்றும் இருத்தல் என்பதை உணர்ந்தேன்" என்றார்.

பெறுபவன். கொடுப்பவன் - இந்த இரண்டும் அற்ற நிலை சூஃபி நிலை. சூஃபிகள் எதையும் வேண்டுவது இல்லை. சூஃபியிசத்தின்

தத்துவம் இதுதான். வாழ்வில் பாதிப்பேர் சொர்க்கத்தை அடைவதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருக்கின்றனர். மீதிப் பேர் நரகம் பற்றியே சதா சர்வ காலமும் எண்ணிக் கொண்டிருப்பதால் அச்சத்துடனேயே வாழ்க்கையை கழிக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி, அந்த அச்சம் இரண்டும் அற்றவர்கள்தான் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர். இந்த சந்தோஷமே வாழ்வின் தெய்வீக அம்சம் ஆகும்.

## நாம் இதயத்தின் அடிமைகளா?

அரசன் ஒருவன் ஞானியிடம், "என் மனம் அமைதியின்றி தவிக்கிறது" என்றான்.

"அப்படியா! உன் மனத்தை என்னிடம் கொடுத்துவிட்டு போ.. நாளை வந்து வாங்கிக் கொள். அதற்குள் சரி செய்து வைக்கிறேன்" என்றார் ஞானி.

"மனத்தை எப்படி எடுத்துத் தருவது? அது எனக்குள் அல்லவா இருக்கிறது?" என்றான் அவன்.

"அப்படியா! சரி. கண்களை மூடிக் கொண்டு உனக்குள்ளே எந்த இடத்தில் அந்த மனம் இருக்கிறது? என்று கண்டுபிடி" என்றார் ஞானி.

நமது மனம் எங்குள்ளது என்பதை நாம் உணர முடியாத வரையில் மனம்தான் நமது அரசன். அதன் அடிமைகளாகத் தான் ஆயுள் முழுவதும் நாம் செயல்பட்டுக் கொண்டிருப்போம். உள்மனம் எங்கே? என்று நீ தேடத் துவங்கும் போதே உள்மனம் பதுங்க ஆரம்பித்து விடும். அதனை நீ தேடிக் கண்டுபிடித்த மறுகணமே அது மறைந்து போய்விடும்.

தன்னை உணர்ந்த ஞானிகள் எல்லோரும் தன்னை மறந்தவர்களாக இருப்பதாக வரலாறு கூறுகிறது. இயற்கையின் எதிர்மறையான விநோதம் இது. தனை இழப்பதன் மூலமே ஒருவன் தன்னை உணர முடியும்.

## உணர்வுகளை எழுத முடியாது

இந்து மன்னர் ஒருவர் தினமும் ஹள்ரத் அபூயஜீதுல் புஸ்தாமி (ரஹ்) அவர்களிடம் வருவார்.

"வாழ்வின் ரகசியத்தை எனக்குக் கூறுங்கள்" என்பார். இவர் வெறும் புன்னகையுடன் பேசாமலிருப்பார்.

ஒருமுறை அவர் நெடு நேரமாக வற்புறுத்தினார். விடாமல் துளைத்தெடுத்தார். அபூயஜீத் கேட்டார் அவரிடம், "என்ன வேண்டும் உனக்கு?"

"வாழ்வின் ரகசியத்தை எனக்குத் தாங்கள் கூறவேண்டும்"

"ஒரு விஷயத்தை ரகசியம் என்று கூறிய பின்னர் அதை எப்படி மற்றவரிடம் சொல்ல

முடியும்? பிறரிடம் கூறினால் அது எப்படி ரகசியம் ஆகும்?" என்றார் அபூயஜீத்.

"நான் உங்களிடம் சத்தியம் செய்கிறேன். அதை யாரிடமும் கூற மாட்டேன்."

"நானும் அப்படித்தான். யாரிடமும் கூறமாட்டேன்" என்றார் அபூயஜீத்.

அங்கே கூறுவதற்கு ஒன்றுமே இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மை. உணர்வால் அறியக்கூடியதை, உணர்வால் ஒன்றக்கூடியதை வார்த்தைகளால் விவரிக்க வழியே கிடையாது. அப்படி வார்த்தைகளால் விளக்க முற்படும்போதே மூலத்திலிருந்து விலகிச் செல்ல ஆரம்பித்து விடுவோம்.

எல்லாம் அடங்கியதே முழுமை. அதில் ஒன்றை எடுத்து இதுதான் முழுமை என்று எப்படிக் கூறுவது?.

மௌனத்தை எப்படி வார்த்தைகளால் விவரிக்க முடியும்? ஓசை வந்ததுமே மவுனம் அகன்று விடும்.

## பேதங்கள் போக பற்றற்று இரு!

ஓர் அரசர், ஞானி சூஃபி காஜா முயீனுத்தீன் சிஸ்தி (ரஹ்) அவர்களை சந்தித்தார். "யா ஷைக்! எனக்காக தாங்கள் இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும்."

"நல்லது" என்ற ஞானி பிரார்த்தித்தார்கள். "இறைவா! அனைவரும் மகிழ்வுடன் வாழ வேண்டும். எங்கும் அமைதி நிலவ வேண்டும். அனைவரும் சகல நன்மைகளும் பெற்று நிம்மதியாக இருக்க வேண்டும்."

அவரது வழிபாடு மன்னருக்கு ஏமாற்றத்தை அளித்தது. பிரார்த்தனை முடிந்ததும் அவர் ஞானியிடம் கேட்டார்.

"யா ஷைக்! என்ன இது? எனக்காக பிரார்த்திக்கும்படி கேட்டேன். நீங்கள் உலகத்திற்காக பிரார்த்திக்கிறீர்கள். இதில் என் நாட்டின் பெயரோ, என் பெயரோ வரவில்லையே?"

ஞானி சிரித்தார். "அனைவருக்குமாக வேண்டும்போது அதன் பலன் உனக்கு மட்டும் இல்லாமலா போகும்?"

"இருந்தாலும்...?" என்று இழுத்தார் மன்னர். ஞானி அவர்கள், வாளி நிறைய தண்ணீரை எடுத்தார்கள். அரசனிடம் கொடுத்து செடிகளுக்கு அதை ஊற்றும்படி சொன்னார்கள். ஊற்றிவிட்டு வந்தவரிடம் "எங்கே ஊற்றினீர்?" என்று கேட்டார்.

"எல்லா செடிகளுக்கும் ஊற்றினேன்." "செடியின் எந்தப் பாகத்தில் ஊற்றினீர்?" என்று கேட்டார் ஞானி. "வேர்ப் பகுதியில்தான்" என்றார் அரசர்.

"இது என்ன வேடிக்கை? இலைகள் தானே வாடிப்போய் காணப் படுகின்றன? நீங்கள் வேரில் போய் தண்ணீரை ஊற்றியிருக்கிறீரே?" என்றார் ஞானி.

"வேரில் ஊற்றினால் எல்லா கிளைகளுக்கும், இலைகளுக்கும் அதுவே தானாகப் பரவாதா?" என்றார் அரசர்.

"அதேதான் ஒட்டு மொத்த மனித குலத்துக்காகவும் வேண்டும்போது அதன் பலன் அனைவருக்கும் தானே வந்து சேரும்" என்றார் ஞானி.

நான், நீ என்ற பேதங்களை ஏற்படுத்துவதுதான் மனத்தின் அடிப்படை வேலையே. அந்த பேதங்கள் உள்ளவரை மனம் எல்லாவற்றையும் விரும்பும். எல்லோரையும் வெறுக்கும். மனதில் பேதங்கள் அற்றுப் போகும்போது தனிப்பட்ட எதன் மீதும் பற்று உண்டாவதில்லை. அனைத்தின் மீதுமான அன்பு மட்டுமே அதன் வெளிப்பாடாக இருக்கும்.

## அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

ஞானத் தேடலின்போது ஒரு முறை ஹள்ரத் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள் பாலைவனத்தில் நெடுந்தூரம் பயணம் செய்து களைப்புற்றார். கிராமம் ஒன்றை அவர் அணுகியபோது ஒரு வீட்டின் கூரை மீது ஓலைகளை அடுக்கிக் கட்டிக் கொண்டிருந்த ஒரு பெண் அவரைப் பார்த்துச் சிரித்தாள்.

குழம்பிப் போன துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள், "எதற்காக என்னைப் பார்த்து சிரித்தீர்கள்?" என்று கேட்டார்.

"நீர் இந்த கிராமத்தை நெருங்கியபோது உமது கம்பளியைக் கண்டு சூஃபி ஞானி என்று எண்ணினேன். பிறகு உமது முகத்தைக் கண்ட பின்பே நீர் குரு அல்ல சீடர்தான் என்றெண்ணினேன். அருகில் நெருங்கிப் பார்த்த பின்புதான் நீர் சீடர்கூட அல்ல, வெறுமனே ஞானம் தேடி அலைபவர் என்று நினைத்தேன். பிறகு உமது கண்கள் சொல்லின. நீர் ஞானத்தை தேடி அலைபவர் கூட இல்லை என்று. ஞானத்தை தேடுகிறேன் என்ற எண்ணத்திலேயே பெருமிதம் கொள்ளும் ஒரு சவுடால் பேர்வழிதான் நீர் என்று எனக்கு அப்போது நன்றாகத் தெரிந்தது. அதனால்தான் சிரித்தேன்" என்றாள் அவள்.

தன் மேலாடைக்கும், தனது ஞானத்துக்கும் தொடர்பே இல்லை என்று உணர்ந்த மறுகனம் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள் தமது மேலாடையை தூக்கி எறிந்தார்கள். பிறகு இருபது வருடங்களாக அவர் எங்கிருந்தார் என்பதைக் கூட எவரும் அறியவில்லை.

பிறகு ஒருநாள் எகிப்தில் மீண்டும் காணப்பட்டார். அப்

போது அவரது கண்கள் அபாரமாக ஜொலித்தன. "இத்தனை நாள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டனர் பலரும்.

"ஒன்றும் செய்யவில்லை" என்றார் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள். எதைச் செய்தாலும் அங்கே நான் என்பது வந்துவிடுகிறது. எதைச் செய்ய முடியும் அதன் பின்பு. அதை அழிக்கத்தான் எனது கடந்த காலம் எனக்கு பயன்பட்டது.

தூரத்தில் தெரிந்த உருவத்தை பார்த்த பெண்மணி அந்தந்தத் தோற்றம் தனக்கு என்ன மனநிலையை உண்டாக்கியதோ அதை அப்படியே சொன்னார் அந்தப் பெண்மணி. அதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டார் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்கள்.

அதற்குப் பிறகுதான் தன் குறையை தெரிந்து கொண்டு, அதை சரி செய்ய இருபது ஆண்டுகள் தனிமையில் தவமிருந்து தன்னை அறிந்தார்.

நாம் துன்னூன் மிஸ்ரி (ரஹ்) அவர்களையே பெரும் இறைநேசராக கருதுகிறோம். ஆனால் இவர், ஞானம் பெற வழி காட்டியவர் அந்தப் பெண்மணிதான்.

**சுயத்தை இழக்காதவர்கள் சூஃபிகள்**

கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள் அழகான அரபுக்


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் – 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

குதிரை ஒன்று வைத்திருந்தார். அம்மார் என்பவர் அதை வாங்க ஆசைப்பட்டார். அதற்கு ஈடாக பல ஒட்டகங்களும், பெரும் பணமும் தருவதாக சொன்னார். எனினும் கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள் அதற்கு இணங்கவில்லை.

எப்படியாவது அந்த குதிரையை அடைய வேண்டும் என்று அம்மார் முடிவு செய்தார். கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள் குதிரையில் தினமும் சவாரி செய்யும் பாதையில் ஒரு நாள் அவர் அழுக்கு உடைகளுடன் குப்புற விழுந்து கிடந்தார்.

அந்த வழியாக வந்த கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள் பாதையோரம் விழுந்து கிடந்தவரைக் கண்டு பரிதாபப் பட்டார். இறங்கி வந்து அவரைத் தூக்கினார். அம்மார் முனகினார். "ஐயா! நான் பல நாட்களாகப் பட்டினியாக இருக்கிறேன். என்னால் நிற்கக் கூட முடியவில்லை" என்று.

இதையடுத்து அவரைத் தூக்கி தமது குதிரையின் மீது அமர்த்தினார் கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள். மறுகணமே குதிரையுடன் ஓட ஆரம்பித்தார் அம்மார்.

திகைத்துப்போன கலீஃபா சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டார். அதற்குள் அம்மார் வெகு தொலைவிற்கு போய் விட்டான். "நில். ஒரு கணம் நில். நான் சொல்வதைக் கேட்டு விட்டுப் போ" என்றார் அவர் உரத்த குரலில்.

அம்மார் குதிரையிலிருந்த படியே திரும்பிப் பார்த்து, "என்ன?" என்றார் உரத்த குரலில். "உனக்கு இந்தக் குதிரை எப்படி கிடைத்தது? என்பதை எவரிடமும் சொல்லாதே. ஒரு வேளை உண்மையாகவே உடம்புக்கு முடியாதவராக சாலையோரம்எவராவதுவிழுந்து கிடந்தால் கூட மக்கள் அவர் களுக்கு உதவி செய்ய அஞ்சுவார்கள்" என்றார் கலீஃபா மஃமூன் ரஷீத் அவர்கள்.

தனது குதிரை களவு போனது பற்றி கூட அவர் கலங்க வில்லை. மக்களிடையே இது போன்ற செய்திகள் பரவினால் மற்றவர்களுக்கு உதவி செய்ப வர்களும் செய்யாமல் போய் விடுவார்களே என்று தான் அவர் வருந்தினார்.

அந்த இக்கட்டான நிலையிலும் அவர், இறைநினைவோடு கூடிய மக்கள் நலன் கருதிய ஒரு கருத்தையே பேசி இருக் கிறார். இப்படி ஒரு கருத்தை அந்தச் சூழ்நிலையில் எவரும் உடனே பேசி விட முடியாது. அவர் பேசியிருக்கிறார் என் றால் அவர் சூஃபியிசத்தில் மூழ்கி முத்தெடுத்த மாமனிதர் என்பதில் ஐயமில்லை.

# இதழியல் துறையில் முஸ்லிம்கள்

மதுரை பாமரன்

தமிழக முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் இந்த மண்ணின் மைந்தர்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இந்த மண்ணோடும், மண்ணின் பண்பாட்டோடும் ஒட்டியும், ஒன்றியும், பிணைந்தும், தனித்தன்மை குன்றாதும் வாழ்ந்து வருபவர்கள். சகோதர சமுதாயத்தினரைப் போலவே தமிழின் வளர்ச்சிக்குத் துணை நின்றவர்கள். இதழியல் துறையிலும் முத்திரை பதித்தவர்கள்.

தமிழ் இதழியல் உலகில் 1883ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஏராளமான முஸ்லிம்கள் இதழ்களைத் துவக்கி நடத்தி வந்தனர். இதில் தினசரி இதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள் என அனைத்தும் இருந்தன.

அனைத்து இதழ்களின் ஆசிரியர்களையும் பட்டியலிடுவது ஒரு சிரமமான பணியே! எனினும், புகழ்பெற்ற பத்திரிகை ஆசிரியர்களைப் பற்றி மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

**அல்ஹாஜ் மீ.இ.அப்துல் காதிர் சாஹிப் :**

1923ஆம் ஆண்டு தென்காசியில் "முஸல்மான்" என்ற வார இதழைத் துவக்கி, அதன் ஆசிரியராக பணிபுரிந்தவர். இஸ்லாமிய சமயம் மற்றும் அரசியல் சார்ந்த செய்திகளை தமது இதழில் இடம்பெறச் செய்தார். இந்த இதழ் அன்றைய நாட்களில் பெரிய வாசகர் வட்டத்தைப் பெற்றிருந்தது.

**ஜனாப் பா.தாவூத்ஷாஹ் சாஹிப் :**

தமிழக முஸ்லிம் இதழ் ஆசிரியர்களில் மக்களால் பெரிதும் அறியப்பட்டவர். 1923ஆம் ஆண்டு "தாருல் இஸ்லாம்" என்ற அரசியல் வார இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். முதலில் காங்கிரஸ் கட்சியின் செய்திகளுக்கு முன்னுரிமை அளித்த இவர், பின்னர் முஸ்லிம் லீக் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முன்னுரிமை அளித்தார். இஸ்லாமியச் சமுதாயத்தில் அப்போது நிலவிய

சில பழக்க வழக்கங்கள், சடங்குகளை இவர் தமது இதழில் கடுமையாகச் சாடி பல கட்டுரைகள் எழுதினார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் இவருக்கு ஆதரவாளர்கள் இருந்தனர். ஏராளமான மார்க்கம், விஞ்ஞானம், அரசியல் சம்பந்தமான புத்தகங்களை எழுதியுள்ளார். தந்தை பெரியாருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். இவரது இதழில் வெளிவந்த பல கட்டுரைகளைப் பாராட்டி பெரியார் தமது இதழான விடுதலையில் எழுதியுள்ளார். இவரே "தத்துவ இஸ்லாம்" என்ற இதழையும் நடத்தி வந்தார்.

**அல்ஹாஜ்**

**M.R.M.அப்துர் ரஹீம் :**

பன்னூலாசிரியரும், இஸ்லாமியக் கலைக் களஞ்சியத்தைத் தொகுத்தவருமான இவர் 1946ஆம் ஆண்டு "சுதந்திர நாடு" என்ற வார இதழை தொடங்கி நடத்திவந்தார். இதன் துணையாசிரியராக நாவலர் நெடுஞ்செழியன் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கவிஞர் கா.மு.ஷெரீஃப் :**

நாடறிந்த சிறந்த கவிஞரான இவர், "தமிழ் முழக்கம்" என்ற மாத இதழின் ஆசிரியராவார். 1955ஆம் ஆண்டு அப்போது இவர் மா.பொ.சி.யின் தமிழரசுக் கழகத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். எனவே, தமிழ் தேசியம், ஆந்திரா, கேரளா எல்லைப் பிரச்சனைகள் என பல கட்டுரைகளை அதில் வெளியிட்டார். இவரது கவிதைகள் பலவும் இதில் இடம் பெற்றன.

**ஜனாப் மஹ்தி :**

சிறந்த வரலாற்றாசிரியரும், சிறுகதை ஆசிரியருமான இவர், 1956ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "இஸ்லாமியச் சோலை" என்ற மாத இதழின் ஆசிரியர் ஆவார். "மார்க்க உண்மைகள் மலரும் இஸ்லாமியச் சோலை" என்ற முழக்கத்துடன் இந்த இதழை வெளியிட்டார். மஹ்தி அவர்கள் கவிக்கோ அப்துர் ரஹ்மானின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

**"சிராஜுல் மில்லத்"**

**A.K.A.அப்துஸ் ஸமத் :**

"மணிவிளக்கு" என்ற இஸ்லாமிய மாத இதழைப் பல்லாண்டுகள் நடத்திய பெருமைக்குரியவர். இவரது கை வண்ணத்தில் இந்த மாத இதழ் முஸ்லிம் மக்களின் ஒளிவிளக்காக விளங்கியது. முஸ்லிம் லீக் சார்ந்த அரசியல் செய்திகள், கட்டுரைகள்,

சிறுகதைகள், கவிதைகள் என அனைத்து அம்சங்களும் இடம் பெறும் வண்ணம் இந்த இதழை நடத்தினார். இதழ் தோறும் "தம்பிக்கு" என்ற தலைப்பில் அம்மாத முக்கிய அரசியல், சமுதாய நிகழ்வுகளைக் கடிதம் போல் எழுதி வந்தார். இது வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இதே காலகட்டத்தில் "மணிச்சுடர்" என்ற வார இதழையும் தொடங்கி நடத்தி வந்தார். "மணிச்சுடர் - மணிவிளக்கின் ஒளிச்சுடர் - அரசியல் வானில் தனிச்சுடர்" என்ற முழக்கத்துடன் இந்த இதழ் பற்றிய விளம்பரங்கள் அப்போது வெளி வந்தன. இந்த இதழை முழுக்க முழுக்க முஸ்லிம் லீக் இதழாக நடத்தி வந்தார். பின்னர் இந்த "மணிச்சுடர்" இதழ் 1987 ஆம் ஆண்டு தினசரி இதழாக மாற்றப்பட்டு, தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இது முஸ்லிம் லீக்கின் அதிகாரப் பூர்வ நாளிதழ் ஆகும். தமிழகத் தில் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே தமிழ் முஸ்லிம் நாளிதழ் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது இதன் ஆசிரியராக இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவர் 'முனீருல் மில்லத்' பேராசிரியர் கே.எம்.காதிர் முஹையதீன் எம்.ஏ., அவர்கள் இருக்கிறார்கள்.

**நாவலர் A.M.யூசுஃப் சாஹிப் :**

ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக "மறுமலர்ச்சி" என்ற வார இதழை வெற்றிகரமாக நடத்திய சிறப்பிற்குரியவர். அரசியல், சமுதாயம் சார்ந்த கட்டுரைகளை இந்த இதழில் வெளியிட்டு வந்தார். இந்த இதழில் இவர் வாரந்தோறும் எழுதி வந்த தலையங்கங்கள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. முஸ்லிம் லீக்கின் முன்னணித் தலைவராக விளங்கியவர். சிறந்த எழுத்தாளர்; சிறந்த பேச்சாளர். மறுமலர்ச்சி இதழில் "சேரமான் பெருமாள்", "உமர் முக்தார்" ஆகிய சிறந்த வரலாற்றுத் தொடர்களை எழுதியுள்ளார். 1981ஆம் ஆண்டு நெல்லை மாவட்டம் மீனாட்சிபுரம் என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாத்தில் இணைந்தபோது, அதனைக் கொச்சைப்படுத்திய அவதூறுப் பிரச்சாரங்களுக்குப் பதில் கூறும் வண்ணம் ஏராளமான கட்டுரையை "மறுமலர்ச்சி" யில் வெளியிட்டார். மொத்தத்தில் சமுதாயத்தின் போர்வாளாகவே இந்த இதழ் விளங்கியது எனலாம்.

**ஜனாப் ரஹீம் :**

1948ஆம் ஆண்டு "முஸ்லிம் முரசு" என்ற மாத இதழைத் தொடங்கியவர். ஏராளமான இஸ்லாமிய சிறு

கதை எழுத்தாளர்களை அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு. இவரின் துணைவியார் ஜனாபா ரமீஸா, 1961ஆம் ஆண்டிலிருந்து இதன் ஆசிரியராகப் பணியாற்றினார். அவருக்குப் பின்னர், ஜனாப் ஆளூர் ஜலால் இந்த இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**அல்ஹாஜ் ஆ.அப்துல் வஹாப் M.A.,B.Th., :**

தபால் தந்தித் துறையின் தணிக்கைப் பிரிவில் அதிகாரியாகப் பணியாற்றிய இவர், மிகச் சிறந்த மார்க்க அறிஞராவார். 1956ஆம் ஆண்டு "பிறை" என்ற மாத இதழைத் துவக்கி அதன் ஆசிரியராகச் செயல்பட்டார். இந்த இதழில் இவர் எழுதி வந்த "தித்திக்கும் திருமறை" என்ற அல்குர்ஆன் விளக்கக் கட்டுரைகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன. இக்கட்டுரைகளைப் பின்னர் நூலாகவும் வெளியிட்டார்.

**பேராசிரியர் கா.அப்துல் கபூர் :**

1981ஆம் ஆண்டு வெளிவந்த "மதீனா" மாத இதழின் சிறப்பாசிரியர். இறையருட் கவிமணி என முஸ்லிம் மக்களால் அறியப்பட்டவர். மும்மணி மாலை, அரும்பு உள்ளிட்ட ஏராளமான நூற்களை எழுதிக் குவித்தவர். இவரது கை வண்ணத்தில் "மதீனா" இதழ் சிறப்புற்று விளங்கியது. இந்த இதழில் இஸ்லாமிய இலக்கியக் கட்டுரைகளுக்கு முன்னுரிமை கொடுத்து வெளியிட்டார்.

**"சீரிய சிந்தனையாளர்" ஏ.கே.ரிஃபாயீ சாஹிப் :**

முஸ்லிம் லீக் முன்னணித் தலைவர், பன்னூலாசிரியர், நாடாளுமன்ற மேலவை உறுப்பினர். 1961ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு பல ஆண்டுகள் வெளிவந்த முஸ்லிம் லீக்கின் அதிகாரப்பூர்வ ஏடான "உரிமைக் குரல்" வார இதழின் ஆசிரியர்.

**மவ்லானா அ.மு.அப்துல் ஜப்பார் பாகவி ஹள்ரத் :**

1958 முதல் மதுரையிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் "குர்ஆனின் குரல்" மாத இதழின் நிறுவனர். வாசகர்களின் பெரும் வர வேற்புடன், முற்றிலும் இஸ்லாமிய மார்க்கச் செய்திகளைத் தாங்கிய இந்த இதழ் தொடர்ந்து 68 ஆண்டுகளாக வந்து கொண்டிருக்கிறது. ஹள்ரத் அவர்களின் மறைவிற்குப் பின்னர், அவருடைய மகனார் "அஸ்அதுல் மில்லத்" மவ்லானா முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பஈ ஹள்ரத் இந்த இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தி வந்தார். அவர்களின் மறைவிற்குப்பின் அவருடைய மகனார் மவ்லானா முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல் ஹள்ரத் பொறுப்பேற்று சிறப்புடன் நடத்தி வருகிறார்.

**மவ்லானா பி.ஏ.கலீலுர் ரஹ்மான் ரியாஜி :**

1962ஆம் ஆண்டு திருநெல்வேலி பேட்டையில் "ரஹ்மத்" என்ற மாத இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். இஸ்லாமியக் கலைஞான திங்கள் ஏடு என்ற தலைப்புடன் இந்த மாத இதழ் இன்றளவும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இவரது மறைவிற்குப்பின்னர், இவரின் புதல்வர் மவ்லவீ பி.ஏ.கே.அப்துர் ரஹீம் ஃபாஜில் பாகவி ஹள்ரத் இதன் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

**மவ்லானா அபுல்ஹசன் ஷாதுலி ஹள்ரத் :**

திருநெல்வேலியில் 1942ஆம் ஆண்டு "முன்னேற்றம்" என்ற மாத இதழைத் துவக்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றியவர். இது திருநெல்வேலி மாவட்ட முஸ்லிம் லீக்கின் அதிகாரப்பூர்வ ஏடாகும். பின்னர் 1971ஆம் ஆண்டு "ஜமாஅத்துல் உலமா" என்ற மாத இதழைத் துவக்கி னார். ஹள்ரத் அவர்களின் மறைவிற்குப் பின்னர், அவ ருடைய மகனார் மவ்லானா அ.முஹம்மது இப்ராஹீம் பாகவி இந்த இதழைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அவர் மறை விற்குப்பின் அவருடைய மனைவி ஜனாபா ஆயிஷா சித்தீக்கா "ஜமாஅத்துல் உலமா" இதழைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

**ஜனாப் எஸ்.யூ.அப்துல் ஹை சாஹிப் :**

"நல்லூர்ச் செல்வன்" என்று தமிழக முஸ்லிம்களால் அறியப்பட்டவர். இவர் கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முகம் கொண்டவர். மறுமலர்ச்சி வார இதழின் துணையாசிரியராக சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர், 1973ஆம் ஆண்டு திருநெல்வேலி பேட்டையில் "சிராஜ்" என்ற மாத இதழைத் துவக்கினார். பின்னர் 1980ஆம் ஆண்டு முதல் தமது சொந்த ஊரான கடையநல்லூரிலிருந்து இந்த இதழை வெளியிட்டார். சமு தாயத்தின் போர்வாளாக இந்த இதழ் விளங்கியது என்று சொன்னால் அது மிகையாகாது.

**கவிஞர் தா.காசிம் :**

"சமுதாயக் கவிஞர்" என தமிழ் பேசும் முஸ்லிம்களால் அறியப்பட்டவர். 1972ஆம் ஆண்டு "சரவிளக்கு" என்ற திங்கள் இதழைத் துவக்கி நடத்தி னார். இது ஒரு முஸ்லிம் லீக் ஆதரவு இதழாக திகழ்ந்தது.

**பேராசிரியர் கே.எம்.காதர் முஹையத்தீன் :**

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத்

தலைவர் பேராசிரியர், 1981ஆம் ஆண்டு திருச்சியில் "தாருல் குர்ஆன்" என்ற மாத இதழைத் தொடங்கி அதன் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் "மணிச்சுடர்" நாளிதழின் ஆசிரியரும் இவரே.

**அல்ஹாஜ்**
**எஸ்.எம்.கனி சிஷ்தீ :**

சென்னையிலிருந்து வெளிவந்த "முஸ்லிம் குரல்" என்ற வார இதழின் ஆசிரியர். சிறந்த எழுத்தாளர், சமூக ஆர்வலர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

**ஜனாப் சிராஜுல் ஹசன் :**

15.06.1980 அன்று தொடங்கப்பட்ட "சமரசம்" என்ற மாதமிரு முறை வரும் இதழில் பொறுப்பாசிரியராக பணியாற்றினார். சிறந்த எழுத்தாளர்; தொடர்ந்து சமரசத்தில் இவர் எழுதிய இரத்தினச் சுருக்கமான கட்டுரைகள் வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன.

**ஜனாபா அனீஸ் ஃபாத்திமா :**

"நர்கீஸ்" என்ற பெண்களுக்கான இஸ்லாமிய மாத இதழின் ஆசிரியர். 1972ஆம் ஆண்டு முதல் திருச்சியிலிருந்து இந்த இதழ் வெளிவந்தது. இஸ்லாமிய சமயம் சார்ந்த செய்திகள், பெண்களுக்கான அறிவுரைகள், மருத்துவம் மற்றும் சமையல் தொடர்பான குறிப்புகள் எனப் பல்வேறு அம்சங்களையும் இந்த இதழில் இடம் பெறச் செய்தார்.

**அல்ஹாஜ்**
**அப்துர் ரஹ்மான் Ex.M.P., :**

வேலூர் நாடாளுமன்ற மேனாள் உறுப்பினரான இவர், சென்னையிலிருந்து "பிறை மேடை" என்ற மாதமிருமுறை இதழின் ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும் பணியாற்றி வந்தார். முஸ்லிம் லீக் சம்பந்தப்பட்ட செய்திகளுக்கு முன்னுரிமை அளித்து வந்தார்.

**மவ்லானா முஹம்மது**
**இப்ராஹீம் பாகவி**
**தேவ்பந்தீ ஹஜ்ரத் :**

1993ஆம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கும் "மனாருல் ஹுதா" என்ற மாத இதழின் ஆசிரியராவார். மேல்நாட்டு கலாச்சார தாக்கத்தால் ஏற்பட்ட சீரழிவுகளை இந்த இதழில் இடம்பெறச் செய்து, தமிழ் சமுதாய மக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்கள்.

இன்னும் இவையில்லாமல் ஆலிம்களாலும், ஆலிம் அல்லாதவர்களாலும் துவங்கப்பட்ட நூற்றுக்கணக்கான இஸ்லாமிய வார, மாத இதழ்கள்

ஒரு சில ஆண்டுகளிலேயே நிறுத்தப்பட்டு விட்டன.

முஸ்லிம் இதழ்களின் பணி மிகவும் சிரமமானது. எந்த விதமான வணிக நோக்கமும் இன்றி, சினிமா செய்திகள், பரபரப்புச் செய்திகள் ஆகிய வற்றை முற்றிலும் தவிர்த்து தங்கள் இதழ்களை இவர்கள் நடத்த வேண்டிய சூழ்நிலை யில் இருக்கின்றனர். இதழ்கள் நடத்துவதற்கு விளம்பரங்கள் முக்கியமானவை. ஆனால், முஸ்லிம் இதழ்களுக்கு சகோதர சமுதாயத்தினர் நடத்தும் நிறுவன விளம்பரங் கள் கிடைக்க வாய்ப்பில்லை. முற்றிலும் முஸ்லிம் வணிகர்கள், அவர்கள் நடத்தும் நிறுவனங் கள் அளிக்கும் விளம்பரங் களைக் கொண்டே இதழ்கள் நடந்தாக வேண்டும். இதழ்களின் வாசகர்களும் முஸ்லிம்களாகவே இருந்தனர்.

அதிலும் காசு கொடுத்து இதழ் வாங்கிப் படிப்பவர்கள் அல்லது ஆண்டுச் சந்தா செலுத்தி இதழ் வாங்கு வோர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே! இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் பலர் இதழ்கள் நடத்தியது; நடத்தி வருவது ஓர் இமாலயச் சாதனை எனலாம்.

## நிலம் சம்பந்தப்பட்ட தகராறுக்கான தண்டனை!

ஹள்ரத் அபூசலமா அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : எனக்கும், என் கூட்டத்தாருக்குமிடையே ஒரு நிலம் தொடர்பாகத் தகராறு இருந்து வந்தது. நான் ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்களிடம் சென்று அதைப் பற்றிக் கூறினேன். ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள், “அபூசலமா! மண்ணாசையைத் தவிர்த்துக் கொள்க! ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், “யார் அநியாயமாக ஒரு சாண் அளவு நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறாரோ அவரது கழுத்தில் அந்த நிலத்தி(ன் மேற்பகுதியி)லிருந்து ஏழு பூமிகள்வரை (செல்லும் பகுதி) மாலையாக மாட்டப்படும்” என்று கூறியுள்ளார்கள்” என்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

துவக்கம் : 1958

நம்பர் 1 மாத இதழ்

# குர்ஆனின் குரல்

நிறுவனர்கள் :

அல்லாமா **அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி ஹள்ரத்** (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்" **அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ ஹள்ரத்** (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா முஃப்தீ **மு.முஹம்மது இஸ்மாயீல்**

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ ஹள்ரத்



**குர்ஆனின் குரல்** தபால் பெட்டி எண் : 45,

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் : **94420 56547**

E.mail : quraaninkural@gmail.com ★ web : www.quraaninkural.com



**ஓராண்டு சந்தா ரூ.300/- ⬟ தனி இதழ் ரூ.25/-**

**விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :**

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **6851528029** IFSC Code : IDIB000T003

**சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :**

M/s. INDIAN OVERSEAS BANK, Madurai Meenakshi College Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **17570100003467** IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ **அஹ்மதுல்லாஹ்** காஷிஃபீ காஸிமீ

## மிஸ்வாக் செய்வதின் பலன்கள்

1. அல்லாஹ்வின் திருப்திக்கு காரணமாகும். - நபிமொழி
2. நபி (ஸல்) அவர்களை பின்பற்றும் பாக்கியம் கிடைக்கும். (ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்)
3. வாயை சுத்தப்படுத்துகிறது. - நபிமொழி
4. மரணத்தைத் தவிர அனைத்து நோய்களுக்கும் நிவாரணி. (ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள்)
5. பல் ஈறுகளுக்கு சக்தியளிக்கிறது. (ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
6. இரைப்பை வலுப்பெறும்.
7. கண்பார்வை தெளிவாகும்.
8. சளியைப் போக்கும். (ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்)
9. வானவர்கள் அவரை நேசிக்கிறார்கள். (ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள்)
10. தொழுகையின் நன்மை இக்லாஸிற்கு தகுந்தாற்போல் 75 அல்லது 99 அல்லது 400 மடங்கு அதிகரிக்கும். -நபிமொழி
11. உடல் ஆரோக்கியமடையும். -நபிமொழி
12. சிந்தனை சக்தி அதிகமாகும். (ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள்)
13. தலைமுடி அதிகரிக்கும்.
14. உடல் நிறம் பொலிவு பெறும்.
15. பேணுதலாக செய்வதால் ஏழ்மை நீங்கும்.
16. ஷைத்தானிய ஊசலாட்டங்கள் நீங்கும்.
17. பேச்சாற்றல் அதிகரிக்கும். (ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்)
18. உணவு விரைவில் ஜீரணமாகும்.
19. விந்தணுக்கள் உற்பத்தியாகின்றன.
20. விரைவில் முதுமை அணுகாது.
21. இடுப்பை பலப்படுத்தும்.

22. கப்ரில் உறுதுணையாகும்.
23. கப்ரு விசாலமாகும்.
24. மரணத்தருவாயில் கலிமா சொல்ல நினைவூட்டப்படும்.
25. உடலிலிருந்து ரூஹ் இலகுவாக வெளியேறும்.
26. பசியைப் போக்கும்.
27. முகத்தை பிரகாசிக்கச் செய்யும்.
(ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
28. தலைவலியை நீக்கும். (ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
29. கெட்ட நீர் கசிவை நீக்கும்.
30. தாடை வலியை நீக்கும்.
31. பற்கள் வெண்மையாகும். (ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
32. வானவர்கள் முஸாஃபஹா செய்வார்கள்.
(ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
33. கல்வி அதிகரிக்கும்.
34. இதன் பொருட்டால் ரிஸ்க் இலகுவாக கிடைக்கும்.
(ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
35. மூளையின் நரம்புகள் புத்துணர்ச்சி பெறும்.
36. உள்ளம் தூய்மையாகும்.
37. மிஸ்வாக் செய்வதுடன் ஒளூச் செய்து பள்ளிக்கு செல்பவர்களுக்கு பின்னால் வானவர்கள் செல்கிறார்கள்.
38. மிஸ்வாக் செய்வதுடன் ஒளூச் செய்து தொழுபவர் பள்ளியிலிருந்து வெளியேறும்போது வானவர்கள் அவரின் பாவ மன்னிப்பிற்காக துஆ செய்கிறார்கள்.
39. மிஸ்வாக் செய்பவருக்காக நபிமார்களும் பாவமன்னிப்புக் கோருகிறார்கள். (தஹ்தாவீ)
40. குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
41. பேணுதலாக மிஸ்வாக் செய்பவர் ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தை மின்னல் வேகத்தில் கடந்து செல்வார்.
42. அமல்களின் பட்டோலை வலது கரத்தில் கொடுக்கப்படும்.
43. இறைவழிபாட்டில் ஆர்வம் ஏற்படும்.
44. உடல் சூட்டைத் தணிக்கும்.
45. இலகுவாக தேவைகள் பூர்த்தியடையும்.
46. அன்றைய தினம் மிஸ்வாக் செய்யாதவர்களின் நன்மைகளும் இவருக்கு எழுதப்படும்.

47. சுவனத்தின் வாயில்கள் அவருக்காக திறந்து விடப்படும்.
48. நபிமார்களை பின்பற்றி நடந்தவர் என வானவர்கள் அறிவிப்பு செய்வார்கள்.
49. அவருக்கு நரகத்தின் வாயில்கள் மூடப்படும்.
50. அவரின் ரூஹை கைப்பற்றுவதற்காக மலக்குல் மௌத் அவரிடம் நபிமார்கள், இறைநேசர்களிடம் வரும் உருவத்தில் வருவார்கள்.
51. ரூஹ் பிரியும்போது நபி (ஸல்) அவர்களின் கௌஸர் என்னும் தடாகத்திலிருந்து ரஹீக்கும் மக்தூம் என்னும் நீரை பருகும் பாக்கியம் கிடைக்கும்.
52. முடி நரைப்பது தாமதமாகும்.
53. சுவாசத் தடை நீங்கும்.
54. (மிஸ்வாக் செய்வது) பாதி ஈமானாகும்.

(அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹஸ்ஸான் இப்னு அதிய்யா (ரளி) அவர்கள்)

55. வாய் நறுமணமடையும். (ஹள்ரத் அபூதர்தா (ரளி) அவர்கள்)
56. பற்களின் மஞ்சனிப்பு நீங்கும்.
57. வாயின் துர்நாற்றம் நீங்கும். (ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்)
58. குடலை சீராக்கும். (ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்)
59. ஷைத்தானை கோபமூட்டும். (ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள்)
60. பசியை ஏற்படுத்தும். (திப்பே நபவீ)
61. செல்வம் பெருகும்.
62. முதுகை வலுப்படுத்தும்.
63. இறைவழிபாட்டில் உடல் வலிமையை ஏற்படுத்தும்.
64. மிஸ்வாக் செய்பவர் உலகத்தை விட்டுப் பிரியும்போது பரிசுத்தமடைந்தவராக செல்கிறார்.
65. பள்ளியிலிருந்து வெளியேறும்போது வானவர்கள் அவரை வழியனுப்புகின்றனர்.
66. நன்மைகள் பன்மடங்காகும்.
67. வயிற்றில் நீர் தேங்குவதை நீக்கும்.

(அறிவிப்பாளர் : ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள், ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள், ஹள்ரத் அதா (ரளி) அவர்கள்

(நூல் : அன்வாருல் பாரி, பாகம் - 6, பக்கம் 189, 190 உம்தத்துல்காரி)

# அன்னை ஹஸ்ரத் கதீஜா (ரளி) அவர்கள்

எஸ்.தாஹிரா பானு

அன்னை கதீஜா அவர்கள் இஸ்லாத்தை ஏற்ற முதல் பெண்மணி!
தீனை கண் போல காத்த கண்மணி!
செல்வ செழிப்பு மிக்க சீமாட்டியாய் வாழ்ந்தவர்!
இல்லார்க்கு அள்ளி அள்ளி வழங்கியவர்!
கதீஜா அம்மையை ஈர்த்தது நபியவர்களின் நற்குணம்!
விரும்பி முடித்துக் கொண்டார்கள் திருமணம்!
நபியவர்களின் முதல் மனைவி!
வாழ்க்கைக்கு ஏற்ற உற்ற துணைவி!
நாயகத்தை விட வயதில் மூத்தவர்!
சிப்பிக்குள் முத்து போல் அவரைக் காத்தவர்!
அன்னை கதீஜா அவர்கள் பரிசுத்தத்தின் மறுபெயர்!
அவருக்குண்டு தாஹிரா என்ற சிறப்பு பெயர்!
ரசூலுல்லாஹ்வுக்கு எப்போதும் கொடுப்பார் அரவணைப்பு!
வரும் சோதனைகளை தடுப்பார் கரம் இணைத்து!
அனைவரிடமும் பழகுவதில் மென்மை!
ஏகத்துவத்துக்காகவே உழைத்த பெண்மை!
இவர் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றவர் என்பது உண்மை!
அன்னை கதீஜா அவர்கள் நபியவர்களுக்கு ஒப்பற்ற துணை!
நற்குணங்கள் மிகுந்த ஈடற்ற இணை!
அவரின் வாழ்க்கை பெண்களுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டு!
பெண்ணே! நற்குணம் என்னும் மாலையை தொடுத்துக்கட்டு!

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
செ.திவான் M.A.,M.Phil.,

## நா.ஜிதேந்திரன்

எனது நண்பர் முனைவர் நா.ஜிதேந்திரன் அவர்கள் "இந்திரா பார்த்தசாரதி, கிரிஷ் கர்னாட் நாடகங்களில் இருத்தலியல் ஒப்பாய்வு" என்னும் முனைவர் பட்ட ஆய்வேட்டை பிரியத்திற்குரிய பேராசிரியர் சிவசு அவர்களின் பதிப்புரையோடு 2017இல் 272 பக்கங்களில்வெளியிட்டுள்ளார். அதில் பக்கம் 22, 23, 197 - 204இல் கிரிஷ் கர்னாட்டின் துக்ளக் நாடகக் கதையை சுருக்கமாகச் சொல்லியுள்ளார்.

## வஞ்சப் புகழ்ச்சி

கிரிஷ் கர்னாட்டின் துக்ளக் நாடகம் அன்றைய அரசியல்சூழ் நிலைக்காக வஞ்சப் புகழ்ச்சி (Ironic)யாக எழுதப்பட்டது.

துக்ளக் நாடகத்தை நன்கு ஊன்றிப் படிப்பவர்கள் துக்ளக்கின் கனவுகள் அறிவுப்பூர்வமானவை என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் கிரிஷ் கர்னாட் எழுதிய துக்ளக் குறித்த நல்ல பகுதிகள் தமிழில் மொழி பெயர்க்கப்படும்போது சொல்லப் படவில்லை. துக்ளக் மீது குறை காண்பவர்கள் தொடர்கிறார்கள்.

## செங்கிஸ்கான்

மன்னாதி மன்னன் என்று பொருள்படும் செங்கிஸ்கான் (கி.பி.1162 - 1227) மங்கோலியர் தலைவராக மாறினார். கி.பி.1211இல் சீனாவின் மீது படையெடுத்து பல பகுதிகளை வென்றான். 1227இல் மறைந்தான். கி.பி.1234இல் கின்களின் ஆதிக்கம் சீனாவில் முடிந்தது.

## குப்ளாய்கான்

செங்கிஸ்கானின் பேரன் குப்ளாய்கான் - KublaiKhan (1216-1294) 1259இல் பட்டத்திற்கு வந்தான். தற்போதைய பீகிங் அருகே தனது தலைநகரத்தை ஸ்தாபித்து சால்கானின் நகரம் எனும் பொருள் தரும் கான்பலீக் (Khanbalig) என்ற நகரிலிருந்து ஆட்சி புரிந்தான்.

## ஒன்பதாம் நூற்றாண்டு

ஒன்பதாம் நூற்றாண்டிலே சீனாவில் அடையாள நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், மங்கோலியப் பேரரசர் குப்ளாய்கான் காலத்தில் சீனாவில் (ரூபாய்) அடையாளப் பணம் பெருமளவில்

புழக்கத்தில் வந்தது 13ஆம் நூற்றாண்டில் தான்.

**பெர்சியா - ஈரான்**

ஃபார்ஸ் என்ற பிரதேசம் இருந்ததால் அதன் பெயரில் (பார்சியா) பேர்சியா) பாரசீகம் என்ற பிரதேசம் ஏற்பட்டது. அதுவே ஈரான் என்று தற்போது அழைக்கப்படுகிறது.

**காய்கத்துகான்**

பெர்சியாவில் கி.பி.1293இல் ஆட்சி செய்தவர் காய்கத்துகான் (KaikhathKhan). இவரது ஆட்சியில் பெர்சியாவின் அடையாள நாணய முறை சீனாவில் குப்ளாய்கான் வெளியிட்ட ரூபாய் நோட்டுக்கள் போல இருந்தது. இதில் குப்ளாய்கான் கொண்டு வந்த முறை வென்றது. காய்கத்துகான் கொண்டு வந்த முறை தோற்றது.

**கவனமான நடவடிக்கை**

அடையாள நாணயமுறை உலகத்தின் பல பாகங்களில் அக்காலத்திலேயே புழக்கத்திலிருந்து வந்தது. சீனாவில் குப்ளாய்கான் காகித்தாலான அடையாள நாணயத்தைப் புகுத்தினார். நாணயத்திற்கான காகிதம், மை ஆகியவற்றை மிகக்கவனமாகத் தேர்ந்தெடுத்தார். ஆகவே, மற்றவர்கள் அந்த அடையாள ரூபாயை அச்சிட முடியவில்லை.

இந்த இருவரின் முயற்சியையும் பற்றி இதற்குப்பின் இந்தியாவில் ஆட்சிக்குவந்த முஹம்மது பின் துக்ளக் அறிந்திருந்தார். எனவே, அடையாள நாணயத்தைப் புகுத்தினார். நாணய இயலின் வரலாற்றைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம்.

**நாணயங்கள்**

மனித சமூகம் பண்டமாற்று முறையிலிருந்து மாறி நாணயங்களை செலாவணிக்குப் பயன்படுத்தத் தொடங்கியது. உலக நாடுகளில் பலவற்றில் உலோக நாணயங்கள் பழங்காலத்தில் புழக்கத்தில் இல்லை.

**இயற்கைப் பொருட்கள்**

இயற்கையாக கிடைக்கும் பொருட்களே நாணயங்களாக பயன்படுத்தப்பட்டன.

**கோக்கோ விதைகள்**

மெக்ஸிகோ நாட்டில் வாழ்ந்த அசுடெஜ் மக்கள் கோக்கோ விதைகளை நாணயங்களாகப் பயன்படுத்தினர்.

**நாயின் பற்கள்**

நியூகினியா நாட்டில் சிறு மரத்துண்டுகளில் நாயின் பற்களைப் பதிய வைத்து காசாகப் பயன்படுத்தினர். சாலமன் தீவிலும் நாயின் பற்கள் நாணயமாகப் பயன்படுத்தப்பட்டன.

**பறவைகளின் இறகுகள்**

நியூஹெப்ரைட்ஸ் தீவில் அங்குள்ள அரிதான பறவைகளின் இறகுகளே நாணயங்களாக விளங்கின.

பசிபிக் தீவில் மரங்கொத்திப் பறவையின் இறகுகள் நாணயங்களாயின.

**பசு**

பாரதத்தில் ஆதி நாணயம் பசு தான்.

**மோதிரங்கள்**

எகிப்து நாட்டில் துவக்க கால நாணயங்கள் மோதிரங்களாகும்.

**சாவி - மண்வெட்டி - தேயிலை - கடற்கரை சோழிகள்**

சீனாவில் ஆதிகாலத்தில் சாவி, மண்வெட்டி, தேயிலை, கடற்கரை சோழிகள் காசுகளாகப் புழங்கப்பட்டன.

**அழகிய சிப்பிகள்**

ஆப்பிரிக்காவில் பல வண்ண அழகிய சிப்பிகள் நாணயங்களாகப் பயன்படுத்தப்பட்டன.

**இரும்பாலான கத்தி**

இரும்பாலான கத்தியை மத்திய ஆப்பிரிக்க மாந்தர்கள் பணமாகப் பயன்படுத்தினர்.

**வட்டப்பாறைகள்**

யாப்பில்எனும்பெயருடைய பசிபிக் வட்டப்பாறைகள், காசுகளாகச் செலாவணியில் இருந்தன.

**யானையின் வால்முடி**

ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் யானையின் வால் முடி பணமாக விளங்கியது.

**எருதுகள்**

கிரேக்க நாட்டில் துவக்கக் காலத்தில் எருதுகளே காசுகளாகக் கருதப்பட்டன.

**தோல்**

பிரான்ஸில் கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோல் நாணயமாகப் பயன்படுத்தப்பட்டது.

**நிலக்கரி**

இங்கிலாந்தில் நிலக்கரி பணமாக இருந்த காலமும் உண்டு.

**ஈயக்குண்டுகள்**

தாய்லாந்து நாட்டில் ஈயக் குண்டுகள் காசுகளாகவிளங்கின.

**மனித மண்டை ஓடுகள்**

போர்னியோ நாட்டில்மனித மண்டை ஓடுகள் பணமாகப் பயன்படுத்தப்பட்டன.

**சீட்டுக்கள்** (Playing Cards)

இராணுவ வீரர்கள் பயன் படுத்திய சீட்டுக்கள் கனடாவில் பணத் தட்டுப்பாட்டின் போது காசுகளாக வலம் வந்தன.

**கம்பிச் சுருள்**

சிரியாவில் கம்பிச் சுருள் காசாக இருந்ததுண்டு.

**உப்புக் கட்டிகள்**

எத்தியோப்பியாவில் உப்புக் கட்டிகள் காசாகப் பயன்படுத்தப்பட்டன.

**கை வளையங்கள்**

காங்கோ நாட்டில் கை வளையங்கள் காசாகப் பயன் படுத்தப்பட்ட காலமுண்டு.

**புகையிலை**

வர்ஜீனியாவில் புகையிலை காசாகப் பயன்படுத்தப் பட்டது.

(தொடரும்)

# கிருமிகளைத் தடுக்க கை கழுவுவோம்!

அசுத்தமான கைகளால் ஏற்படும் நோய்கள் பரவாமல் தடுக்க கை சுகாதாரம் முக்கிய மானது. கடைகளுக்குச் சென்று திரும்பிய பிறகு, தோட்ட வேலை செய்தல் போன்ற பல் வேறு நடவடிக்கைகளுக்குப் பிறகு பலர் கைகளைக் கழுவு வதைத் தவிர்க்கிறார்கள். நீங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பராமரித்தாலும், சத்தான உணவை உட்கொண் டாலும், இந்த அலட்சியம் நோய் களுக்கு வழிவகுக்கும். இதன் காரணமாக பெரும்பாலான மக்கள் நோய்வாய்ப்படு கிறார்கள்.

உங்கள் கைகளில் மூன்று மணிநேரம் வரை கிருமிகள் வாழ லாம். உங்கள் விரல் நுனிகளி லும், முழங்கைகளிலும் சுமார் 2 முதல் 10 மில்லியன் பாக்டீரியாக்கள் உள்ளன. கழி வறையைப் பயன்படுத்திய பிறகு கிருமிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகும். அழுக்குக் கைகள் கிருமிகளை உணவு மற்றும் பானங்களுக்குக் கடத் தும், கைகள் ஈரமாக இருக்கும் போது அதிக கிருமிகளைப் பரப்பும்.

## என்னென்ன நோய்கள் ஏற்படுகின்றன?

- சளி, காய்ச்சல், சின்னம்மை, மூளைக் காய்ச்சல் ஆகியவை இருமல் அல்லது தும்மலிலிருந்து வரும் நீர்த்துளிகள் மூலமாகவும் மோசமான கை சுகாதாரம் மூலமாகவும் பரவுகின்றன.
- வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகளுடன் இரைப்பை குடல் அழற்சியை வைரஸ் ஏற்படுத்துகிறது. குமட்டல், வாந்தி, வயிற்று வலி ஆகியவையும் ஏற்படும்.
- அழுக்குக் கைகளால் கையாளப்படும் அசுத்த மான உணவு மூலம் நோய் பரவுகிறது. இது கல்லீரல் பிரச்சனைகளுக்கு வழி வகுக்கிறது. மஞ்சள் காமாலை, வயிற்று அசௌகரியம், காய்ச்சல், சோர்வு போன்றவையும் ஏற்படும்.
- பாக்டீரியாக்கள் மேற் பரப்பிலிருந்து கண்களுக்கு எளிதில் பரவி எரிச்சலை ஏற்படுத்தும்.

சாப்பிடுவதற்கு முன் கைகளைக் கழுவுவதன் மூலம் கடுமையான தொற்று தடுக்கப்படுகிறது.

## கை கழுவுதல் நிலைகள்

- சுத்தமான ஓடும் நீரை உபயோகித்து கைகளைக் கழுவ வேண்டும்.
- உங்கள் கைகளின் மேற்பரப்பில் சோப்பைத் தேய்க்கவும்.
- கைகளின் பின்புறம், விரல்களுக்கு இடையே மற்றும் நகங்களுக்கு அடியில் குறைந்தது 20 விநாடிகளுக்கு சுத்தம் செய்யவும்.
- பிறகு ஓடும் நீரில் கைகளை நன்கு கழுவவும்.
- சுத்தமான துண்டு அல்லது காற்று உலர்த்தியைப் பயன்படுத்தவும்.

வழக்கமான கை கழுவுதல் நோய்ப் பரவலைத் தடுக்க உதவுகிறது. சோப்பு மற்றும் ஓடும் நீரில் குறைந்தது 20 விநாடிகள் கைகளைக்கழுவவும். சரியான கை சுகாதாரத்தைப் பராமரிப்பது உங்களையும், மற்றவர்களையும் பல்வேறு தொற்றுநோய்களிலிருந்து பாதுகாக்க எளிய, ஆனால் சக்தி வாய்ந்த வழியாகும். ஆரோக்கியமாகவும், பாதுகாப்பாகவும் இருக்க கை கழுவுவதை வழக்கமாக மாற்றிக் கொள்ளுங்கள்.

## நோய்களைத் தடுக்கும் கை கழுவுதல்

கை கழுவுதல் எளிதான மற்றும் குறைந்த செலவிலான செயல். மனித ஆரோக்கியத்தில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும். தினசரி கை கழுவதை ஒரு பழக்கமாக மாற்றுவதன் மூலம் குறைந்தது ஒரு டஜன் தொற்று நோய்களைத் தவிர்க்கலாம் என்பதை ஆய்வு அடிப்படையிலான சான்றுகள் நிரூபிக்கின்றன. குறிப்பாக வயிறு, தோல் மற்றும் சுவாசக் குழாய் தொடர்பான பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாக்க ஒரு நாளைக்குச் சில முறையாவது கைகளைக் கழுவுவதன் முக்கியத்துவத்தை மருத்துவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பெரும்பாலான நோய்த் தொற்றுகள் பாக்டீரியா மூலம் உருவாகுபவை. கைகளைச் சுகாதாரமாக வைத்திருப்பதன் மூலம் இரைப்பை, குடல் அழற்சி, நிமோனியா, பன்றிக் காய்ச்சல் மற்றும் பிற காய்ச்சல்கள், கான்ஜுன்க்டிவிடிஸ், ஹெபடைடிஸ் ஏ (மஞ்சள் காமாலை) டைபாய்டு, காலரா, கடுமையான வயிற்றுப் போக்கு, பேசிலரி வயிற்றுப் போக்கு, சிரங்கு, மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களைத் தவிர்க்கலாம்.

## எப்போது கைகளைக் கழுவ வேண்டும்?

கை கழுவுதல் நிலைகளைப் பின்பற்றுவதைத் தவிர, சரியான நேரத்தில் கைகளைக்கழுவுவதில் கவனம் செலுத்தவது முக்கியம்.

கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் உங்கள் கைகளைச் சுத்தம் செய்வது நல்லது.

- உணவு தயாரித்தல் அல்லது சமைப்பதற்கு முன்.
- உணவு, தண்ணீர் அருந்துவதற்கு முன்.
- நோய்வாய்ப்பட்ட அல்லது தொற்று நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரைப் பராமரிப்பதற்கு முன்னும், பின்னும்.
- வெட்டு, தீக்காயம் அல்லது காயத்திற்குச் சிகிச்சையளிப்பதற்கு முன்னும் - பின்னும்.
- பக்கவாட்டுக் கம்பிகள் போன்ற பொது இடங்களில் எதையும் தொடுவதற்கு முன்னும், பின்னும்.
- மருத்துவரின் அலுவலகம், மருத்துவமனை, நர்சிங் ஹோம் அல்லது வேறு ஏதேனும் சுகாதார அமைப்பிற்குள் நுழைவதற்கு முன்னும், பின்னும்.
- கைபேசியைத் தொடுவதற்கு முன்னும், பின்னும்.
- கண் சொட்டு மருந்துகள் அல்லது மாத்திரைகள் போன்ற எந்த மருந்துகளையும் எடுத்துக் கொள்வதற்கு முன்.
- கழிப்பறையைப் பயன்படுத்திய பிறகு.
- குப்பை அல்லது அழுக்கைத் தொட்ட பிறகு.
- இருமல், தும்மல், மூக்கைச் சிந்தினால்.
- விலங்கு, விலங்குக் கழிவு அல்லது கால்நடை தீவனத்தைத் தொட்டபிறகு.
- டயாப்பர்களை மாற்றிய பிறகு அல்லது மற்றவர் உடல் கழிவுகளை சுத்தம் செய்தபிறகு.
- பணம் அல்லது இரசீதுகளைக் கையாண்ட பிறகு.
- பார்சல்கள் அல்லது டெலிவரிகளை ஏற்றுக் கொண்டபிறகு.

## கிருமிகள் எங்கே இருக்கும்?

உணவு உட்கொள்வதற்கு முன், மலம்கழித்தபின், மூக்கைச்

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்
94420 56547

சுத்தம் செய்தபின் எனப் பல் வேறு செயல்களை கைகளைக் கொண்டு செய்கிறோம். இது போன்று செய்யும்போது பல நோய்களை இது ஏற்படுத்தலாம். இது போன்ற செயல்களைச் செய்திடும் போது சோப்பைக் கொண்டு சுத்தமாகக் கழுவ வேண்டும்.

- கிருமிகள் நகங்களின் கீழ் மற்றும் தோலின் மேற்பரப் பில் தங்கியிருக்கும். இது போன்ற செயல்களுக்குப் பின் மிக முக்கியமாகச் சமைப்பதற்கு முன், கைகளை (கை மணிக் கட்டிற்கு மேல், விரல் இடுக்குகள் மற்றும் நக இடைவெளிகள்) சோப்பு கொண்டு கழுவுவது பல நோய்கள் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த உதவுகிறது.
- நகங்களை வெட்டாமல் இருப்பதால் காயம் ஏற்படு கிறது. நகங்களை முறை யாக வெட்ட வேண்டும். நகங்களைக் கடிப்பது மற்றும் மூக்கை நோண்டுதல் போன்ற வற்றைத் தவிர்க்க வேண்டும்.
- குழந்தைகள் மண்ணில் விளையாடுவார்கள். எனவே, உணவிற்கு முன் கைகளைக் கழுவ கற்பிக்க வேண்டும்.
- இரத்தம், மலம், சிறுநீர் மற்றும் வாந்தி போன்ற வற்றைத் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.

## நாவை பாதுகாப்போம்

ஆதமுடைய மகன் காலை நேரத்தை அடைந்ததும், அவனது உடம்பின் எல்லா உறுப்புகளும் நாவிடம், “நீ எங் களுடைய காரியத்தில் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்; ஏனெ னில், எங்களுடைய காரியங்கள் உன்னுடன் தான் இணைந் துள்ளன. நீ நேராக இருந்தால் நாங்களும் நேராக இருப்போம். நீ வளைந்து விட்டால் நாங்களும் வளைந்து விடுவோம். பிறகு அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டிவரும்” என்று மிகவும் பணிவுடன் வேண்டுகின்றன என்று நபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஸயீத் குத்ரி (ரளி) அவர்கள்.
(நூல் : திர்மிதீ, முன்தகப் அஹாதீஸ் பக்கம் 758)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.சைய்யது சுலைமான்,**
தென்காசி.

தெரிந்து கொள்ளுங்கள்

# நாடுகளின்

## இன்றைய பெயர்களும் பழைய பெயர்களும்

| புதிய பெயர் | பழைய பெயர் |
|---|---|
| 01. மலேசியா | மலாயா |
| 02. சிங்கப்பூர் | தெமாசிக் |
| 03. சீனா | கத்தே |
| 04. ஸ்ரீலங்கா | இலங்கை |
| 05. பிரான்ஸ் | கோல் |
| 06. தாய்லாந்து | சியாம் |
| 07. மியன்மார் | பர்மா |
| 08. காணா | கோல்கோஸ்ட் |
| 09. நெதர்லாந்து | ஹோலந்து |
| 10. கிழக்கு லெஸ்தே | கிழக்குந்த தீமோர் |
| 11. புருணை தாருஸ்ஸலாம் | புருணை |
| 12. வங்காளதேசம் | கிழக்குப் பாகிஸ்தான் |
| 13. தைவான் | ஃபோர்மோஸா |
| 14. பாகிஸ்தான் | மேற்குப் பாகிஸ்தான் |
| 15. ரஷ்யா | சோவியத் யூனியன் ரஷ்யா |
| 16. ஜப்பான் | நிப்பன் |
| 17. ஈராக் | பெர்சியா |

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## பலஸ்தீனர்களுக்காக துஆ செய்வோம்!

சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டும், கொடுமையான முறையில் கொல்லப்பட்டும், கொடும் துயரையும், துன்பத்தையும் தொடர்ந்து அனுபவித்து வரும் பலஸ்தீன மக்கள் முழுமையான சுதந்திரம் பெற்று நிம்மதி பெருமகிழ்வு வாழவும், இஸ்ரேல் எனும் இழிவான நாடு அழிந்து தொலைந்து போகவும் அனைவரும் துஆ செய்வோமாக!

**- குர்ஆனின் குரல் குழுமம்.**

பாத்திமா - திருச்சி; கதீஜா - தஞ்சாவூர்; ஃபாருக் ஆடிட்டர் - உடுமலைப்பேட்டை; முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; மெஹ்ராஜ் பேகம் - திருப்பூர்; எம்.ஷானவாஸ் - சவூதி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; சந்தா எண் F 595 - திருச்சி; பி.சுபைதா - சோழமாதேவி; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; சந்தா எண் H1759 - கோயம்புத்தூர்; த.பா.பீர்பாத்து - சேலம்; பிலால் - சேலம்; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; அன்சாரி - உடுமலை; மும்தாஜ் - தஞ்சாவூர்; முஹம்மது சிராஜ்தீன் - விழுப்புரம்; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; குரல் வாசகர், குரல் வாசகி - சத்தியமங்கலம்; எம்.மதீனா பேகம் - கோயம்புத்தூர்; ஜே.ஆஸிக் ஹுஸைன், ஜே.அஸ்லம் ஹுஸைன் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; அ.ஜெய்புனிஷா - திருச்சி; அ.ஷமீமா - விழுப்புரம்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; என்.காளிங்கராஜ் - பொள்ளாச்சி; கா.ரபீக்ராஜா,ஷபீனா,ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; பா.ஹாஜி முஹம்மது -

சேந்தமங்கலம்; எஸ்.தில்ஷாத்,எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசிர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - திருச்சி; எஸ்.சுல்தான் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; குரல் வாசகர் - சேந்தமங்கலம்; ஐ.அப்துல் ரஜாக், மும்தாஜ் - சென்னை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; எம்.அமீர் உசேன், சகீனா பானு - கோவை; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுஸைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுஸைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - சென்னை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; ஹமீதா புஸ்ரா, அப்துல் காலிக் - ஈரோடு; முஹம்மது முக்தார் கான், முஹம்மது கஃபில் கான் - புகளூர்; எஸ்.எம்.முஜீபுல்லாஹ் - சத்தியமங்கலம்;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹுமு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...

# இதயம் பேசுகிறது!

வல்ல இறைவனின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும், வாசக நேயர்களின் துஆவினாலும் எனது மகளுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. துஆ செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் நன்றி கலந்த மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முஹம்மது சிராஜுதீன், விழுப்புரம்.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

முகவை மாவட்டம் பார்த்திபனூர் அயிரகுஞ்சு அப்துர் ரஹ்மான் ஆலிம் அவர்களின் அருமை பேரரும், ஜனாப் அவுரங்கஜீப் அவர்களின் மகனாரும், முதுகுளத்தூர் மர்ஹூம் மவ்லானா உமர் ஜஃபர் (ரஹ்) ஆலிம் அவர்களின் அருமை மருமகனாருமான மவ்லானா முஹைதீன் அப்துல் காதிர் ஆலிம் ஃபைஜி அவர்கள் 15.10.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி ஆத்தூர் மர்ஹூம் ஹாஜி S. M. ஹனீப் (ரஹ்) அவர்களின் அருமை மகளாரும், பூனைக் கண்ணன் மர்ஹூம் ஹாஜி ஹபீப் ராஜா (ரஹ்) அவர்களின் மூத்த மருமகளாரும், மர்ஹூம் ஹாஜி பஷீர் (ரஹ்) அவர்களின் அருமை துணைவியாருமான அல்ஹாஜ்ஜா நஜ்முன்னிஷா அவர்கள் 19.10.24 அன்றும்,

தஞ்சாவூர் மானம்புச்சாவடி மர்ஹூம் சையத் அப்துல் ஷுக்கூர் (ரஹ்) அவர்களின் அருமை மகனாரும், தஞ்சை மாவட்ட அரசு டவுன் காஜி மவ்லானா செய்யது காதர் ஹுசைன் ஹள்ரத் அவர்களின் அக்கா மகனாரும், மானம்புச்சாவடி பள்ளிவாசலின் நிர்வாக ஆலோசகருமான ஜனாப் A. சையது அஹமது உசேன் (Retd., சமூக நலத்துறை உயர் அதிகாரி) அவர்கள் 19.10.24 அன்றும்,

தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபையின் மூத்த தலைவர் மவ்லானா அல்ஹாஜ் O.M.அப்துல் காதிர் பாகவி ஹள்ரத் அவர்களின் மூத்த மகனார் ஜனாப் அஹ்மது அவர்கள் 22.10.24 அன்றும்,

திருச்சி, K.K.நகருக்கு அருகிலுள்ள குறிஞ்சி நகர் மஸ்ஜிதே அஹ்மது பள்ளிவாசலின் தலைமை இமாம் ஷுஜாஅத் அலீ ஹஸனி ஹள்ரத் அவர்களின் அருமைத் தகப்பனாரும், ஆரணி பாவாவின் கலீஃபாவும், ஆரணி தாருல் உலூம் ரஷீதிய்யாவில் 25 ஆண்டுகள் பணிபுரிந்தவருமான சமயபுரம் அல்ஹாஜ் ஷவ்கத் அலீ அவர்கள் 22.10.24 அன்றும்,

மதுரை மாவட்டத்தின் மூத்த ஆலிம்பெருமகனாரும், மதுரையின் பல பள்ளிவாசல்களில் இமாமாக பணியாற்றியவரும், மதுரை டவுன்ஹால் ரோடு பள்ளிவாசல் இமாம் மவ்லானா முஹம்மது ரஃபீக் மிஸ்பாஹி ஹள்ரத் அவர்களின் மாமனாருமான மவ்லானா இக்பால் சேட் ரஹ்மானி ஹள்ரத் அவர்கள் 27.10.24 அன்றும்,

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு மவ்லானா அல்ஹாஜ் மர்ஹூம் K.A. அப்துர்ரஹ்மான் (ரஹ்) ஹள்ரத் நவ்வரல்லாஹு மர்கதஹு அவர்களின் அருமைத் தாயார் ஜனாபா தையிபா பீவி அவர்கள் 27.10.24 அன்றும்,

தேனி மாவட்டம் கம்பம் மர்ஹூம் E.A. அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்களின் அருமை மகனாரும், கம்பம் நகர ஜமாஅத்துல் உலமா சபையின் தலைவர் மவ்லவீ A.Z. முஹம்மது ஹாரிஸ் அவர்களின் அருமைத் தகப்பனாரும், கம்பம் அஜீஸிய்யா பள்ளிவாசலின் நிறுவனர் மற்றும் தலைவருமான அல்ஹாஜ் E.A.A. ஜலாலுதீன் அவர்கள் 25.10.24 அன்றும்,

பள்ளபட்டி அரவக்குறிச்சி மர்ஹூம் அல்ஹாஜ் முஹம்மது இப்ராஹீம் இராவுத்தர் (ரஹ்) அவர்களின் நான்காவது மகனார் அரவக்குறிச்சி அல்ஹாஜ் ஊட்டி லியாகத் அலீ அவர்கள் 09.11.24 அன்றும்,

பள்ளபட்டி ஆசியார் மர்ஹூம் ஆம்ஸா ஹாஜியார் (ரஹ்) அவர்களின் அருமை மகனாரும், பள்ளபட்டி ஹாஜியார் மளிகை, மம்மிடாடி அல்ஹாஜ் சிராஜுதீன் மற்றும் அல்ஹாஜ் அப்துர் ரஹ்மான் ஆகியோரின் சகோதரருமான ஜனாப் பீர் முகம்மது அவர்கள் 11.11.24 அன்றும்,

மதுரை மேலமாசி வீதி பள்ளிவாசலில் வாட்ச்மேனாக பணி புரிந்த ஜனாப் நைனார் முஹம்மது அவர்கள் 11.11.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

## பெரும் பாவங்கள்!


நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ்வுக்கு இணைவைப்பது, கொலை செய்வது, பெற்றோரைப் புண்படுத்துவது ஆகியன பெரும் பாவங்களாகும்" என்று கூறிவிட்டு, "பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவத்தை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா ?" என்று கேட்டார்கள். "பொய் பேசுவது அல்லது பொய் சாட்சியம் மிகப் பெரும் பாவமாகும்" என்று கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி : 5977)

# வாசகர் வட்டம்

"அயோக்கியத்தனத்தின் உச்சக்கட்டம்" தலையங்கம் அருமை. அரசியலமைப்பு சட்டம் சாசனத்தின்படி ஆட்சிசெய்வேன் என்று உறுதி கூறி பொறுப்பேற்றுள்ள அஸ்ஸாம் முதல்வரின் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது. அது மனிதாபிமானமற்ற கொடும் செயல். மத்திய அரசு தனது இஷ்டத்திற்கு செயல்படுவதால் இதனைக் கண்டும் காணாமல் உள்ளது. அரசியல் அளவில் அவர்களை வீழ்த்துவதே இதற்கு பரிகாரம்.

மவ்லவீ மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி அவர்கள் "ஒருவன்" என்ற தலைப்பில் குல்ஹுவல்லாஹு அஹது சூராவைப் பற்றி ஹதீஸ்கள் குறிப்பிட்டு சுமார் 10 பக்கங்களில் விளக்கமாக எழுதியிருந்தது அருமை. கட்டுரையாளருக்கு அல்லாஹ் மென்மேலும் கல்வி ஞானத்தைத் தந்தருள்வானாக! அதோடு நாமும் தொழுகையிலும், மற்ற வசதியான நேரங்களிலும் அந்த இக்லாஸ் சூராவை அதிக மதிகமாக ஓதி அதிக நன்மைகளைப் பெறுவோமாக!

பா. ஹாஜி முஹம்மது,
சேந்தமங்கலம்.



தலையங்கம் படித்தேன். சங்கிகளால் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம்களின் அடையாளச் சின்னங்களான பள்ளிவாசல், மதரஸாக்களுக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் துயரங்கள் வேதனையளிப்பதாக உள்ளன. இந்நிலையிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

ஜெ. முஹம்மது யூசுப்,
பண்காட்டூர்.

நவம்பர் மாத இதழில் மவ்லானா மு.முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி ஹள்ரத் எழுதிய "ஒருவன்" கட்டுரை மிக அருமையாக இருந்தது. கட்டுரையை திரும்பத் திரும்ப படித்து பரவசமானேன். "அல் இக்லாஸ்" சூரா சிறியதாக இருந்தாலும் அதற்கு எத்துணை சிறப்புகளும், மகிமைகளும் இருக்கின்றன. சுபஹானல்லாஹ்! ஆகவே நாமும் இக்லாஸ் சூராவை ஓதி இறையருளைப் பெறுவோம். இதுபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு வருகின்ற குர்ஆனின் குரலுக்கு பாராட்டுக்கள்!

**கா.முஸ்திரி பேகம்,**
**மதுரை–20.**

# அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு...!

- ஜி.இல்யாஸ், சேலம் - 6.

இந்த மாதம் குர்ஆனின் குரலில் வந்த "அயோக்கியத்தனத்தின் உச்சகட்டம்" தலையங்கத்தில் மத்தியில் ஆளும் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் நடைபெறுவது பற்றியும், முஸ்லிம்கள் மீது மிகக் கடுமையான முறையில் தாக்குதல் நடத்துபவர்களுக்கு சங்கி அரசில் உயர் பதவியளிக்கப்படுவது பற்றியும் தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தன.

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 36 வருடங்கள் கழித்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் பணிபுரிந்த ஆரம்பக் காலங்களில் மற்ற துறைகளில் கெஜட்டர் ரேங்கில் உயர் பதவியில் நம் முஸ்லிம் சகோதரர்கள் பணிபுரிந்து வந்தார்கள். தற்போது எல்லாத் துறைகளிலும் முஸ்லிம்கள் அரிதாகவே உள்ளார்கள். படிப்பு சம்பந்தமாக இன்னும் நம் முஸ்லிம் மக்களுக்கு சரிவர விபரம் தெரிய வருவதில்லை. வியாபாரம் என்ற ஒரே நோக்கில் குறிக்கோளாக உள்ளார்கள்.

நான் சில நாட்களுக்கு முன்பு கோவை சென்றிருந்தேன். அங்குள்ள பெரிய பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையில் சமுதாயத் தலைவர் ஒருவரின் பயான் கேட்டேன். அவர் பயானில் கோவையில் நடைபெற்ற பழைய கெட்ட சம்பவத்தால் இன்னும் பல முஸ்லிம்கள் சிறையில் இருப்பதாகவும், அவர்களை வெளியே கொண்டு வர முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை என்றும், தமிழ் நாட்டில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞராக ஒரே ஒரு முஸ்லிம் மட்டும்தான் உள்ளார் என்றும், நம் மக்களுக்கு, போதிய படிப்பறிவு இன்னும் வரவில்லை என்றும் கூறினார்.

சங்கி அரசு கடந்த பத்தாண்டுகளாக திட்டம் போட்டு முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது. மேலும், அனைத்து துறைகளின் உயர் பதவியிலும் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்களே நியமிக்கப்படுகிறார்கள். முஸ்லிம்கள் இந்த மண்ணில் இருக்கக் கூடாது என்று திட்டம் தீட்டி செயல்படுகின்றனர். எனவே, முஸ்லிம்களுக்கு போதிய விழிப்புணர்வு வழங்கி, மாணவ மாணவிகள் அரசுத் துறையில் உயர் பதவியில் சேர திட்டம் தீட்டி செயல்பட வேண்டும். மேலும் நம் பிள்ளைகள் அரசு சம்பந்தமான துறைகளில் சேர விழிப்புணர்வு வழங்க வேண்டும்.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் விடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்






No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

Ulama®

LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS



Follow us on
ULAMA FASHION

Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India